80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
 திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-9.	சென்னை பவ௵ ஆவணி௴ 1௳	இதழ் 101.
Vol. 9.	1934-ம்௵ ஆகஸ்டு௴ 15௳	No. 101.



"காற்று நுழையாத இடமில்லை" என்பது பழமொழி. அந்தக் காற்றும் சுமார் நாற்பது ஐம்பது மைல் உயரத்திற்கு அப்பால் இல்லை என்பது கலாவிற்பன்னர் துணிபு. சர்வ வல்லமையுடைய ஸர்வேசுவரனுடைய பெருமையோ எங்கெங்கும் விளங்குகின்றது. தருணத்தில் காப்பது கருணையங்கடவுளின் கடமையேயன்றோ! அகதிக்குத் தெய்வமே துணையென்பார். ஆனையைக் காத்தான், துரோபதையைத் துயர் தீர்த்தான் என்று புராண கோடிகள் புகழ்வதன் பொருளுமீதன்றோ? சர்வேசுவரன், தீனபந்து, பக்த வத்ஸலன், பரமதயாளன்; எங்கெங்கும் மறைந்துறைந்து அங்கங்கே அருள் சுரந்து பொங்குதுயரம் போக்கடித்து அங்கை யபய மளித்தருளும் அருளாளன், என்றல்லவா அனைவராலும் கொண்டாடப்படுகிறார். நம் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாது, நம் மனதிலும் வாக்கிலும் மறைந்து நின்ற மாயவன் பெருமையைப் பேசுவதை 'மறை' யென்று கூறுவதில் யாதும் வழுவில்லை; மாயை விளைப்பானை 'மாயவன்' என்று கூறுவதிலும் யாதும் குறைவில்லை. உள்ளவனாய், இல்லவனாய், நல்லவனாய், பொல்லவனாய் எல்லாம் செய வல்லவனாய்ப் பலவகைப்பட்ட அலகிலாச் சோதியை வேதமே காணாது

"உறுமுகிறாயா?—உறுமு! உறுமு!! உன் உறுமுதல் அடங்கியபிறகு நான் வருகிறேன். இப்பொழுது எனக்கு வேலை அதிகமாதலின் வெளியிற் செல்லவேண்டியிருக்கிறது அதனால் உன் உறுமுதலைக் கவனிக்க நேரமில்லை."

வீதியில் விழிக்க, அற்பராகிய நாம் அவன் பொற்பை யெங்ஙனம் உணரவல்லோம்!

ஃ

"பக்தியே முக்தி கொடுக்கும் யுக்தி மார்க்கம்" பக்தியின் வன்மைக்கு அளவு கிடையாது. பக்தியே மானிடர்க்குப் பரம சாதனம். பக்தியே திக்கற்ற உயிருக்கு ஒப்பற்ற துணையாவது. நம்மைத் தூக்கிக்கொண்டு நாதன்பால் பறந்து செல்லவைப்பது பக்தியேயாகும். ஜபன்தன்னோடு அன்பர் அணையச் செய்வதும் பக்தியே! அநித்திய ஜீவிகளாகும் நம்மை நித்தியப் பொருளோடு ஒத்துப்போகச் செய்வது பக்தியேயாகும். பரப்ரம்ஹத்தைப்போலவே வரம்பற்றது நம் பக்திப்ரேமை யாதிய உணர்ச்சியே. ஞானமில்லாத பக்தி 'மூடபக்தி' யென்னப்படுகிறது. நாம், பக்தியில்லாத ஞானத்தை 'உபயோகமில்லாத உணர்வற்ற ஞானம்' என்று கூறலாகும். பக்தி மாத்திர மிருந்து ஞானமில்லாத மூடன் இவ்வுலகஞானமில்லாததால் இங்கு இகழப்படுவானே யன்றி, பகவானுக்கு அவனிடம் அருளுண்டாகு மென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. பக்தியில்லாது ஞானம் மாத்திர முடையவனென்பான், இவ்வுலக ஞானம் உடையவனே யன்றி, வேறொன்று மாய்க் காணுமையின், அவன் இங்கு நன்கு மதிக்கப்பட்டாலும், கடவுள் அருளைக் கனவிலும் பெருன். 'பக்தி' என்பது உண்மைப் பக்தியாயின் 'மூடபக்தி' யென்பது கிடையாது. அவ்விதமே, 'ஞானம்' என்பது உண்மையான ஞானமாயிருப்பின், உணர்வற்ற ஞானம் என்று சொல்லுதலும் ஆகாது.

ஃ

"இந்திரிய நிக்கிரகம் என்பதேன்ன?" இந்திரிய நிக்கிரகம் செய்வதென்றால், பெண்மக்களைத் தூற்றிக்கொண்டு திரிவதன்று; வெறுத்துத் துவேஷிப்பதுமன்று. கண்ணைக் குருடாக்கியும், காதைச் செவிடாக்கியும், மனதைக் கல்லாக்கியும் மாண்டொழிவதன்று. கெட்ட வழிக்குச் செல்லாமல், நமது இந்திரியங்களை நல்ல முறைமையில் நடத்துவதால், பக்திப்ரேமையாகிய சற்குணங்களைப் பெற்று, அவை விர்த்தி அடைய அடைய. உலகப்பற்றை முற்றிலும் ஒழித்து, நம் அன்பு முழுமையும் பகவானிடத்தே அர்ப்பணம் செய்து ஜீவன்முக்தராகி விடுவதற்குத் தக்கதோர் வழி யேற்படும். மனதைக் கொண்டே மனதை வெல்லவேண்டும். நம் மனமானது முத்தொழில் நடத்துகிறதென்பது மனோதத்துவ சாஸ்திர சித்தம். அவையாவன: எண்ணலும் (Thinking), உணர்தலும் (Feeling), கருமம் துணிதலுமே (Willing) யாம். இந்திரிய நிக்கிரகம் செய்யும் வழியில், எண்ணல் என்பதை இறைவனைச் சிந்திப்பதிலும், உணர்தல் என்பதை ஈசனை நம்முள்ளத்தே காணும் பக்குவத்தைப் பெறுவதிலும், கருமம் துணிதல் என்பதை நற்செயல்களையே நாடி நிற்பதிலுமாகக்கொண்டு மனத்தை யடக்கி மாக்ஷிமை பெறவேண்டும்.

ஃ

"இத்தாலிய புரோபஸர் மாக்கியோனே கூறுகிறர்":—எல்லா மதங்களையும், ஒரே அனுபவத்தைப் பல வழிகளில் எடுத்துரைக்கும் பல

சாக்ஷி கையெழுத்திடுவதில், பின்னுக்கு வழக்கு எற்படின் தான் சாக்ஷி சொல்வதற்காக அலையவேண்டிய தொல்லையுமிருக்கிறது. முதலிலேயே கையெழுத்திட மறுத்துவிடின் பிறகு எந்த வம்பு மனஸ்தாபமுமில்லை.

மாறுபட்ட பாஷைகளுக்குச் சமமாகக் கருதப்படவேண்டும். எந்தப் பாஷையும் தானுகவே பூரணமான உண்மையாகாது. அது எடுத்துரைக்கும் அபிப்பிராயம் சம்பந்தப்பட்ட மட்டில்தான் அது உண்மையாகும். எந்த மதமும் பூரணமாக உண்மை வாய்ந்ததாகாது. அது மத அநுபவத்தை எடுத்துரைக்கும் அளவுக்கே உண்மையானதாகும்.

ஃ

"அரியை அனுதினமும் நினை." ஸாக்ஷாத் பகவானுகிய கிருஷ்ணமூர்த்தியை ஸதா தியானிப்பவர்கள் நித்யமாகிய சுகத்தை யெய்துவர். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தம்மை ஆசிரயித்த பக்தகோடிகட்கு நேரும் ஸகல ஸங்கடங்களையும் நிவர்த்தி செய்து, இகலோகத்தில் நல்ல வாழ்வையும் பரலோகத்தில் ஸாம்பிராஜ்யத்தையும் கொடுப்பார். ஸபையில் பாஞ்சாலி தனக்கு நேரப்போகிற அவமானத்தை யெண்ணி இரண்டு கைகளையும் தூக்கி "கிருஷ்ண நீயே கதி" யென்றுள். உடனே பகவான், துகில் உரியுந்தோறும் உடை வளரும்படி அனுக்கிரகித்தார். கர்ணனிடம் ஸகல தர்மங்களையும் யாசித்து அவனுக்கு நற்கதி யளித்தார். பரம பாகவதர்களாகிய விதுரர். அக்குரூர், உத்தவர் முதலியோருக்கு ஞானேபதேசம் செய்தார். அர்ஜுனனுக்கு பகவத் கீதையை உபதேசித்து திவ்ய ஞானத்தை உண்டாக்கினர். பார்த்தஸாரதி யென்று பெயர் பெற்று விளங்கினர். மகானுபாவராகிய கிருஷ்ணபகவான் கோபிகாரமணனுய், கோபாலர்களுக்குத் தோழனுய், அசோதைக்குப் புத்திரனுய், ருக்மணிக்கு மனேஹரனுய், கம்ஸன்—சிசுபாலன்—முதலியோருக்கு எமனுய் இருந்து துஷ்ட நிக்கிரகமும் சிஷ்ட பரிபாலனமும் செய்து பூபாரத்தை நிவர்த்தி செய்தார். ஆதலின், நம்முடைய பாபம் தொலைந்து, புண்ணியம் மலிந்து, கஷ்டம் நிவர்த்தியாகி, ஸௌக்கியம் விருத்திகொள்ளவேண்டி கமலக் கண்ணனுடைய திருவடிகளை அவரது அவதார காலமான இந்த ஆவணிமாதத்தில் ஸதா தியானிக்கக் கடவோம்.

ஃ

"ஊரில் ஒருவனே தோழன்" என்று முன்னிருந்த பெரியவர் ஒருவர் தமது புத்திரனுக்குப் போதித்தாராம். அதன் தாற்பரியத்தை இங்கு ஆராய்ந்தறிவோம். உலகத்தில் நிச்சயமான சுகத்தையடைய விரும்புவோன் எல்லோரிடமும் நேசம் பாராட்ட ஸாத்தியப்படாது. எல்லோரையும் உற்ற நண்பர்களாகக் கொள்வது பிசகு. அவ்வாறு பிரீதி பாராட்டுவது, எல்லாக் காரியங்களையும் செய்து முடிக்கத் தொடங்கி, கடைசியில் ஒன்றையும் செய்யாமல் விட்டுவிடும் அறிவீனனுடைய செயலுக்கொப்பாகும். ஒருவரிடமும் பிரியமின்றி எல்லோரையும் வெறுப்பது மனிதர்களின் இயல்பல்ல. அவ்வித காரியத்தால் சுகமென்பது கிஞ்சிற்று முண்டாகாமல், பகவானுடைய கிருபையும் தூரமாகித் துன்பம் மேலிடும். ஈசுவரனுடைய பிரீதியை யடைவதற்காக அவரிடம் பக்தி செய்யவேண்டும். பக்தி யென்பது பிரேமை யில்லாதவர்கட்கு ஒருபோதும் ஸித்திக்காது. ஆகவே, யாரேனும் ஒருவரிடம்

ஹிந்து-முஸ்லிம்கள் ஒன்று சேரவேண்டுமென்கிருர்கள். அவர்களை என்றைக்கும் பிரித்துவைத்து லாபமடைய ஒரு சாரார் தனிபாக உள்ளார். இவர்களின் மயக்கில் வீழாத தெளிந்த அறிவுடையோரான ஒரு பிரிவினர் மட்டுமே ஒன்று சேரக்கூடும். மற்றெரு பிரிவினர் பிரிந்தே நிற்பர்.

பிரீதி விசுவாஸம் பாராட்டிய பின்னர் அத்தனை பிரீதி விசுவாஸத்தையும் ஈசுவரன் மீது வைப்பதும், வைக்கப் பழகுவதும் சுலபமான வழியாகும். மரம், மெழுகு, மண் முதலியவற்ருல் அச்சுகளைச் செய்து அவைகளின்மீது பொன் வெள்ளி முதலிய உயர்ந்த உலோகங்களை யுருக்கி விக்கிரகங்களாக வார்ப்பதுபோல், மனுஷ்யன் தன் நண்பனிடம் அல்லது பந்துவினிடம் வைக்கும் பிரீதியைப்போல் பகவானிடம் வைத்து, அவருடைய தயைக்குப் பாத்திரனுகிருன். ஆனல், ஒருவரிடமே பிரீதி வைக்க வேண்டுமென்று என் போதிக்கவேண்டும் என்பது கேள்வி. இதற்கு ஸமாதானம் சொல்லுவோம். பெண்ணுய்ப் பிறந்தவள் சில காலம் தாய்தந்தையரிடமும், விவாகமானபின் பர்த்தாவினிடமும், கணவனை யிழந்தபின் பிள்ளைகளிடமும் அடங்கி யிருக்கவேண்டுமென்று சாஸ்திரம் விதிக்கிறது. இதன் கருத்து யாது? பெண்கள் ஒவ்வொரு ஸமயத்துக்கும் தக்கபடி பெற்ருேர், புருஷர், புத்திரர் முதலிய பந்துக்களிடம் பிரீதி பாராட்டி அவர்களையே தனக்கு இரக்ஷகர்களாகக் கொள்ளவேண்டு மென்பதன்ருே? ஒரே காலத்தில் எல்லோரையும் இரக்ஷகர்களாக எண்ணி நடப்பதென்பது ஒருவன் ஏக காலத்தில் பல எஜமானர்களுக்கு வேலைக்காரனுயிருப்பதற் கொப்பாகும். அத்தகைய வேலைக்காரனுக்கு எல்லா எஜமானர்களிடமும் ஸமமான பிரீதி யுண்டாகாது. இதன்றி கிறிஸ்துவர்கள் ஒவ்வொரு புருஷனும் ஒவ்வொரு ஸ்திரீயும் முறையே ஒரு ஸ்திரீயையும் ஒரு புருஷனையும் வாழ்க்கை நண்பர்களாகக் கொள்ளவேண்டுமென்று விதித்திருக்கிருர்கள். இது உத்தமமான விதி. பல ஸ்திரீகளை விவாகம் செய்வோன் உண்மையான ஸந்தோஷமும் பிரீதியும் இன்னதென்றறியான். கேவலம் மிருகங்களைப்போல் போலிச்சுகமாகிய சரீர இன்பத்தை மட்டும் கவனித்து, மன வொற்றுமையாலுண்டாகும் மகத்தான உயர்ந்த உத்ஸாகத்தையும் உண்மையான மனேரம்மியத்தையும் கருதாதவர்கள் பசுக்களுக்கு ஸமானமாவர். ஒரு ஆற்றின் நீரைப் பல கால்வாய்களின் வழியே கொண்டு போவதால், அந்த ஆறு வரவரக் குறுகிப் பெருமையும், பிரவகிப்பின் வேகமும் குறைவதுபோல, ஒரு மனிதனுடைய பிரேமையைப் பலர் பங்கிட்டுக் கொள்வதால், அவனுடைய அன்பும், அந்த அன்பின் வேகமும் பெருக்கும் குறைந்து ஸமுத்திரமாகிய பகவானை யடைந்து கலக்கப்போதுமான ஜலம் எனும் பக்தி அற்று வற்றிப் போகிறது. இதனல் ஊரில் ஒருவனே தோழன் என்னும் வாக்கியம் உண்மையாயிற்று. ஆதலின், ஒவ்வொருவரும் பல தேவ வணக்கத்தில் சிந்தையைச் செலுத்தாமல் தமது இஷ்ட தெய்வமாகிய ஒரே இடத்தில் சித்தத்தைப் பூரணமாகச் செலுத்தி பக்தி செய்து முக்தி யடையக்கடவர்.

ஒரு பெரிய காரியம் ஏற்படும்போது அதைக் குடும்பத் தலைவரிடம் விட்டுவிடுவதே தக்கது. ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ஒரு காரியத்தைச் செய்ய குடும்பத்திலுள்ளவர்களுக்கு சக்தியுண்டு என்ற நிச்சய புத்தி குடும்பத் தலைவருக்கு ஏற்படவேண்டும். தான் வெளியூரில் இருந்தாலும், தன்னைத் தேடி வீட்டுக்கு வந்தவர்களை வீட்டினர் தக்கபடி உபசரிப்பரென்ற நம்பிக்கையிருக்கவேண்டும். குடும்பத்திலுள்ளவர்களுக்கு 'ஊழிய நிபந்தனைகளை' அதாவது அவரவர்கள் செய்யவேண்டிய காரியங்களைக் குடும்பத் தலைவர் நிர்ணயிக்க வேண்டுமேயன்றி, குடும்பத்திலுள்ளவர்கள் அதை நிர்ணயித்துவிடக் கூடாது. அதுதான் குடும்ப ஒழுங்கு.

பத்திராசிரியரின் வேண்டுதல்.

"அமிர்தகுண போதினி"க்கு இப்பொழுது ஒன்பதாவது வருட ஆரம்பமாகையால், இத்தருணத்தில் பின்னும் பல புதிய நேசர்களைத் தேடித்தந்து இப்பத்திரிகையை இன்றும் மேலோங்கச் செய்யுமாறு அன்பர்களை வேண்டுகின்றோம். இப்பத்திரிகையின் நோக்கமும் கருத்தும் இவையென்பது இத்தமிழ் நாட்டிலுள்ள குடும்பங்களிலும் பாடசாலைகளிலும் பூரணமாய்த் தெரிந்திருக்குமாதலால், அவற்றை மறுபடியும் எடுத்துரைப்பது அவசியமன்று.

இந்த "அமிர்தகுண போதினி"யைப் பிரசுரம் செய்யத் துவக்கி நடத்தி வருகிற இந்த ஒன்பது வருஷகாலமாக, இப்பத்திரிகை தமிழ்ச் செல்வர் செல்விகள் தங்களின் வீடுகளில் விநோதமாகப் படிக்கத்தக்கதாகவும், நீதி போதகமான இனிய புஸ்தகமாகவும் அமையும்படி, இதற்கு உதவி செய்து ஆதரித்து வருபவர்களான அனைவரிடத்திலும் நமது நன்றியறிதலை வெளியிட விரும்புகிறோம். அன்றியும், இப்பத்திரிகையின் அபிவிர்த்திக்கு அன்பர்களின் விசேஷ உதவிகளும், புதிய கையொப்ப நேசர்களும் மேலுமேலும் அதிகமாகக் கிடைக்குமென்றும் உறுதியாய் நம்புகின்றோம்.

இப்பத்திரிகையைப் படிப்பவர்க்கு இதிலுள்ள விஷயங்களில் விருப்பம்மட்டும் வருஷத்துக்கு வருஷம் அதிகமாகி வருகின்றதென, அங்கங்கிருந்து நமக்கு உபபலமாய் எழுதி வருகின்ற கடிதங்களாலும் ஆதரணைகளாலும் தெரிய வருகின்றதாயினும், பத்திரிகையின் அபிவிர்த்தி—அதன் ஆசிரியரும் பிரசுரகர்த்தரும் படுகின்ற பிரயாசைக்குப் போதுமானதாக இருக்கும்படி செய்யவேண்டியது நமது அன்பர்களின் கடமையா மென்பதையும் விநயமாய்த் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆதலின், இப்பத்திரிகையைப் படிப்பவர்கள், தந்தமக்கு அடுத்த இடங்களில் இது இன்னும் விசேஷமாய்ப் பரவும்படி சற்றுப் பிரயாசையும் ஏற்றுக்கொள்வார்களானால், யாவும் செழித்து 64-பக்கங்களிலிருந்து 80-பக்கத்திற்கு உயர்ந்து ஓங்கியிருக்கிற இந்த ஒன்பதாம் வருடத்தில் இப்பத்திரிகை இன்னும் மேன்மையாய் விளங்குவதற்குத் துணைபுரிந்ததுபோலாகும். அதனால் இதன் பிரசுரகர்த்தருக்கு இப்போது இருப்பதுபோல ஒரு செலவாகி வருத்தம் கொடாது, பத்திரிகையும் தன்னைத்தானே நடத்திக்கொள்ள வல்லதாகும். மேலும், நமது சக்திக்கு இயன்றவரையில் பாடுபட்டு இப்பத்திரிகையை நடத்திப் பிறர்க்குக் களிப்புண்டாக்க நாம் படுகிற பிரயாசை மட்டும் நன்கு மதிக்கப்படுமானால், அந்த நன்மதிப்பு புதுக் கையொப்பங்களைச் சேர்த்தனுப்பி அபிவிர்த்தி செய்வதன் மூலம் காட்டப்படுமானால், "அமிர்த குணபோதினி"யின் விஷயத்தில் நாம் செலவிடுகிற காலம் நல் விஷயத்தில் உபயோகமாகின்றதென்றே நினைத்து இன்புறலாகும். ஆதலின், அன்பர்கள் புதிய கையொப்பங்களைச் சேர்த்தனுப்ப வேண்டுகிறோம்.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு,

பத்திராசிரியர்.

“ அறிந்தவன் துணியலாம். ”

அமிர்தகுணபோதினி

பவ௵ ஆவணி௴ 1௳

துஞ்சத்து இராமாநுஜரின் கவித்துவம்.

மலையாள நாட்டின் பூர்வீக மஹா கவி.

ஆங்கில நாட்டு மேதாவிகளின் சரித்திரம் ஒரு விதம்; இந்திய பூமியில் வாழ்ந்து சென்ற மகா கவிகளின் ஜீவியம் வேறொரு வகையாகும். விசேஷமாக நம் தேசத்துப் பெரியோர்களின் வாழ்க்கை பகவத் ஸம்பந்தத்துடன் கலப்புற்றிருக்கும். துஞ்சத்து இராமாநுஜர் என்ற பெரியார் மலையாள பாஷையில் ஒப்புயர்வில்லாத மஹா கவியாவர். தமிழிற்குக் கம்பரையும், வடமொழிக்குக் காளிதாஸரையுஞ் சொல்லுவதுபோலவே, இவரையும் மலையாள பாஷைக்கு மேன்மையாகக் கொண்டாடுகின்றனர். துஞ்சத்து இராமாநுஜன் என்பது அவரது இயல்பான பெயராயினும், பிற்காலத்தில் துஞ்சத் தெழுத்தச்சன் என்றே அவரை அழைப்பதாயினர். எழுத்து - அச்சன் என்பது அவரது கவித்துவத்தினால் வந்த காரணப் பெயராகும். எழுத்திற்கு (அதாவது இலக்கியத்திற்கு) பிதா என்பது அதன் பொருள். துஞ்சம் என்பது மலையாள தேசத்தில் வீட்டுப் பெயரென்று வழங்குகின்ற ஓர் குடிப்பெயராகும். துஞ்சத்து இராமாநுஜன் என்னும் நாமத்தைக் கற்றோர் அன்றி மற்றோர் யாரும் அறியார்; அது அவருடைய காரணப்பெயரின் பொருத்தத்திற்குத் தகுந்த அத்தாட்சியாக இருக்கின்றது.

ஃ

மற்ற ஹிந்துதேசத்து மஹான்களுடைய சரித்திரங்களைப் போலவே, எழுத் தச்சனுடைய வரலாறும் வெகுவாக ஊகமாத்திரத்தால் நிச்சயிக்கவேண்டியதா யிருக்கிறது. அதிலும் காலவரையறை சொல்லுவது மிகவும் கடினம்; ஆகிலும், இவர் காலம் சற்றே

தங்களின் சுபாவம் பிடிக்காமல் விலகிக் கொண்டவர்களிடத்தில் சிலர் உள்ளுக்கு மதிப்பு வைத்து, வெளிக்கு அலக்ஷியமாயிருப்பதுபோல் காண்பித்துக்கொள்கிறார்கள்.

றக்குறைய 350-வருஷத்திற்கு முற்பட்டதாய் இருக்கவேண்டு மென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியே இவர் பிறந்த இடமும் நிச்சயமாய் இன்னதென்று சொல்ல ஏலாதாயினும், வெட்டத்து நாட்டில் திருவப்பாண்டி என்கிற ஊருக்குச் சமீபமான திருக்கணி யூராம் என்று பலர் சொல்லுவது பழுதாயிராது. எழுத்தச்சனு டைய பிதா ஜோதிட சாஸ்திர பண்டிதரான ஒரு நம்பூரிப் பிராமண ரெனவும், தாயார் எண்ணெய் ஆட்டுகிற செக்காலையர்குலப் பெண் ணெனவும், யாத்திரை செய்துகொண்டிருந்த நம்பூரியார் தமது வீடு போய்ச் சேருவதற்கு முன் ஜோதிடசாஸ்திரக் கிரமப்படி அதி மேதாவியான புத்திரன் உற்பத்தியாகும்படியான நன்முகூர்த்தம் வந்துவிட்டதினால்; முன் பழக்கமில்லாத இருவரும் ஸதிபதிகளா கிச் சேரும்படி நேரிட்டதெனவும் ஒரு கதை வழங்கி வருகிறது. அக்கதையின் உண்மை எவ்வாறாயினும், இம்மஹா கவி சூத்திர ஜாதியில் பிறந்தவர் என்பதற்கும், அவர் குழந்தைப் பருவமுதல் 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்றபடி மிகுந்த புத்தி சாலியாய் இருந்தார் என்பதற்கும் யாதொரு சந்தேகமும் இல்லை.

ஃ

அதிபாலியத்திலேயே வடமொழி தென்மொழியாகிய கீர்வா ணம் தமிழ் இரண்டையும் அவர் முறையே கற்றுணர்ந்து கொண் டார். தம்முடைய புத்தி நுட்பத்திற்கும் தெளிவான சித்தத்திற்கும் சாதாரணமான வழக்கப்படிப்பினால் அமைதிவராமல், காவியம், நாடகம், அலங்காரம் முதலானவற்றையும் கசடறக் கற்க ஆசை கொண்டு, ஆதியில் 'மனக்கேட்டு பாலராம நம்பூரி' என்ற ஒரு பிரா மணரிடத்தில் பாடங் கேட்டுவந்தார். பிற்பாடு நாராயணீயம் என்ற பெருங் காவியம் பாடிய மேப்பத்தூர் 'நாராயண பட்டேதிரி'யை அடைந்து தத்துவசோதனை பண்ணி, வேதாந்த ரஹஸியங்களையும் சாஸ்திர சம்பிரதாயங்களையும் உணர்ந்து அவரிடம் ஞானானுக்கிரக மும் பெற்றார். இவ்விரண்டு ஆசிரியர்களுடைய துதிகள் எழுத்தச் சன் பாடிய நூல்களில் பல இடங்களிலும் காணப்படுகின்றன.

ஃ

இவ்விதமாக, அறியவேண்டியவற்றை இளமையில் நன்றாய்க் கற்றறிந்து பூரண வித்துவானான எழுத்தச்சன் பிற்பாடு தமது ஊருக்குத் திரும்பிவந்து தமது வீட்டிற்குச் சமீபமாக ஒரு பள்ளிக்

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை வேண்டுமென்கிறார்கள். இருவரையும் பிரிக்கப் பார்ப்பதையே ஒரு தொழிலாகக் கொண்ட பத்திரிகைகளும் மனி தர்களும் இருக்கும்போது எவ்விதம் சாத்தியம்? பிரிக்க நினைப்போரை யறிந்து அவர்களுக்கு எவ்வித மதிப்பும் தாராதிருக்கக் கற்றுக்கொள்கிற நாளில்தான் "ஒற்றுமை" என்பதைக் காணலாம்.

கூடத்தை ஏற்படுத்திக் குழந்தைகளுக்கேற்ற பாலபாடமாக கண பதி ஸ்தவம், ஸரஸ்வதி ஸ்தவம், கணேஷ்டகம், ஸரஸ்வதி யஷ்ட கம், முகுந்தாஷ்டகம், மங்களாஷ்டகம் முதலான பாடல்களைத் தாமே பாடிப் படிப்பித்து வந்தார். சூத்திர ஜாதியிற் பிறந்த இவ ருடைய கல்வி கேள்விகளைக்குறித்து இயல்பாகப் பொறுமைகொண் டிருந்த நம்பூரிப் பிராமணர்களிற் சிலர் இவர் மற்ற சூத்திர ஜாதியா ருக்கும் இவ்வாறு பாடம் ஓதுவித்து வருகிறதைக் கண்டு மிகவும் வெறுப்படைந்து, பலவாறு அவதூறுபேசி நிந்தித்து வந்தார்கள். படித்தறிந்த புத்திமான்கள் உலகத்தாரின் தூஷணைகளுக்கும் அல க்ஷியங்களுக்கும் கேவலங்களுக்கும் ஒருபோதும் தப்பியதில்லை யன்றோ?

ஃ

ஒரு நாள் ஒரு நம்பூரியானவர் இவரது பள்ளிக்கூடத்தின் அருகே போகும்போது, இவர் ஓதுவித்து வருகிற தொனியைக் கேட்டு வெறுப்புக் கொண்டு, இவருடைய ஜாதியைக் குறிப்பித்து இகழும்படி, "எவ்வளவு படி எண்ணெயை ஆட்டுவாய்" என்ற பொருள் தோன்ற, "அடா துஞ்சா! இங்கே எவ்வளவு ஆடும்?" என்று கேட்டார் எனவும், அதற்கு அவர் "தன பளளியில் நாலு வேதமும் ஆறு சாஸ்திரங்களும் கற்பிக்கப்படும்" என்று பொருள் படும்படி "இங்கே நாலும் ஆறும் ஆடும்" என்று மறுமொழி தந்தார் எனவும் ஒரு கதை உண்டு.

ஃ

அன்றியும், ஜாதியபிமானத்தைப் பாராட்டிவந்த நம்பூரிமார், சூத்திர ஜாதியாருக்குள் இவ்வளவு கல்வி யிருக்கில், தங்களுக்கு இகழ்ச்சியாகும் என நினைத்து இவருடைய மதியைக் கெடுக்க வேண்டுமென்று துர்மந்திரப் பிரயோகங்கள் செய்தார்கள் எனவும், அதனால் அவர் தமக்கு உண்டான பைத்தியத்தைத் தவிர்க்கும் பொருட்டுத் தமது பிதாவான சோதிட சாஸ்திர பண்டிதருடைய உபதேசத்தினால் மதுபானம் மரணபரியந்தம் பண்ணிவர நேரிட்ட தெனவும் சொல்லுகிறார்கள். மேற்கூறிய காரணத்தினாலோ, அல்லது சாக்தமதத்தை யாசரிக்கிற சில வித்வான்களுடைய வழக்கப்படியோ, மற்றெந்தக் காரணத்தினாலோ இந்த மகாகவி தமது இளமை முதல் தேகவியோகம் வரையும் மதுபானமென்கிற ஒரு இழிவான செய்கையைக் கைக்கொண்டுவந்தாரென்பதும், நம்பூரி ஜாதியார் பொதுவாக இவருடைய கல்வித்திறத்தைக்

அதை அவனுக்குத் தரக்கூடாதென்று இவன் நினைத்தாலும், அவன் அதைத் தனது திறமையால் மற்றவரிடம் பெற்று விடும்போது, இவன் ஏமா றிப்போய் தன் ஆத்திரத்தை மறைத்துக்கொள்ளப் பல்லை இளிக்கிறான்.

குறித்த அசூயையினுல் இவருக்குப் பகைவர்களாய் இருந்தார்கள் என்பதும் இக்கதைகளால் வெளிப்படுகின்றன. ஆனுல், நம்பூரிமார் எல்லாரும் அப்படித் துவேஷம் பாராட்டினுர்கள் என நினைக்க லாகாது; இவருடைய ஆசாரியர்கள் இருவரும் அந்தப் பிராமண வகுப்பினர்களாய் இருந்ததுமல்லாமல், வேறு சிலரும் இவரிடத்தில் மிகுந்த அன்புள்ள நண்பர்களாகவும் இருந்தார்கள்.

ஃ

எழுத்தச்சனுடைய பெருநூல்களில் முதலாவது சிவ புராணம். இது அவர் தமது 20-ம் வயதில் பாடினதாகப் பல காரணங்களாலும் ஊகிக்கப்படுகிறது. இது வடமொழியிலிருந்து மொழி பெயர்த்ததும், சனிப்பிரதோஷ மாஹாத்மியம் முதல் உருத்திராக்ஷ மஹாத்மியம் ஈருகப் பன்னிரண்டு படலம் கொண்டதுமான பக்தி மார்க்கத்தை அனுஸரித்த ஒரு கிரந்தமாக இருக்கின்றது. இளமைப் பருவமாகிய அக்காலத்திலேதானே தேவீமஹாத்மியம், ஸ்காந்த புராணம் என்னும் இரண்டு பெரு நூல்களையும் வடமொழியி லிருந்து சுருக்கி மொழிபெயர்த்துப் பாடினுர். இவ்விருகாவியங்களிலும் சில படலங்களை வடமொழியிலுள்ளபடி மொழிபெயர்க்காமல் தள்ளியிருக்கிற காரணத்தை ஆராயும்போது, வேதபாஷையிலுள்ள மத சங்கேத ரஹஸியங்களை முற்றிலும் வெளிப்படுத்துதல் தக்கதன்றெனக் கருத்துட்கொண்டார் என்பதாகவாவது, அல்லது அப்படி வெளிப்படுத்தினுல் நம்பூரியாருக்குள்ள பகை வளருமென்று பயந்து ஒழித்தாரென்பதாகவாவது நிச்சயிக்கவேண்டியதாய் இருக்கிறது.

ஃ

இந்த மஹாகவியின் கல்வித்திறத்தையும் சொற்சாதுரியத்தையும் முற்றிலும் வெளிப்படுத்தி இவரை ஒப்புயர்வில்லாதவராய் ஆக்குவித்தது இவர் பாடிய அத்தியாத்ம ராமாயணக் கிளிப்பாட்டேயாம். அது 30-வயதுக்கு மேற்பட்ட காலத்தில் பாடினதாக ஊகிக்கலாம். பாடும்படி நேரிட்ட காரணத்தைக் கீழ்வருமாறு கேள்விப்படுகிறோம். இவருடைய குருவாகிய நாராயணப் பட்டேதிரி அக்காலத்தில் அம்பலப்புழையில் அரசாண்டிருந்த சேம்பகச்சேரி ராஜாவினுடைய சபையில் ஒரு வித்வானுக இருந்தார். அடிக்கடி அந்த ராஜாவினுடைய சமுகத்திற்குத் தாம் செல்லுகிற வழக்கப்படி ஒருதடவை போகும்போது தமது மாணுக்கரையும் அழைத்துக்

பரஸ்பரம் அன்பிருந்தால்தான் ஒருவரை யொருவர் மதிக்கத் தோன்றும். தான் பிறனை மதிக்காது கர்வித்தால் அதுமுதல் பிறனும் தன்னை மதிக்கப்போவதில்லை. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே என்பது வெகு சரி.

கொண்டு போனார். அக்காலத்தில் காசியிலிருந்து வந்த ஒரு வேதியர், அத்தியாத்ம ராமாயணம் என்னும் வழமொழிக் கிரந்தத்தை ராஜாவினிடம் காட்ட, அதில் மிகவும் ஆசைகொண்டு தமது பாராயணத்திற்கு மலையாள எழுத்தில் பெயர்த்தெழுதும்படி அவர் நாராயணப் பட்டேதிரியினிடம் கொடுத்தார். அவர் தமது மாணுக்கரின் மலையாள கவிச் சாதுரியத்தை விளக்கும்பொருட்டு அந்தக் கிரந்தத்தை மலையாள அக்ஷரத்தில் பெயர்த்தெழுதுவதுடன் கிளிப்பாட்டாகப் பாடும்படியும் குறிப்பித்து எழுத்தச்சனிடம் கொடுக்க, மலையாள பாஷைக்குத் தலைமையான காவியம் என்று சொல்லத்தக்க அத்தியாத்ம ராமாயணக் கிளிப்பாட்டானது உற்பவித்தது. நவரஸாலங்காரமும் பொருந்தப் பல நூதனமான கற்பனைகளையும் சேர்த்துச் சொல்லும் பொருளும் செறியப் பாடின இந்தக் காவியத்தை மொழிபெயர்ப்பென்று சொல்வது அவ்வளவு தக்கதாயில்லை. கதை யொழிய, மற்றெல்லாம் நூதன சிருஷ்டியென்றே பேசலாம். அவ்வளவு சிறப்பாக்ச் சொற்ப தினத்துக்குள் இந்தப் பெருங்காவியத்தைப் பாடி யளித்த பெருமையைக் கண்டு செம்பகச்சேரி ராஜாவானவர் அத்தியந்தம் அதிசயத்தை யடைந்து, அவரை மிகவுங் கொண்டாடிப் புகழ்ந்து பலவாறாக வெகுமதி செய்து, சிலகாலம் அங்கேயே தங்கியிருக்கும்படியும் உபசரித்தார்.

ஃ

அதற்குள் எழுத்தச்சனுடைய பெயரும் கீர்த்தியும் மலையாள பாஷை வழங்குகின்ற எல்லாத் திசைகளிலும் பரவியது. கள்ளிக்கோட்டை சாமோதிரிப்பாடு என்ற ராஜா முதலான சகல ராஜாக்களும் பிரபுக்களும் தங்கள் தங்கள் சபைக்கு அழைக்கலாயினர். அப்படிச் சென்ற இடமெங்கும் சிறப்பும் பெருமையும் இவரை எதிர்கொண்டு நின்றன. அக்காலத்திலிருந்த வித்துவான்களும் இவருடைய கவித்திறத்தைக் கண்டு களித்து இவரோடு பழகுவதற்கு ஆசை கொண்டார்கள். அக்காலத்திலிருந்த திருவல்லா கண்ணச் சப்பாணிக்கர் என்னும் ஒரு வித்துவான் இவரைக் கண்டு பழகினது சற்றே விநோதமாயிருப்பதனால் அதை இங்கு குறிப்பிடுகிறோம்.

ஃ

ஆலவாய் அல்லது ஆலுவாய் என்ற ஊரில் ஒரு சிவாலயமுண்டு. அதில் சிவராத்திரி தோறும் திருவிழா நடப்பதும்; அந்த

குழந்தைகள் வஸ்திரமின்றித் திரியும் அழகு ஒருவிதம். யௌவன காலத்தில் அவ்விதமே வஸ்திரமின்றி யிருப்பின் அந்த அழகும் இன்னொரு விதம்.

உச்சவத்தை முன்னிட்டுக் கண் விழிப்பதற்காக அதற்குச் சமீபமான இடங்களிலுள்ள ஸகல ஜனங்களும் அங்கிருக்கும் ஆற்றங்கரை மணலில் திரளுவதும் வழக்கம். தேசஸஞ்சாரம் செய்து கொண்டிருந்த எழுத்தச்சனும் ஒரு சிவராத்திரி தினத்தில் அவ்விடத்துக்குச் சென்றூர். அந்தச் செய்தியை அறிந்து இவரைக் காண மிகவும் ஆவலுள்ளவரான கண்ணச் சப்பாணிக்கர் என்பவர், கும்பல் கும்பலாகக் கூடியிருந்த ஜனங்களி னிடையிடையே நுழைந்து தேடிக்கொண்டு போகும்போது, தன் கால் அவ்விடத்தில் இருப்பவர்களின் மேற்பட்டால் அவர்கள் கோபிக்கலாகாதென்பதற்குக் குறிப்புச் சொல்லாக "கால் பட்டால் குருபாத மேன்றேண்ணுங்கள்" என்று பல தடவையும் சொல்லிக்கொண்டே போகையில், ஒரு கும்பலிலிருந்த ஒருவர் அதற்குப் பதில் மொழியாகக் கால் பட்டதையிட்டு யாராவது அடித்தாலும் ஏசினுலும் அதையும் பொறுத்துக் கொள்ளவேண்டுமென்ற பொருள்பட "திரும்பித் தருவதைக் காணிக்கை யாகவும் எண்ணுங்கள்" என்று சொல்லியதைக் கேட்டு அந்தக் கும்பலை நன்ருய் உற்றுப் பார்க்க, அங்கு எழுத்தச்சன் இருப்பதைக் கண்டு இருவரும் நேசமாய்க் கலந்து பேசிக் களித்திருந்தார்கள். "கற்ருரைக் கற்ருரே காமுறுவர்."

ஃ

தமிழ்க் கவிச் சிகாமணியாகிய கம்ப நாட்டாழ்வாரும் எழுத்தச்சனும் சம காலத்தவர் என்றும், சிநேகிதர்கள் என்றும் சிலர் சொல்லுகின்றனர். கம்பர் தமது இராமாயணத்தை அரங்கேற்றிய காலத்தைக் காட்டுகின்ற "எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின் மேல்" என்ற பாயிரச் செய்யுளை அறிந்தவர்கள் அதை நம்பார்கள்.

ஃ

இவ்வாருகத் தமது கீர்த்தியாகிய சந்திர வட்டக்குடை மலையாள தேச மெங்கும் விளங்க, வித்வக் கூட்டமாகிய குறுமன்னர்கள் கொடுக்கிற தோத்திரக் கப்பம் பெற்று, ராஜாக்களுடைய சபை வீதியில் பவனி வந்துகொண்டிருந்த இந்தக் கவிச் சக்கரவர்த்தி; வட மொழியிலிருந்த பாரதம், பாகவதம், பேதாள சரித்திரம் என்னும் நூல்களையும் மொழி பெயர்த்துப் பாடித் தமது மலையாள பாஷையின் இலக்கியக் களஞ்சியத்திற் சேர்த்தார் அவை ஒவ்வொன்றும் வாக் சாதுரியத்திலும் சொற்பொருளணிகளிலும் அத்தி

மாதப்பத்திரிகைகளில் விகடப்பகுதி ஒன்று தனியாகத் தோன்றியது முதலில் "பிரஜாநுகூலன்" பத்திரிகையிலும், பிறகு "ஆநந்தகுணபோதினி" யிலுந்தான். அதன்பின்பு "ஆநந்த விகடன்" என்று விகடமாகவே ஒரு தனி மாதப்பத்திரிகை தோன்றிற்று. அதற்குப் பிறகே மற்ற விகட மாதப் பத்திரிகைகள் உதயமாயின.

யாத்ம ராமாயணத்திற்குச் சமமென்றே சொல்லலாம். இவர் சிந்தா ரத்நம் என்னும் வேதாந்த நூலும் அக்காலத்திலே சுயமாகப் பாடியிருக்கிறார். பக்தி விஷயமாகச் செய்திருக்கிற ஹரிநாம கீர்த்தனம், இராமாயண இருபத்து நாலு விருத்தம் முதலான பாடல்களின் காலம் உத்தேசமாகவேனும் நிச்சயிக்கக் கூடியதாய் இல்லை. இவற்றுள் சில பாடல்கள் நம்பூரிப் பெண்கள் கொண்டாடுகிற "திருவாதிரைக்களி" என்னுங் குரவைக் கூத்திற்கு உபயோகமாகச் செய்திருக்கிறதாகத் தோற்றுகிறது.

ஃ

மலையாள பாஷைக்கு இலக்கணமென்னும் உயிரைக் கொடுத்து நிலைபெறச் செய்து, அது இப்போதிருக்கிற உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவந்த நமது கவிசிரேஷ்டர் தமது கடைசி நாளில் மலையாள தேசத்தை விட்டகன்று, அதன் ஒரு மூலையிற் சென்று ஒதுங்கி நாள் கழிக்கும்படியான யாதோ ஒரு இடையூறு அவருக்கு நம்பூரிமாரின் கொடுமையால் நேரிட்டதென்று பிரசித்தமாயிருக்கிறது. அவர்கள் செய்த தீங்கு இன்னதென்று இப்போது நிச்சயிக்க வழியில்லை. அவர்கள் பகை பாராட்டுவதைப் பொறுக்கமாட்டாதவராய் எழுத்தச்சன் கள்ளிக்கோட்டை ராஜாவினுடைய பொருள் உதவியினால் பாலக்காட்டுச் சேரிக்குச் சென்று தெக்கேப்புழை என்னும் நதிக்கரையில் சிற்றாருக்குச் சமீபமான புழைக்கல் கிராமத்திலே சில ஆலயங்களும் மடங்களும் ஏற்படுத்திச் சந்நியாஸாச்சிரமத்தில் அவ்விடத்திலேயே தமது நிரியாணதசை வரையில் வாழ்ந்திருந்தார்.

ஃ

எழுத்தச்சனுடைய முன்னோரைக்குறித்து எப்படி ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்ல ஏலாதிருக்கிறதோ, அப்படியே, அவரது பிற்கிளைகளைக் குறித்தும் யாதொன்றும் உறுதியாய் அறிய ஆதாரமற்றிருக்கின்றது. அவர் இல்லற வாழ்க்கையில் இருந்தாரெனவும், அவருக்கு ஒரு புத்திரி உண்டாயிருந்தாளெனவும், அவர் பாடிய பாடல்கள் யாவும் அவளுடைய கைப்படி எழுதப்பட்டனவெனவும் சிலர் சொல்லுகிறார்கள். அவர் பிரம்மசாரியாகவே இருந்தாரென்பது சிலருடைய துணிவாயிருக்கிறது.

ஃ

அந்தச் சங்கதி எப்படியாகிலும், அவர் பாடிய பாடல்கள் மலையாள பாஷையுள்ளளவும் நிலை நிற்கத்தக்க சந்ததிகளாயிருக்

ஒருவன் வெகுமதியாகவும் தானமாகவும் பெற்றதெல்லாம், மனிதனின் மூலம் கடவுள் கொடுத்ததே.

கின்றன. அவற்றில் வடமொழிகள் வரிதோறும் நெருங்கிக் கலந்து கிடப்பதனுல் அவற்றின் சுவை தெரியுமாறு சிறிதேனும் எடுத்து எழுதுவதற்கு இசைகிறதில்லை; சுவையும் கெட்டுவிடும். இவரது காலம் முதற்கொண்டு தான் வடமொழியின் கலப்பு மலையாள பாஷையில் அதிகரித்தது. மேலும், இவருடைய பாடல் தமிழ் யாப்பிலக்கணக் கட்டுப்பாடுகளுக்குப் பொருந்தாது. இவர் பாடல்கள் வெகுவாய் இசைக்கப்பட்டிருக்கின்ற கிளிப்பாட்டென்னும் செய்யுள் நடை இவர் காலத்திற்கு முன்னிருந்ததாகத் தோற்ற வில்லை. அந்த நடையையும், கிளிப்பாட்டென்னும் பேருக்கு அனு குணமாகத் தாம் எடுத்துக்கொண்ட கதையை ஒரு கிளி சொல்லுவ தாக ஆரம்பித்து முடிக்கும் தன்மையையும் விளக்கும்படி, இன்றி யமையாத சில சொற்களை மாற்றி அத்தியாத்ம ராமாயணத்தி லிருந்து சில வரிகளைக் கீழே தருகிறேம்.

ஃ

"தார்மகட் கன்புள்ள தத்தையே வருக நீ
தாமச சீல மகற்றிடு விரைவுடன்
தாமோதரன் சரித மாமமிர்தமின்னவும்
சாமோத மாகவே சொல்வாய் சரதமாய்."

"எங்கிலோ கேட்பின் சுருக்கி நான் சொல்லுவேன்
பங்கமெல்லா மகலும் பல பேதமாம்
சங்கட மெதுவும் வருவது மில்லையாம்
பங்கஜ நேத்திரன் கதைகள் கேட்டிடிலே."

அயோத்தியாகாண்டம் ஆரம்பம்.

"அத்தியாத்ம ராமாய ணம்பர மேசுரன்
அத்திரி மகட்குப தேசித் தருளினுன்
அத்தியயனம் செய்யினும் அன்புடன் கேட்கினும்
சித்திக்கு மெல்லா வபீஷ்ட மென்றிப்படி
பத்தியா யுரைதந் தடங்கிற்று பைங்கிளி
சித்தந் தெளிந்து கேட்டார் பெருமுலகரே."

யுத்தகாண்டம் சம்பூரணம்.

ஃ

இதுகாறும் கூறியவாற்றல் துஞ்சத்து இராமாநுஜ மகா கவியின வரலாறு ஒருவாறு விளங்கும். இவர் சைவம், வைணவம் இரண்டிலும் ஸமரஸமனத்துடன் இருந்ததாகத் தெரிகிறது. மலை யாளதேசத்து ஸகோதரர்களைக் காணுகையில் இம்மகா கவியைப் பற்றி அவர்களிடம் விசாரிப்பது ஒரு இன்பமான ஸம்பாஷணையாக வும் இருக்கும்.

குடும்பப் பணிவிடைச் சுமையின் பாரம் பெண்டாட்டி வந்து விட்டபின் இன்னும் அதிகம் தெரியும். முன்னையினும் அதிகமாக அழுத்தும்.

விஸ்வாசம் காணேம் !

சிலருடைய சந்திப்பில் நாம் எவ்வளவோ பரவசப்படுகிறேம். நமக்கு உண்மையிலேயே அவர்களின் மீது எவ்வளவோ பிரியமா யிருக்கிறது. அவர்களின் வருகைக்குக் காத்தும் கிடக்கிறேம். அளப்பரிய ஆர்வத்துடனும் உபசரிக்கிறேம். நமது வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு அவர்களுடன் பேசத்தொடங்குகிறேம். ஆயினும் என்ன பயன்?

அவர்களிடம் விசுவாசம் என்பதையே காண முடிகிறதில்லை. இதற்குமுன் நம்மிடமிருந்த பொருள்களில் எத்தனேயோ மூட்டைகள் கட்டிக்கொடுத்து அனுப்பியிருந்த போதிலும் அவற்றை அவர்கள் நினைக்கிறதேயில்லை. அடுத்த தடவை வரும்போது இன்னெரு மூட்டை கட்டிக்கொண்டு போவதற்கு என்னென்ன கேட்கலாமென்று ஆராய்கிறார்கள். அவர்கள் கேட்டதை நாம் எடுத்துக்கொடுத்தால் அதற்கு ஒரு நன்றியோ, புன்னகையோ, அன்பு வதனமோ காண்பிக்கிறார்களா? இல்லவே யில்லை. முகத்தை 'உம்'மென்று வைத்துக்கொண்டு நாம் கொடுத்ததை வாங்கி ஒரு மூலையில் போடுகிறார்கள். அவற்றை அவ்வளவாகக் கவனிக்காததுபோல் அலக்ஷியமாகிறார்கள். தாங்கள் கேட்டது கிடைத்துவிட்டது, காரியமாய்விட்டது. இன்னும் என்னென்னசுருட்டிக்கொண்டுபோகலாம் என்பதிலேயேகண்ணுகிறார்கள்!

அவர்களின் ஈனச் செயல்களை ஏன் வெளியிட என்று மௌனமாய் விலகிக்கொள்ளும்படியாகிறது. இத்தகையோரிடம் அதிகம் பழகாமல் தூர ஒதுங்கி, நமது கௌரவத்தைக் காத்துக்கொள்வதே நலம். விசுவாசமற்றவர்களை ஒதுக்கிக் குப்பையில் எறிக.

திருப்திபட்ட நிலை உண்டா?

கொடியானது ஒரு கொழுகொம்பைப்பற்றி நிற்பதுபோல, மனமும் ஸதாகாலமும் ஒரு விஷயத்தைப்பற்றிக்கொண்டும் தூண்டிவிட்டுக்கொண்டும் நிற்கும். அது எக்காலத்திலேனும் திருப்தியடைதல் அரிதினும் அரிதே. தான் இருக்கும் ஸ்தானத்திலிருந்து மேலேயுள்ள ஒரு பதவியை எப்பொழுதும் விரும்பியவண்ணம் எதிர்பார்த்து நிற்கும். இதனுல் மனத்திருப்தி என்பது ஒருபோதும் உண்டாவதில்லை.

நித்திய தரித்திரன் ஒருபோது உணவு எங்கேனும் கிடைக்காதாவென்று எண்ணுகிறுன். ஒருவேளை உணவு பெற்றவனே மூன்றுபொழுதுக்கும் குந்தித்தின்ன இச்சிக்கிறுன். அதுவும் கிடைக்கப்பெற்றவனெருவன் அறுசுவையுண்டியை நாடுகின்றுன். அதன்பின் செல்வனுகவும், செல்வனுயின், அதிகாரியாகவும், அதிகாரியாயின் சிற்றூர்க்கரசனுகவும், அங்ஙனமாயின் தேசாதிபதியாகவும், அதன்பின் சக்ரவர்த்தியாகவும் வருவதற்கு முயலுகின்றுன். எவர்களும் தமக்குள்ளதாகிய நிலைமையிலிருந்து உயர்ச்சியடைய வேண்டுமென்று பேரவாக்கொண்டு நிற்பார்களேயன்றி, உயர்ந்துள்ள எந்த நிலையிலும் திருப்தியடைந்தவர் இலர்.

மனிதன் எப்பொழுதும் உயர்ந்த லக்ஷியத்தை நோக்கி நிற்கவேண்டியது நியாயமேயாயினும், கடவுள் கொடுத்துள்ளதில் மனேசாந்தியுறுவதும் அவசியமானது. கிடைத்துள்ளதில் திருப்தியற்றுக் குறைபடுதலானது, தனக்குள்ள மனேநிம்மதியையும் வீணே அழித்துக்கொள்வதற்கு ஒப்பாகும். மனமானது கண்டபடி ஓடும் குரங்கு போன்றது.

உலகிலுள்ள ஜந்துக்களிற் சில.

1. நாலுகையுள்ள ஜந்துக்கள், வாலில்லாக் குரங்கினம்.

உராங்குத்தான்
கொரில்லா
சிம்பான்ஜி
கிப்பன்
பார்பரி நாட்டின் வாலில்லாக் குரங்கு
பாபூன்
பழய உலகத்திலுள்ள குரங்குகள்
புதிய உலகத்திலுள்ள குரங்குகள்
பறக்கும் லீமர்

2. சிறைக்கைப் பிராணிகள் அல்லது வௌவால்கள்.

நரி வௌவால்
சாதாரண வௌவால்
பூதவௌவால்

3. பூச்சி தின்னும் ஜந்துக்கள்

அகழ் எலி
வேலிப் பன்றி
மூஞ்சுறு
நீர்ச்சுரு
தசைமான்
யானைச்சுறு

4. பல்லில்லாத ஜந்துக்கள்

தேவாங்கு (ஸ்லொத்)
ஆர்மடில்லன்
நன்னம்பிக்கை முனை எறும்புண்ணி
பேர் எறும்புதின்னி

5. அரிக்கும் ஜந்துக்கள்

அணில்பிள்ளை
பறக்கும் அணில்
எலி
சுண்டெலி
ஜர்போ எலி
வயற் சுண்டெலி
கந்தமுஷிகம் (நாறெலி)
பீவர் (நீர் நாய்)
மார் மோத்து
பெரு வெளி நாய்
அக்கோத்தி
சிஞ்சில்லன்
முள்ளம்பன்றி
முயல்
குழிமுயல்

6. அசைபோடும் ஜந்துக்கள்

அராபிய ஒட்டகம் (ட்ராமிடேரி)
பாக்திரிய ஒட்டகம்
லாமா
ஒட்டைச் சிவிங்கி
ரேன்டீயர் மான்
கடமை
மூஸாமிருகம்
பல்லொடீயர்
சம்பர் மான்
கஸ்தூரி மிருகம்
நீலக்கோ (நீல எருது)
கேஜல்மான் [மான்
இந்துதேசத்துக் கறுப்பு ஷாமோய்
மலையாடு (ஐபெக்ஸ்)
வெள்ளாடு
செம்மறி ஆடு
ஐரோப்பிய காட்டுமாடு (பைசன்)
யாக்
சுண்டெலிமான்
அமெரிக்க (பைசன்)
II கஸ்தூரி எருது
எருமை
எருது

7. தடித்த தோற் பிராணிகள்

குதிரை
ஜீப்ரா
க்வாகா
காட்டுக் கழுதை
நாட்டுக் கழுதை
யானை
காண்டாமிருகம்
ஆற்றுக் குதிரை
தேபர்
காட்டுப் பன்றி
சாதாரண பன்றி
கழலைப் பன்றி
பெக்கரி

8. பையுள்ள ஜந்துக்கள்

ஒபோஸம்
ஆஸ்திரேலிய முஷிகம்
ஜிப்ரா தோண்டான்
காங்கரு

9. வேட்டையாடும் மிருகங்கள்.

சிங்கம்
புலி
சிவிங்கி
ஜாகர்
பூமா
புலிப்பூனே
அவுன்ஸ்
சிவிங்கிப்பூனே
காட்டுப்பூனே
வீட்டுப்பூனே
(லிங்ஸ்) சிவிங்கி
சிறுத்தை (வேட்டைச் சிவிங்கி)
நாய்
ஓநாய்
குள்ளநரி
நரி
கழுதைக்குடத்தி
புனுகுப்பூனே
மரப்பூனே
கீரி
மரநாய்
ஸ்கன்க்
மின்க்
ஸ்டோட்
வீசல்
மார்ட்டென்
ஸேபில்
ஸேபில்
வல்வரின்
பாட்ஜர்
ராக்கூன்
பாண்ட் (பூனேக்கரடி)
அட்டர்
கரடி
துருவக்கரடி
நரைக்கரடி
கபிலக்கரடி
மலேயகரடி

10. முலேப் பாலுண்ணும் ஜலசரம்

ஸீல்
யானே ஸீல்
கடற்சிங்கம்
வால்ரஸ்
டுகோங்
பார்ப்பாயிஸ்
டால்பின்
நார்வால்
திமிங்கிலம்
காசலட்
க்ரீன்லாந்து திமிங்கிலம்
ஆக—126.
இன்னும் எத்தனே எத்தனேயோ! இந்து குறித்தவை ஒரு சில தான்.

வந்த காரியம் முடிந்ததா ?

தான் கோரிவந்த காரியம் இனிதாக முடிவதென்பது புறப்பட்டவேளேயைப்பொறுத்தது போலும். ஒன்றின்பின் ஒன்ருகவே ஒவ்வொரு காரியத்தையும் முடிக்கவேண்டியிருக்கிறது. முடிக்க நினேக்கிறதென்பது தனது கைவசத்தில்லே. முடித்துக்கொடுக்கவேண்டியவர்களின் கைவசத்திலிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் பொறுத்திருந்து காத்து பூர்த்தி செய்து கொள்ளவேண்டியிருப்பதிலே நாட்களும் பறந்து விடுகின்றன. வீட்டையும் ஊரையும் பிரிந்து வந்த கஷ்டம் ஒரு புறமாக; தன் வீட்டில் எல்லோரும் க்ஷேமமாயிருந்து அவர்களின் முகத்தை சந்தோஷத்தோடும் தான் காணவேண்டுமே யென்ற கவலேத்தவிப்பும் வேறே! பிரிவுத் துயரும் வேறே! வந்த இடத்தில் நேரும் சோதனேகளும் வேறே! ஒரு சமயம் ஒன்றிரண்டு வேலேகள் மட்டுமே முடிந்து பாக்கி முடியாமல் போவதுமுண்டு. ஒரு சமயம் எல்லா வேலேகளுமே முடிந்து ஆநந்தமாகப் புறப்படுவதுமுண்டு. யாவும் ஈசன் செயல்!

ஸாவித்திரியின் பிரார்த்தனை.



ஸாவித்திரியின் தந்தை மத்திரதேசத்து அரசனாகிய அச்வபதி என்பவர். அவர் சத்தியம், தவம், தானம், தருமம், ஆண்மை, ஊக்கம், பூததயை பச்சாத்தாபம் முதலிய பல நற்குணங்களும், நன்னெறி நல்லொழுக்கங்களும் அமைந்தவர். தமது புத்திரியே தக்க மணாளனைத் தேடி வருமாறு மந்திரி முதலானவர்களுடன் வெளியில் அனுப்புகிறார். ஸாவித்திரி அநேக இடங்களுக்குச்சென்று, பின்பு ஸத்தியவானைக் காதலித்து ஊர் வந்து தந்தைக்குத் தெரிவிக்கிறாள். அப்போது அங்கு வந்திருந்த நாரதர் ஸத்தியவானுக்கு ஒரு வருஷமே இனி ஆயுள் இருப்பதால், அது கூடாதென்கிறார். தந்தையான அச்வபதியும் திடுக்கிட்டு, குமாரத்தியை நோக்கி, "குழந்தாய், பெண்கள் பசுமையாய் இருந்தால் பெற்றோர்க்குப் பெருமையுண்டாகும், பெண்கள் வருந்தினால் அவர்கட்கு வருத்தமே. ஆதலின், வேறு இராஜகுமாரனைத் தெரிந்தெடுத்துக்கொள்" என்கிறார்.

ஃ

ஸாவித்திரி:—ஒருவனுக்கு ஒன்று கொடுக்கிறேன் என்பதும், ஒருவனைக் கணவனாக வரிப்பதும், ஒரே தரம் செய்யவேண்டுவதேயன்றி, மாறி மாறிப் பலதரம் செய்யத்தக்கதல்ல. தீர்க்காயுளாகட்டும், அற்பாயுளாகட்டும், குணவானாகட்டும், நிர்க்குணவானாகட்டும், முதலில் நான் எவனை ஒருதரம் வரித்தேனோ அவனே எனக்குக் கணவன். அவனை விட்டு மற்றொருவனை நான் ஒரு போதும் வரியேன். முதலில் ஒரு காரியத்தை மனதினால் நிச்சயித்து, பின்பு அதை வாயினாற் சொல்லி, பிறகு அதைச் செய்வதே உலக வழக்கம். ஆதலின், நான் மனதிற் செய்த நிர்ணயத்தை மாற்றுவது நியாயமன்று. நான் கைம்பெண்ணாகி வருந்தவேண்டுமென்பது என் தலைவிதியாயின் அதை மறுபடி மாற்ற யார் தரம்? இவ்வுலகில் ஒன்றும் நித்தியமானதன்று. இப்பூமியில் பிறந்தவன் இன்றைக்காயினும், நூற்றாண்டு கழிந்தாயினும் இறக்கவேண்டியவனேயொழிய, இறப்புக்குத் தப்பி நிற்பவனெவனுமில்லை. அப்படியிருக்க, அதற்கு நாம் ஏன் அஞ்சி நிற்க வேண்டுமோ?

நாரதர்:—ராஜனே, இவ்வணங்கினுள்ளம் ஸத்தியவானிடத்திலேயே உறுதியாய்ப் பற்றிப் போயிருக்கின்றது. இந்த நீதியுறுதிப்பாட்டினின்றும் இவள் உள்ளத்தைத திருப்ப எவராலும் இல்லை. ஸத்தியானவ்வளவு சற்குண புருஷன் இவ்வுலகில் வேறொருவனும் இல்லை. ஆதலின், அவர்க்கே இம்மகளைக் கொடுப்பது எனக்கு யுக்தமெனத் தோன்றுகிறது. இந்தக் குணபூஷ

எவன் தனக்கு விரோதியோ அவனேதான் வீட்டிலுள்ள முக்கியஸ்தர்களுக்கு வேண்டியவனாயிருப்பதால் அவனை வராதபடி தடுக்க முடிகிறதில்லை. அதனால் தன் மனம் படும் வாதனைக்கும் ஓர் எல்லையில்லை.

ணிக்கு க்ஷேமம் உண்டாகக்கடவது. என்று ஆசீர்வதிக்கிறார்.

ஃ

பிறகு ஸாவித்திரிக்கும் ஸத்திய வானுக்கும் விவாகம் நடைபெறு கிறது. ஸாவித்திரி தன் கணவனின் ஆயுள் நாட்களை எண்ணியபடியே இருந்து, இனி மூன்று தினங்களே இருக்கிறதெனக் கண்டதும், பகவா னைத் துதித்து மிக கஷ்டமான விர தத்தை யனுஷ்டிக்கிறாள். மூன்றாம் நாளும் வருகிறது. அன்று மாலையில் ஸத்தியவானை விதிபற்றி யிழுப்ப தால் தாய் தந்தையர் தடுத்தும் கேளா மல் காய் கனிகள் கொண்டுவரக் காட் டிற்குப் புறப்படுகிறான். மூன்று நாள் விரதமிருந்த ஸக்வித்திரி தனது விர தத்தை முடித்துக்கொண்டு மாமி மாமனார் பெரியோர்கள் முதலியவர் களை வணங்கி, "தீர்க்க சுமங்கலியாக வாழக்கடவை" என்று அவர்களின் ஆசிகளைப் பெறுகிறாள். இந்த ஆசி கள் தனக்கு நன்மையைச் செய்யட்டு மென்பது ஸாவித்திரியின் உட் கருத்து.

ஃ

ஸத்தியவான் மாலை வேளையில் காலம் தப்பிக் காட்டுக்குப் போவ தைக் கண்ட ஸாவித்திரி நாரத முனி வர் சொல்லிய சமயம் நெருங்கியே இப்படி இவர் போகிறாரென்று எண் ணியவளாய் ஸத்தியவானுடன் தானும் தொடர்ந்து செல்கிறாள். பிறகு ஸத்யவான் யாவும் பறித்த பின்பு மிக்க களைப்புடன் ஸாவித்திரி யின் மடியில் படுத்துக்கொள்ள, ஸாவித்திரியும் திடுக்கிடுகிறாள். கடவு ளைத் தியானித்தபடி யிருக்கையில் சூரியனைப்போலப் பிரகாசிக்கின்ற ஒரு புருஷன் கண்களில் நெருப்புப் பொறி பறக்கக் கயிறும் கையுமாய்ப் பயங்கரமான தோற்றத்தோடு ஸத் தியவானுடைய பக்கத்திலே வந்து அவனையே நோக்கி நிற்கக் காண கிறாள். அவனைப் பார்த்தவுடனே ஸாவித்திரி தன் மடியிலிருந்த ஸத் தியவானுடைய சிரசை மெல்ல எடுத் துத் தரையிலே விட்டு விட்டு மன தினில் நடுக்கத்துடன் எழுந்து தன் முன்பு நிற்பவரை வணங்கி வினவு கிறாள்.

ஃ

ஸாவித்திரி:—ஸ்வாமி, தேவரீ ருடைய திருமேனியைப் பார்க்கை யில் மானிடராகத் தோன்றவில்லை. தெய்வமென்றே தோன்றுகிறது. ஆதலின், தேவரீர் யாரோ அடியா ளுக்கு விளங்கச் சொல்ல வேண்டு கிறேன். இங்கு வந்த காரியம் யாதோ?

அந்த மனிதன்:—நீ கற்புநிலை தவ றாத குணபூஷணியாயும் தவப் பெருமை பெற்றவளாயு மிருப்பதால், நான் உனக்குப் பிரத்தியக்ஷமாகி உன் னுடன் பேசுகின்றேன். என்னை யமன் என்பார்கள். உன்னுடைய பர்த்தாவான இந்த ஸத்தியவானுக்கு வாழ்நாள் குறுகி முடிவு காலம் வந்து விட்டதாதலால் இவனுடைய உயி ரைப் பிடித்து இழுத்துக்கொண்டு போக வந்தேன்.

ஸாவித்திரி:—சரம காலத்தில் உயிரைக்கொண்டு போகத் தேவரீ ருடைய தூதர்களே வருகிறதென்று

பெரும் பாரத யுத்த காலத்தில் அர்ச்சுனன் ஒன்பது தினம் தெய்வ வழிபாடு செய்து பத்தாம் நாளில் வெற்றி பெற்றனனாதலால், நவராத்திரி கழிந்த மறுதினத்திற்கு "விஜயதசமி" என்ற நாமம் வாய்ந்ததென்பர் இதி காச நூலார்.

பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படியிருக்க இப்பொழுது தேவரீரே நேராய் எழுந்தருளினதற்குக் காரணமென்ன?

தருமதேவன்:—உன்னுடைய பர்த்தாவான இந்த ஸத்தியவான் தன் பெயருக்கேற்றபடியே ஸத்தியம் தவறாதவன்; தருமம் தவம் முதலிய சகல நற்குணங்களும் நிறைந்த மகா புருஷன். ஆதலால், இவன் என்னுடைய தூதர்களால் கொண்டுபோகத் தக்கவனல்லன். ஆனதுபற்றி நானே நேராக வந்தேன்.

ஃ

இவ்விதம் உரைத்த யமன் உடனே ஸத்தியவான் சரீரத்தினின்றும் கட்டை விரலளவான ஜீவனைப் பாசத்தாற் கட்டி யிழுத்துக்கொண்டு தென்திசை நோக்கிச் செல்கிறான். ஸாவித்திரி புலம்பியவாறு யமனைப் பின் தொடர்ந்தோடுகிறாள்.

ஃ

யமதருமர்:—என் வீணாசை கொண்டு வருந்துகிறாய்? இனி நடத்த வேண்டிய உத்தரகிரியைகளைப் பார்.

ஸாவித்திரி:—என்னுடைய நாயகனை எங்கே கொண்டு போகிறீர்களோ அவ்விடத்துக்கு அவரோடு கூடப் போவதே என் கடமை. இதுவரையில் நான் அனுட்டித்து வந்த தவத்தினாலும், பெரியோர்களுக்குச் செய்த பூஜையாலும், பர்த்தாவினிடத்திலிருந்த பக்தியாலும் தேவரீருடைய அனுக்கிரகத்தாலும் நான் என் பர்த்தாவைத் தொடர்ந்துவர யாதொரு தடையுமில்லை. இந்நேரம் பேசிப் பழகித் தேவரீர் அடியாளுக்கு மித்திரராயினதுபற்றி இப்போது ஒரு விண்ணப்பம் செய்கிறேன். உலகத்தில் தருமத்திற்கு மிஞ்சினது மற்றொன்றுமில்லை; அந்தத் தருமமே தேவரீருக்கு சுவாதீனமாயிருப்பதால், தேவரீருக்கு அசாத்தியமானதொன்றுமில்லை; ஸத்தியவானுக்குப் பதில் அடியாளைப் பிடித்துக்கொண்டு அவரை விட்டுவிட வேண்டுகிறேன்.

யமதருமர்:—பெண்ணே! இந்தப் பேச்சைக் கேட்டு நான் அதிக சந்தோஷமடைந்தேன். ஸத்தியவானுடைய ஜீவனொன்றுதவிர, மற்றென்ன வரம் வேண்டுமானாலும் கேள், நான் கொடுக்கக் காத்திருக்கிறேன்.

ஸாவித்திரி:—அடியாளுடைய மாமனாருக்குக் கண் தெரியவும், தேகத்தில் நல்ல வடிவழகும் வலிமையும் உண்டாகவும் அனுக்கிரகிக்க வேண்டும்.

யமதருமர்:—அப்படியே உண்டாகக்கடவது!

ஃ

என்று யமதருமன் செல்கிறார். ஸாவித்திரி மீண்டும் தொடர்கிறாள். யமதருமன் திரும்பிப்பார்த்து நீ ஏன் இளைப்புற்று ஓடி வருகிறாய் என்கிறார்.

ஃ

ஸாவித்திரி:—என் பிராணநாதருடைய ஸமீபத்திலிருக்கும் எனக்கு இளைப்பு ஒருபோதுமில்லை. மேலும் தேவரீரோடு பேசும்போது அடியாளுக்குத் துக்கங்கூடத் தோன்றவில்லை. ஆதலால், தேவரீரை விட்டுப் பிரிய விருப்பமில்லை. தேவரீரைத் தவிர அடியாளுக்கு வேறு

யுத்த சரித்திரங்களும், சில விசேஷ சம்பவப் பிரசுரங்களும் ஒருகாலத்தில் அபரிமிதமாய் விலையாகின்றன. மற்றோர் காலத்திலோ அவை பயன்படுவதில்லை. விற்பதுமில்லை.

கதியுமில்லையாதலால் நான் எங்கு தான் போகிறது? என்று புலம்பினுள்.

யமதருமன்:—(மனமுவந்து) பெண்மணியே! உன் வாய்மொழியைக் கேட்க எனக்குக் களிப்பு உண்டாகின்றது. ஸத்தியவானுடைய உயிர் ஒன்று தவிர, உனக்கு மற்றென்ன வரம் வேண்டுமானாலும் கேள்.

ஸாவித்திரி:—என் மாமனுருக்கு இழந்த அரசு கிடைக்கத் திருவருள் புரிக.

யமதருமர்:—அங்ஙனமே ஆகுக.

ஃ

என்று சொல்லிச் சென்றுவிட, ஸாவித்திரி மீண்டும் கண்ணீருடன் எமனைப் பின் தொடர்ந்து ஓடுகிறுள்.

ஃ

யமதருமர்:—ஏன் வருத்தப்பட்டு ஓடி வருகிருய்? நில் நில்.

ஸாவித்திரி:—என் கணவனொருவர் தவிர இவ்வுலகில் என்னைக் காப்பவர் மற்றெவருமில்லை "குலமகட்குத் தெய்வம் கொழுநனே" ஆதலின்,என் பிராணநாதன் இவ்வுலகை விட்டுப் போம்போது நான் இங்கிருந்தாவதென்ன? என்று புலம்பினுள்.

யமதருமர்:—பெண்மணியே! உன் இனிய வாக்கின் மதுரம் கோடை காலத்தில் தாகத்தால் தவிப்பவனுக்குத் தண்ணீர் வார்ப்பது போலிருக்கிறது. ஸத்தியவானுடைய உயிர் ஒன்று தவிர எது வேண்டுமாயினும் கேள்.

ஸாவித்திரி:—ஆண் மகவு இல்லாத என் பிதாவுக்குக் குலம் தழைக்கக் குமாரன் உண்டாகச்செய்யவேண்டும்.

யமதருமர்:—அவ்வாறே ஆகுக.

ஃ

என்று கூறிச் செல்ல, ஸாவித்திரி பின்னும் யமனைத் தொடர்ந்தோட, யமன் அதுகண்டு திரும்பி வீடு போ என்கிருர்.

ஃ

ஸாவித்திரி:—(கண்ணும் கண்ணீருமாய்) இவ்வுலக இன்பமெல்லாம் துக்கம் தருவனவேயாம். மிகப் பிரீதியுள்ள புருஷன், தாய், தகப்பன் முதலிய பந்துக்களெல்லாம் இறுதியில் இவ்வுலகினின்றும் பிரிந்துபோய்த் துக்கத்தை விளைவிப்பவர்களேயொழிய வேறல்லர். ஆதலின், எனக்கு இவ்வுலகிலிருக்க விருப்பமில்லை. தேவரீரோடு கூடவே வந்துவிடுகிறேன்.

யமதருமர்:—உன் வாய் மொழியைக் கேட்டு என் மனம் உருகுகின்றது. உனக்கு வேண்டிய வரத்தைக் கேள். கொடுக்கிறேன்.

ஸாவித்திரி :—(துக்கத்தால் தன்னையே மறந்து நின்று பின்) ஸத்தியவானுக்கு அடியாளிடத்தில் மிகப் பராக்கிரமசாலிகளான நூறு குமாரர்கள் பிறக்கும்படி அனுக்கிரகிக்க வேண்டும்.

யமதருமர்:—(சிறிது நேரம் ஒன்றும் தோன்ருமல் பிரமித்து நின்று) அப்படியே ஆகக்கடவது. இப்பொ

ஒரு சின்ன சங்கதியைச் சின்ன சங்கதியாகவே அலக்ஷியமாய் விட்டுவிட்டால், எவ்வளவோ மனே அமைதியை நீ காண்பாய். இவ்விதம் அமைதிப்பட்டுப்போகவேண்டியவற்றில் கலகப்பட்டுபோவது எத்துணை பேதமை!

ழுது நீ வெகுதூரம் வந்துவிட்டாய். திரும்பிப் போ.

ஃ

என்று சொல்லிச் செல்கிறார். ஸாவித்திரி அப்போதும் யமனை விடாமல் பின்னேயே செல்கிறாள். யமன் மறுபடியும் ஸாவித்திரி ஓடி வருவது கண்டு, வீடு போய்ச் சேரும் படி சொல்கிறார்.

ஃ

ஸாவித்திரி:—இவ்வுலகத்தில் எல்லாமறிந்த பெரியோர்க்குத் தெரியாத தொன்றுமில்லை. அவர்களுடைய ஸத்தியத்தாலேயே இவ்வுலகமெல்லாம் கட்டுண்டு நிற்கிறது. அப்படிப்பட்டவர்களுடைய அனுக்கிரகம் ஒருபோதும் வீண்போகாதாகையால், அநாதையான அடியாளைக் காத்தருள வேண்டுகின்றேன்.

யமதருமர்:—உன்னுடைய வார்த்தையைக் கேட்கக் கேட்க எனக்கு அதிக ஆநந்தமாகிறது. உனக்கு இஷ்டமான வரத்தை வேண்டிக்கொள்.

ஸாவித்திரி:—அடியாளுக்கு என்ன வரமிருக்கிறது? ஸத்தியவானுடைய உயிரைத் தவிர எனக்கு வேண்டுவது மற்றொன்றுமில்லை. மேலும், அவர்க்கு நூறு பிள்ளைகள் பிறக்கும்படி நீங்கள் முன்பு அனுக்கிரகித்தது அவர் பிழைத்தெழாமல் எப்படிப் பரிபூரணமாகும்? ஆதலின், அவரைப் பிழைப்பூட்டித் தேவரீருடைய திருவாக்கை யதார்த்தமாக்க வேண்டுகிறேன். கணவனை விட்டுப் பிரிந்து எந்தச் சுகமும் அனுபவிக்க எனக்கு இஷ்டமில்லை. பர்த்தாவை விட்டு தேவலோகம் போகவும் இஷ்டமில்லை. கட்டின கணவனில்லாமல் எந்தப் பெருமைதான் வந்தாவதென்ன? பிராணநாதன் இறந்தபிறகு நான் உயிரோடிருக்கவும் வேண்டுமோ? ஆதலால், தேவரீரையே சரணமாக அடைந்தேன். காத்தருள வேண்டும் ஸ்வாமி.

ஃ

என்று ஆறாத் துயரத்தோடு அழுது வேண்டினாள். அதுகண்டு யமதருமர் கற்புநிலையில் ஒப்புயர்வில்லாத உத்தமி இவளைத் தவிர உலகத்தில் மற்றொரு பெண்டிரில்லையென மனமகிழ்ந்து, திருவுள்ளம் இரங்கி, தான் காலபாசத்தால் கட்டியிருந்த ஸத்தியவானுடைய ஜீவனை அவிழ்த்துவிட்டு ஸாவித்திரியைப் பார்த்து,

—"பெண்கள் நாயகமே, இனி உனக்கு ஒரு குறையுமில்லை.

தங்களிடம் பேசிப் பழகிவிட்டார்களென்பதினாலேயே, அவர்களின் கௌரவங்களையும் மதிப்புகளையும் சாமானியமாகவும், அற்பமாகவும் நினைத்துவிடுகிற சிலர் இருக்கிறார்கள். இத்தகையோரிடத்து அதிகம் பழகாமல் கோயில் விக்கிரகம்போன்று தூரத்தில் நின்று அதிகம் நெருங்காமல் விலகுவதே மதிப்பு காத்துக்கொள்ளவழி! இன்னோர் பிறரது நற்பெயரைக் கொலை செய்பவர்களுமாவார்கள். தங்களிடம் பழகினோரை அலக்ஷியம் செய்துவிட்டு, தங்களிடம் நெருங்காதவர்களையே மதிப்பாக எண்ணுதல் இவர்களின் சுபாவம்.

திட்டுகிறாயா?—நன்றாகத் திட்டிக்கொள்ளடா இராஜாவே! கோபிக்கிறாயா?—வேண்டியவரை காட்டு. அதனால் உன் மனம் தான் விஷமித்துக் கெடுகிறதன்றி, பிறரை அந்தக்கோபமும் திட்டும் ஏதும் செய்வதில்லை.

கணவனோடுகூட உன் மனோரதப் படியே நூறு மக்களைப் பெற்று நீதி முறை தவறாமல் உலகத்தைக் காத்துக்கொண்டு சுகமாக நெடுநாள் வாழ்ந்திருக்கக் கடவை."

என்று சொல்லி ஆசீர்வதித்து அவளை அனுப்பிவிட்டுப் போகிறார்.

ஃ

பிறகு ஸாவித்திரி பிழைத்தெழுந்த ஸத்தியவானுடன் புறப்பட்டு வந்து, கண்கள் தெரியப்பெற்ற மாமனார் முதலியவர்களைக் கண்டுகொள்கிறாள். இழந்த அரசு மீண்டும் வரப்பெற்று, தன் கணவனோடு சுகமே வாழ்கிறாள்.

ஃ

எமனிடம் வரம் பெற்ற அன்றையதினம் சதுர்த்தசியாதலால் தன் கணவன் பிழைத்தெழுந்த பெருமைக்காகச் சதுர்த்தசிதோறும் ஸாவித்திரி விரதம் கொண்டிருந்தாள். அது காரணமாகவே, இத்தேசத்தில் இப்போதும் சில பெண்டீர் ஸாவித்திரி சதுர்த்தசி யென்று சொல்லி அன்றையதினம் பதி பக்தியுடனே விரதம் கொண்டாடுகின்றனர். சுபம்.

ஓய்வு எங்கேங்கே ?

ஓய்வு என்பது உழைப்பிற்குப் பிறகு கிடைக்கும் சொற்ப நேரத்திற்கே சொல்லப்படுவது. உழைக்காத சோம்பேரிக்குக் கிடைத்துள்ள ஓய்விலே ஒரு ருசியும் காண முடியாது. அந்த ஓய்வு ஒரு அருமையாகவும் தோற்றாது. பள்ளிக்குச் செல்லும் பையனுக்கே ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளாகிப் பெரிய இன்பம் தரும். பள்ளிக்குச் செல்லாதவனுக்கு ஞாயிற்றுக்கிழமை ஒரு விசேஷ நாளாகப் புலப்படாது. மாமி வீட்டிலிருந்து தாய் வீட்டுக்கு வந்த பெண்ணுக்கே தாய் வீட்டில் தான் அநுபவிக்கும் ஓய்வின் இன்பம தெரியும். அந்த வீட்டிலேயே விவாகமின்றி யிருக்கும் பெண்ணுக்குத் தாய் வீடு ஒரு ஓய்வின் இன்பமாகத் தோன்றாது. ஓய்வுகாலம் கக்கூஸிலே கிடைக்கலாம். கல்யாண வீட்டிலே கிடைக்கலாம். க்ஷவரம் செய்துகொள்ளுகையில் கிடைக்கலாம். தான் தேடிப்போன மனிதர் இல்லாமல் அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கையில் கிடைக்கலாம். ரயிலுக்காகக் காத்திருக்கையிலும் காணலாம். கிடைத்த ஓய்விலே உன் மனோசிந்தனைகளைப் பெருக்கிக் கொண்டு, நூதன கருத்துகளை உலகுக்கு உதவு. ஓய்வின் போதும் நீ ஒரு வேலை செய்வதாகக் காட்டு.

சிநேக வாத்ஸல்யச் சீரின் புனித மகத்துவம் உணர்ந்தவர் எங்கோ ஒருவர் இருவரே. மற்றவர் யாவும் அறிமுகக் குப்பையே. வியாபார நேசமே.



பெண்மையின் ஒரு தனி ஒளி.

நான் கொஞ்சம் செல்வாக்கும் புகழும் பெற்ற ஆசிரியனாக இருந்தபோதிலும், சிறந்த வக்கீல்கள் பேசியதைக் கேட்டிருப்பினும், கலாசாலைகளில் வித்வத்வம் வாய்ந்த புரோபஸர்கள் உபன்யாஸம் செய்ததைப் பார்த்திருப்பினும், ஆடவர்களைவிடப் பெண்மணிகள் பிரஸங்கம் செய்ய முற்படுவார்களானால், அவர்கள் வெற்றி பெறுவதற்கான அருகதை வாய்ந்தவர்களென்றும், இயற்கையான காரணங்களால் இந்த அந்தஸ்து அவர்களுக்குப் பொருந்தியிருக்கிறதென்றும் உணர்கின்றேன்.

ஃ

நீ அவர்களுடைய நாவின் வன்மையை மட்டும், அதன் இராகச் சுவையை மட்டும் சிலாகித்து இருக்கலாம். ஆனால், அவர்கள் நம்மைப் பரவசப்படுத்தும்,—தூண்டாமல் தூண்டி நம்மை ஆட்டுவித்து நடத்துவிக்கும்,—அவர்களுடைய அற்புதமான முகத்தைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? அன்னாரின் அழகிய செந்நிற அதரத்தினின்றும் புறப்படும் சிறிய மணித்திரள்களான வார்த்தைகள் நம்மை அதன்படி நடக்கச் செய்விக்கும் சக்தியைப்பற்றி நீ யாது சிந்திக்கிறாய்? மனிதர்க்கு வேண்டிய திருப்தியையும், இன்பத்தையும், அழகின் வசீகரத்தையும் மிகப் பொருத்தமாய்த் தங்களின் வாழ்க்கையில் பதிய வைக்கின்ற மாதரார்தம் சக்திகள் ஒன்றிரண்டா? அவை பலபலவே! அந்த சக்திகளனைத்தும் அரிவையரின் ஹிருதயத்தில் உற்பவித்து ஊறி ஊற்றாகக் கிளம்புபவைகளாகும். அந்த சக்திகளில் பெண்மணிகள் பூரண வெற்றி கொள்வதும் உண்மையே.

ஃ

என்னுடைய வீட்டின் ஒவ்வொரு இடமும், ஒவ்வொரு அலங்காரமும், வீட்டிலுள்ள பெண்மணிகளின் கைவேலைகளையும், உழைப்பையும் வெளியிடுகின்றன. அவர்களின் பேச்சுகளோ வாக்கு சாதுர்யத்தை வெளியிடும் பிரசங்க மேடைகளாயுள்ளன. பெண்மணிகளின் மெல்லிய ஹிருதயம் அதிக துயரத்தையோ,

---

ஒருவன் நமது பக்கமாகப் பரிந்து பேசுகிறானென்று நாம் ஸந்தோஷித்தபோதிலும், அவன் குளிர்ந்த கொள்ளி என்று பிறர்மூலம் தெரிய வருகிறபோது, அவனுடன் அதிகமாகக் குலவாமல் மரியாதையுடன் தூரவிலகிக் கொள்ளப் பார்க்கவேண்டும்.

சோதனையின் பாரத்தையோ தாங்க முடிகிறதில்லை யென்பதை உடனே அன்னோர் வெளியிடும் கண்ணீர் தெரிவிக்கின்றது.

ஃ

பெண்மணிகளின் வாக்கு சாதுர்யத்தையோ வேறெதனையோ குறித்து யாரேனும் குறை கூறினால், அங்ஙனம் கூறுவோரது குணங்கள் நல்லதுதானவென்று நீ கவனி. பெண்மணிகளின் அற்புத ஒளித்திரள்களிலே எவ்வித மாசும் படியாவாறு அதற்கான உபாயத்தைச் செய். அவர்களுடைய குறையை எந்த முறையில் நிவர்த்திக்க முடியுமென்பதை நீ சிந்தித்து வெளியிடு. அவர்களது அந்த அற்புத அழகிலே எத்தகையோரது மனதையும் அசைக்கக்கூடிய சக்தி ஏதோ ஒன்று இருப்பதால், அந்த அழகிய கண்ணொளி—அழகிய பிம்பம்—கிரமத்தவறான வஸ்துக்களின் மீது கொட்டப்பட்டுப் பாழ்படாதிருக்க நீ ஜாக்கிரதை செய். ஜாக்கிரதையை ஒரு பக்கத்திற் கொண்டு, கூடியவரை அன்னோர்க்கு இசைந்து நடக்கவும் முயன்றிடு. உன் தன்மதிப்பைக் காத்துக்கொள்வதற்காக வாழ்க்கையில் கடுமையாக நடந்துகொள்வதை அவளிடம் காட்டாது ஒதுக்கிவை. அவ்விதமின்றி நீ கடுமையுள்ளவனு யாவா யாகில், உண்மையான துக்கமாகிய நரகத்தில் நீ வீழ்ந்து தத்தளிக்க வேண்டிவரும். ஆகலின், இரக்கமே உருக்கொண்ட மாணிக்கத்தை அழகுசெய்வதே உன் முயற்சியா யிருக்கட்டும். பெண்மையின் ஒரு தனி ஒளியை என்றைக்கும் உன் ஹிருதயத்தில் வை. அப்பொழுது நீ பூரண இன்பம் காண்பாய்.

நம்மாழ்வாரின் திருநக்ஷத்திரத்திலேஆயிரம் பாசுரங்கள்ஒரே யடியாய் ஓதி முடிக்கவேண்டியிருந்ததால் தங்களுக்குக் கடிதம் எழுதக்கூடவில்லை யென்று பத்து பேர்களுக்கு எழுதுகிறார்கள். இவர்கள் ஆயிரம் பாசுரங்கள் ஓதிய பெருமையைப் பலரும் அறிய விளம்பரப்படுத்திக்கொள்ளுதல் இவர்களின் எண்ணமோ? தங்களின் பூஜை ஜெபங்களைத் தங்களுக்குள் வைத்துக்கொள்கிறது தானே? அதைப் பிறர் அறியக் கடிதங்களில் தமுக்கு அடிப்பது ஏனோ? இதுவும் ஒரு கௌரவமா?

ஒரு பக்கம் வீடு மெழுகிக் கொண்டும், இன்னொரு பக்கம் மற்றவரைச் சிடுசிடுத்து அதற்குப் பதில் அவர்கள் தூற்ற, அதைக்கேட்டுத் தன் கண்களில் நீர் ஒழுகிக்கொண்டு மிருந்தால்—அந்த வீட்டை மெழுகிச் சுத்தப் படுத்தியதில் என்ன சந்தோஷம் ஏற்படப்போகிறது? வீட்டை மெழுகிச் சுத்தப்படுத்து முன், தன் மனதிலுள்ள அகங்காரம், கோபம், வஞ்சகம், துரோகம், அடங்காமை, எதிர்க்கும் தன்மை, பட்டிவாய் முதலியவற்றைத் துரத்தி சுத்தம் செய்துவிட்டுப் பிறகு வீட்டைச் சுத்தம் செய்ய முயன்றால் அப்போது தான் உண்மையான சுத்தம் ஏற்படும். மனதிலே கசுமால அழுக்குக் குப்பைகளை வைத்துக்கொண்டு, வீட்டை மட்டும் மெழுகுவதில் ஒரு பிரயோஜனமுமில்லை. அந்த சுத்தத்தைக் கடவுள் விரும்பவுமில்லை. ஒரு சட்டியிலே உள்ளே யிருப்பவற்றைத் தேய்த்துச் சுத்தப் படுத்தாமல், சட்டியின் வெளியே மட்டும் தேய்த்துச் சுத்தம் செய்வதால் பயனுண்டா?

தீண்டாமையின் ரகசியம்.

(ஓர் ஹாஸ்ய நாடகம்.)

I

[கோவிந்த சாஸ்திரியாரின் வீடு. வாசலில் பள்ள ராமன் வராண்டாவில் நிற்கிறான்.]

ராமன்:—(தனக்குள்) நான் இந்த சாமியின் சேவகனா யிருந்தும் கால முழுதுக்கும் கேவலப்படுவதே கதி யாகிவிட்டது. வருஷம் முழுதும் உழைத்துத் தோட்டத்து வேலைக ளெல்லாம் செய்துவருகிறேன். இப் படிப் பாடுபடுகிற எனக்கு சாமி வீட்டுக் கேணியில் தண்ணீர் எடுக்க சுதந்திரமில்லையா? என் பிள்ளை குட்டிகளுக்கு குடிக்க இவ்வளவு ஜலம் எடுக்கவிடமாட்டேன் என்கி றார்களே? நானும் மற்ற வேலைக்காரர் களைப்போல மனிதன்தானே? என் எஜமான் கேணி கிட்டக்கூட என்னை வரப்படாதென்கிறாரோ? எஜமானி டம் எல்லாத்தையும் சொல்றேன். இப்போதே சொல்லிவிட்டுத்தான் வேறு ஜோலி பார்ப்பேன்.

ஃ

[சாஸ்திரியார் உள்ளிருந்து வெளியில் வருகிறார்.]

சாஸ்திரி:—என்னடா பள்ளப் பயலே! என்ன தைரியமடா உனக்கு? மெள்ள மெள்ள வீட்டு வராண்டா வில் ஏறி வர ஆரம்பித்துவிட்டாய்? சீ! சீ! கீழே இறங்கு நாயே!

ராமன்:—எசமாங்களே! ஒரு சங்கதி சொல்லணுங்கோ.

சாஸ்திரி:—சீ! நாயே! கழுதை மகனே! சங்கதியுமாச்சு! மண்ணு மாச்சு! தூரப்போடா! பாபி! பிரஷ்டா! அப்பால் எல்லாம் பேசிக்கொள்ள லாம், தொலைந்து போ.

ஃ

[பிரபல வக்கீலும், சனாதன தர்ம சேவை சங்கத்தின் காரிய தரிசியுமான ரகுநாத தீக்ஷிதர் அங்கு வருகிறார்.]

ரகுநாத தீக்ஷிதர்:—(ராமனைப் பார்த்து) சிவ! சிவ! தூரப்போடா சண்டாளப் பயலே! இங்கே யார் விட்டது உன்னை? இது என்ன ஸார்? நீங்கள்கூட இப்படி விபரீதம் செய்ய ஆரம்பித்து விட்டீர்களே? இந்தப் பயலை இவ்வளவு தூரம் ஏன் வர விட்டீர்கள்? போடா எட்டிப் போ!

சாஸ்திரி:—கீழே இறங்கிப் போடா?

ரகு-தீக்ஷிதர்:—தூர ஓடிப் போடா! சிவ! சிவ! இவர்களைப் பார்த் தாலுங்கூட பாபம் என்று சங்கராச் சாரிய ஸ்வாமி உபந்நியாஸத்தில் சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க இது என்ன ஸார்?

சாஸ்திரி:—ராமா போடா இங்கே நிற்காதே!

தனது கௌரவத்தையும், தனது அந்தஸ்தையும் மதிக்காமல் ஈனப் படுத்துகிற இடத்தில், அவர்கள் தன்னைக் கேவலம் செய்கிறார்களே யென்று துக்கிப்பதில் பயனில்லை. தான் பட்ட அவமானம் போதுமென்று அவ்வள வுடன் விலகிவிடுவதே உத்தமம். அந்த மூடர்கள் கேவலப்படுத்தினும், உள்ள கௌரவம் குறைந்துவிடாது, தன்னைக் கொண்டாடுவதற்கு எவ்வ ளவோ பேர் காத்துள்ளார்.

ராமன்:—சங்கராச்சாரி ஸ்வாமி மோட்டார் வண்டி ஏறலாமா சாமி. சமுஸ்கிருதத்திலே பேசாமல் இங்கிலீஷிலே பேசுறுரே சாமி! அது சரியா சாமி?

ரகு-தீக்ஷிதர்:—எடு கட்டை! என்ன வாய் கொழுத்துப்போச்சோ? ஒண்டிப் பயலாக இந்தப் பக்கம் வந்த நாய் நீ! கொஞ்சம் கொஞ்சமாக நிலபலம் தோட்டம் உனக்கு அதிகமாகச் சேர்ந்துவிட்டதிலே திமிர் ஏறிவிட்டதா?

சாஸ்திரி:—இந்தப் பயல்களிடத்திலெல்லாம் நமது நிலங்களை வைத்துக் கடன் வாங்கும்படியாக விதி ஏற்பட்டுவிட்டதே. எல்லாம் கலியுகத்தின் செயல்தான்!

ரகு-தீக்ஷிதர்:—கலியுக மென்ன செய்யும்? இந்தப் பயல்கள் நன்ருக உழைத்து மண்ணையெல்லாம் பொன்ஞக விளையச் செய்து எளிய வாழ்வில் காலந்தள்ளிக் காசும் பவுனுமாகச் சேர்த்துவிடுகிருர்கள். நமக்கோ செலவழிக்கத்தான் தெரிகிறது; சேர்க்கத் தெரியவில்லை. வரிப் பளுவும் வேறே! (ராமனைப் பார்த்து) அடே பயலே! கீழே இறங்குகிருயா? உதைக்கட்டுமா?

[ராமன் வராண்டாவை விட்டுக் கீழே இறங்கித் தூரத்தில் ஆத்திரத்துடன் நிற்கிருன்.]

ஃ

சாஸ்திரி:—இது என்ன ஸார்! இப்படிக் காந்தியின் தீண்டாமை இயக்கம் ஏற்பட்டதும், இந்தப் பள்ளப்பயல்களுக்கு எவ்வளவு தைரியம் உண்டாய்விட்டது? இது யெல்லாம் காந்தி செய்த வேலை. தான் கெட்டதல்லாமல் சந்திரபுஷ்கரணியையும் கெடுத்துவிட்டார். எல்லாம் பிரஷ்டமாய்ப் போய்விடும்போலிருக்கிறதே. ஒட்டன், பள்ளன், பறையன், சக்கிலி எல்லோரும் ஒன்ருக வேண்டுமென்று சொல்லுபவர் எப்படி மகாத்மாவாக முடியும்? இதைப்பற்றி எனக்குப் பெரிய சந்தேகமுண்டாகிவிட்டது. எதோ காங்கிரஸ்காரர் பிரசங்கங்களில் கீதையில் இவர்களை எல்லாம் சமதிருஷ்டியுடன் பாவிக்கும் குணமுள்ளவரே மகா ஞானிகளென்று சொல்லி யிருக்கிறதென்கிருர்களாமே, இது சரிதானு? நீங்கள் கீதையைப் படித்திருப்பீர்களே!

தீக்ஷிதர்:—இது கலிகாலம் ஸார்! இப்படித்தான் நடக்கும். ராஜீய விஷயத்தில் காந்தி பேச்சுக்குமேல் வேறு பேச்சில்லை தான். தர்ம சாஸ்திரங்களைப் பொருத்தமட்டில் அவருக்கு என்ன தெரியும்? கீதையில் மகாத்மாக்கள் துல்லபமென்று சொல்லப் பட்டிருக்கிறதென்று சங்கராச்சாரி சுவாமிகளவாள் அபிப்பிராயம். கீதையை இந்நாளில் யார் வாசிக்கிருர்கள்? அவகாசம்தான் எங்கே நமக்கு? காந்தியும் சனுதன தர்மத்தைத் தொலைக்கக்கிளம்பி யிருக்கிருர். இவர் வேணுமென்ருல் கீழ் சாதிக்காரர்களோடு கட்டிப் புறண்டு கொண்டு இருக்கட்டுமே! எல்லாம் பிரஷ்டமாய் விட்டது. கலிகாலத்தின் கொடுமை ஸார்!

சாஸ்திரி:—சமுத்திர யாத்திரை செய்தால் ரௌரவாதி நரகத்திற்குப்

ஒருவன் ஏமாறியிருக்கிறவரையில் மற்றவர்கள் தாராளமாக எதையும் அடையலாம், அனுபவிக்கலாம். ஆனுல், அவன் விழித்துக்கொண்டபிறகோ, எதுவும் நடவாது. உடனே அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுவிடவேண்டியதே.

போகவேண்டுமென்று தர்ம சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருக்கிறதாம். உங்கள் குமாரரை ஐ. சி. எஸ். பரீக்ஷைக்கு சீமைக்கு அனுப்பலாமென்று உத்தேசித்திருக்கிறீர்களே? எப்படி செய்யப்போகிறீர்கள்?

தீக்ஷிதர்:—அது வேறு விஷயம். அது 'ஆபத்து தர்ம்ம்.'

சாஸ்திரி:—அது போகட்டும். ஜில்லா ஜட்ஜு துரை நடத்திய "டீ" பார்ட்டியில் தாங்களும் துரை பக்கத்திலுட்கார்ந்து 'டீ' குடித்தீர்களாமே! இது சனாதனமா?

தீக்ஷிதர்:—சனாதன தர்மத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? கோகிலாஷ்டமிக்கும், குலாம்காதருக்கும் என்ன சம்பந்தம்? தாறுமாறாகப் பேசுகிறீர்களே? விஷயமே இன்னதென்று உமக்குத் தெரியவில்லை. எல்லாம் பிரஷ்டமாகட்டும். நீங்களும் தர்ம சாஸ்திரங்களுக்குப் பயந்து நடப்பவர் என்று எண்ணினேன். இப்படி ரொம்ப சந்தேகமுள்ள ஆசாமி என்று எனக்குத்தெரியாது. இப்பள்ளனை என் கண் முன்பாக இப்படிப்பட்ட பிரஷ்டனைப் பார்ப்பதுங் கூடப் பாபம்! இதற்கு 1000-காயத்திரி ஜபம் தான் பிராயச்சித்தம்.

[இப்படி சொல்லிக் கொண்டே புறப்பட்டார் தீக்ஷிதர்.]

ஃ

சாஸ்திரி:—ஏ! ராமா! கேட்டாயா வக்கீல் அய்யர் சொன்னதையெல்லாம்! வராண்டாவில் இனி ஏறிவராதே. உன்னால் இன்றைக்கு எனக்கு எவ்வளவு கஷ்டம் பார்! கேணி ஜலத்தால் இந்த வராண்டாவைக் கழுவி ஆகவேணும்.

ராமன்:—ஆமாம்! சாமி! ஒருநாள், முன்னே நான்தான் கேணியில் இறங்கி அதில் விழுந்த சொம்பை, அம்மா எடுக்கச்சொல்லி எடுத்தேன். கேணித்தண்ணி அம்மட்டும் தீண்டல் ஆகிவிட்டதே. அந்தத் தண்ணி எப்படி வராண்டாவைச் சுத்தி செய்யுங்க! சாமி! என் இப்போ என்னைத் தண்ணி எடுக்கவிடேன் என்கிறீங்கோ?

சாஸ்திரி:—ஜாஸ்தி பேசாதே! போடா! நாயே!

ராமன்:—என் சாமி! என்னைப் பார்த்தால் நாய்போலவா தோணுது சாமி? இந்தக் கிராமத்தில் உங்களுக்கும் அதிகமான நிலபலமே எனக்கு இருக்கிறது. என்னை என் நாய் பேய் என்று பேசணுமோ? இந்த மாதத்துள்ளே என் கடன் பணத்தைக் கொடுக்காவிட்டால் கோர்ட்டுக்குப் போவேன். உட்பட்டு நடந்ததும் போதும், இந்த நாய்ப்பட்டமும் போதும்.

[ராமன் கோபத்துடன் போகிறான்.]

II

[ராமனின் மருமகன் சின்னான் மதராஸில் 'டிராம் டிரைவர்.' இவன் கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிந்தவன். ரஜா எடுத்துக்கொண்டு மாமனார் வீட்டுக்கு

ஒருவன் தனது பிந்திய அவசரத்திற்கென்று தனக்குத் தெரிந்த மனிதரொருவரைத் தன் வீட்டில் துணைக்கு வைத்துக்கொள்கிறான். அந்த மனிதரோ இரண்டு மாதங்கள்போல நன்றாகப் புசித்துவிட்டு, அவசர சமயத்துக்கு உதவாமல் நடுவில் புறப்பட்டுப் போய்விடுகிறார். இவன் ஏமாறுகிறான்.

வந்திருந்தான். மத்தியானம் 12-மணி நேரம். சுடும் வெயில் சின்னனுக்கு அதிக தாகம். ராமன் குடிசையில் குடிக்க நல்ல தண்ணீர் இல்லை.]

சின்னன்:—(ராமனிடம்) அய்யர் தோட்டத்துக் கேணியிலாவது போய் அள்ளிக்கொண்டு வரலாமென்றாலோ அய்யர் விடமாட்டார். வேறு இடத்திலும் தண்ணி எடுக்க முடியாது. ஆறும் $1\frac{1}{2}$ மயில் தூரம், என்ன செய்வது?

ராமன்:—இது கிராமத்துச் சங்கதி. பட்டணத்துத் தடபுடல் இங்கு செல்லாது. ரொம்பவும் கேவலமாய் நம்மை நடத்துகிறு.

சின்னன்:—இந்தப் பார்ப்பனர் மதராவிலே டிராம் வண்டியில் என் பக்கம் வந்து சோக்காக உட்கார்ந்து விடுகிறார்களே? அப்போ தீட்டு எங்கோ போய் விடுகிறது? எவ்வளவு பார்ப்பனர்கள் மதராவிலே 'பூட்ஸ் கீட்ஸ்' போட்டுக்கொண்டும் தொப்பி தரித்துக்கொண்டும் 'ஸ்பென்ஸர் சிற்றுண்டிசாலையில் சாப்பிட வருகிறார்கள்! இவர்களுக்கு நான் சரியான வேடிக்கை காட்டவேணும்.

ராமன்:—நம்ம அய்யர் ஒரு தாஸி வீட்டுக்குப் போவது வழக்கம். இரவு 8-மணிக்கு அவரை அங்கே பார்க்கலாம். நீ பெங்களூர் ஜவுளி வியாபாரி போல் வேடமிட்டுக்கொண்டு அங்கே போ. நானும்கூட வந்து எல்லாம் காட்டுகிறேன். இதே மாதிரி வக்கீல் அய்யரும் ரயில்வேஸ்டேஷன் ஹோட்டலில் இரவில் தலைமறைவாகப் போய் கறி, குழம்பு, முட்டை தின்று வருகிறார். இவர்களுக்குப் புத்தி வருமாறு கேலி செய்யவேண்டும். அப்போது தான் வெட்கப்பட்டு அடங்குவார்கள். கேணியில் தண்ணி எடுக்கவும் விடக்கூடும்.

ஃ

[இரவு $7\frac{1}{2}$ மணிக்கு சின்னன் பெங்களூர் ஜவுளி வியாபாரியாக மாறி, தாசி நீலாம்பாள் வீட்டிற்குச் செல்கிறான். ராமன வெளியில் தலை மறைவாக நின்று கவனிக்கிறான்.]

தாசி நீலா:—தாங்கள் பெங்களூரா? ஜவுளி வியாபாரியா? தாங்கள் கொண்டு வந்திருக்கும் சேலைகளை நான் பார்க்க முடியுமா?

சின்னன்:—நான் உன் அழகைப் பார்க்க வந்தேன். நீயோ எனது ஜவுளியின் அழகைப் பார்க்க விரும்புகிறாய். நான் மாதிரித் துணுக்குகள் கொண்டு வந்திருக்கிறேன். உனக்குப் பிரியமானதைப் பார்த்துத் தெரிவித்தால் ஊர் போய் அனுப்புகிறேன்.

ஃ

[இந்த சமயம் கோவிந்த சாஸ்திரி அங்கு வந்து கதவைத் தட்டுகிறார்.]

ஃ

தாசி நீலா:—(தன் வேலைக்காரியிடம்) சரி, ஐயர் வந்திருக்கிறாராக்கும். எனக்கு உடம்பு சரியில்லை யென்று நான் சொன்னதாகக் கூறி அனுப்பிவிடு.

ஒருவருக்கு அவரது இழி செயல்களைப்பற்றிக் கடிதம் எழுதி அதனால் மனஸ்தாபப்பட்டுக் கொள்வதைவிட, அந்த ஒருவரது குணத்தை யறிந்து கொண்டு அவ்வளவோடு எந்தக் கடிதமும் எழுதாமல் ஒதுங்கிவிடுவது மேலாகும். தபாற் செலவும் லாபமாகும்.

சின்னன்:—யார் வந்திருக்கிறது?

தாசி:—கோவிந்த சாஸ்திரி, இவ்வூரில் அவர் பெரிய மிராசுதார். ஆனால், இப்போது அவருக்குக் கடன் அதிகம் என்று கேள்வி. இந்த வீடும் அவர் எனக்குக் கட்டிக் கொடுத்தது தான்.

சின்னன்:—வந்தவரைப் போகச் சொல்லாதே. அவரை உள்ளே வரச்செய்து, அவரைக்கொண்டும் நீ ஒரு புடவைக்கு உனக்காக ஆர்டர் கொடுக்கச் சொல்லு. நான் அதற்குக் கமிஷனும் உனக்குக் கொடுக்கிறேன். எனக்கும் ஒரு புடவை விலையாகட்டும்.

தாசி:—சரி சரி, எவ்வளவு கமிஷன் கொடுப்பீர்கள்? பாதி விலைக்குப் புடவை கொடுப்பீர்களா?

சின்னன்:—ஆஹா! அப்படியே!

ஃ

[தாசி நீலா உடனே சாஸ்திரிகளை அழைத்து வரும்படி வேலைக்காரியிடம் கூற, சாஸ்திரிகளும் உள்ளே வந்து சின்னனையும் நீலாவையும் கண்டு திடுக்கிடுகிறார்.]

ஃ

கோவிந்த சாஸ்திரி:—என்ன நீலா! இந்த அன்னிய மனிதர் யார்?

தாசி:—என்ன சாமி! கூச்சப்படாதீர்கள். இவர் பெரிய ஜவுளி வியாபாரி. பங்களூரிலிருந்து இன்று காலை வந்தார். புடவை விற்பனைக்காக வந்திருக்கிறார். பெங்களூரிலிருக்கும் என் தங்கச்சி இவரை இங்கே இறங்கும்படி லெட்டர் போட்டிருக்கிறாள். நாளைகாலையில் புறப்பட்டுப் போவார். பெங்களூரில் "ஜெயகோபால் அண்டு பிரதர்ஸ்" என்ற பிரபல ஜவுளிக் கடை இருக்கிறதாம். அங்கிருந்து தான் பங்களூர் சேலைகள் பலவூர்களுக்கு அனுப்பப்படுகிறதாம். அநேக பெரிய பட்டணங்களிலுங்கூட ஜவுளிக்கடைகள் இருக்கிறதாம். இவருக்கு ஜெயகோபால் பிள்ளை என்று பெயர். நீங்களும் எனக்கு ஒரு புடவை வாங்கித் தருவதாகச் சொல்லி வந்திருக்கிறீர்கள். நல்ல சமயமாக இவரும் வந்தார். தங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். தாங்களும் வந்தீர்கள். அடியே! ஸ்வாமிக்குத் தாம்பூலம் கொண்டுவா.

ஃ

[வேலைக்காரி தாம்பூலம் கொண்டுவர, சின்னன் எடுத்துப் போட்டுக்கொள்கிறான். தாசி தாம்பூலம் மடித்துத் தர சாஸ்திரியார் போட்டுக்கொள்கிறார்.]

ஃ

சாஸ்திரி:—தங்களுடைய "பிரான்ஞ்சு" இவ்வூரிலில்லைபோலிருக்கிறதே?

சின்னன்:—புதிதாக ஒரு கடையைத்திறக்கும் உத்தேசத்துடனேயே இங்கு வந்தேன். முதலில் நீங்கள் ஒரு புடவைக்கு ஆர்டர் கொடுங்கள்.

தாசி:—நான் சொல்லுகிற புடவையை எழுதிக் கையெழுத்துப்

தித்திப்புப் பண்டங்கள் இருக்குமிடத்தை நோக்கிச் செல்வது ஈக்களின் இயல்பு. அதுபோலவே, நம்மொருவனுக்கு வேலை கிடைக்காமற் போகின்றதா, பார்ப்போமே என்று நல்ல உத்தியோகங்கள் கிடைக்குமிடத்தை நோக்கிப் படித்த வாலிபர்கள் ஓடுகிறார்கள். பின்பு தங்களின் எண்ணம் நிறைவேறாததை நோக்கித் திகைக்கிறார்கள்.

போடுங்கோ. பணம் மெதுவாகத் தரலாம்.

சாஸ்திரி:—என்ன ஐயா, வேடிக்கையாக வந்த இடத்தில் உங்கள் ஜவுளி வியாபாரத்தையும் நடத்துகிறீர்களே?

ஃ

[சாஸ்திரியார் சின்னுன் புஸ்தகத்தில் கையெழுத்துப் போடுகிருர். இதன்பிறகு சின்னுன் பீடி குடிக்கத்தொடங்கி, நீலாவைப் பார்த்து நான் வெளியில் போய்விட்டுப் பத்து மணிக்கு வருகிறேன் என்று புறப்படுகிருன். சாஸ்திரியும் அவனுடன் கை குலுக்கியபடி அவனை அனுப்ப வெளியில் வருகிருர். அங்கு ராமன் வாயிற்படியருகில் நின்றுகொண்டிருப்பதை சாஸ்திரியார் காண்கிருர்.]

ஃ

சாஸ்திரி:—என்னடா ராமா! இங்கே என்னடா வேலை உனக்கு?

ராமன்:—கும்பிடரேன் சாமி! நம்ம மருமகன் தாசி வீட்டுக்கு வந்தாங்களா? அவன் இங்கே இருக்கான் என்று சொன்னுருங்க. அவனைப் பார்க்கலாமென்று வந்தேன்.

சாஸ்திரி:—என்னடா பைத்தியமா உனக்கு? உன் மருமகனுவது, இங்கேயாவது?

ராமன்:—(சின்னுனைப் பார்த்து,) அப்பப்பா! அய்யமார்கள்தான் வைப்பாட்டி வீட்டுக்குப் போராங்கோ! என்டா நீ கூட அப்படியே ஆரம்பித்துவிட்டாயா?

சின்னுன்:—(வெட்கப்பட்டவன் போல்) இல்லை! இல்லை! உம்!

ராமன்:—(சாஸ்திரியைப் பார்த்து) இவன் தான் என் மருமகன். பாருங்கோ சாமி இவன் நடத்தையை! அய்யமாரும் பள்ளனும் ஒரே தாசி வீட்டுக்குப் போகிருங்கோ! எனக்கோ கேணித் தண்ணீர் எடுக்கக்கூடச் சொந்தம் காணும்!

சாஸ்திரி:—(ஆச்சரியத்துடன்) இது என்ன? இவர் பெங்களூர் வியாபாரியல்லவா?

சின்னுன்:—உங்கள் தோட்டக்கார ராமன் எனக்கு மாமனுங்கோ; வயிற்றுப்பிழைப்புக்கு ஜவுளிமட்டும்தானு? எல்லா வியாபாரமும் பார்க்கிறது தானுங்கோ! நான் ஜாதியிலே பள்ளன்தானுங்கோ!

ஃ

[சாஸ்திரியார் ரொம்பவும் கோபத்துடன் ராமனைப் பார்த்து 'உன்னை விட்டேனு பள்ளப் பயலே' என்று உறுமிக்கொண்டு தலை முக்காடிட்டுத் திரும்பிப் பாராமல் ஓட்டம் பிடிக்கிருர். வீதியில் கும்பல் கூடி சாஸ்திரியாரைத் துரத்திக் கேலி செய்கிறது.]

III

[ரயில்வேஸ்டேஷனில் ஒரு ஆங்கிலேய ஹோட்டலில் சின்னுன்

திருவருட்பா பாடிய இராமலிங்க ஸ்வாமிகளைப்பற்றிக் கேவலமான தீர்ப்பொன்று முன்னர் ஹைகோர்ட்டில் வெளியாயிற்று. ஆயினும், அத்தீர்ப்பை ஜனங்கள் கவனிக்கவே யில்லை. பெரியோர்களைப்பற்றி எத்துணைக் கேவல மொழிகள் தோன்றிடினும் மறு கணத்தில் மறைந்தொழியும்.

நாகரீகப் பிரபு வேடம் தரித்து, ரகுநாத தீக்ஷிதர் வழக்கமாய் அங்கு வருகிற நேரத்தை எதிர்பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கிருன். பக்கத்தில் ஹோட்டல் பொட்லர் நிற்கிருன். ராமன் வெளியில் மறைவாக இருக்கிருன். தீக்ஷிதரும் உள்ளே வந்து நுழைகிருர்.]

ஃ

சின்னுன்:-(பொட்லரைப் பார்த்து) ஐஸ்க்ரீம் இருக்கிறதா? கொண்டு வா.

ஹோட்டல் பட்லர்:-(அப்படியே கொண்டுவந்து வைத்து) தங்களுக்கு ஆக்ஷேபனை யில்லாவிட்டால், இங்கு வழக்கமாய் வரும் ஒரு வக்கீல் ஐயரை இங்கு தங்களுடன் உட்கார வைக்கிறேன்.

சின்னுன் :—(புன்சிரிப்புடன்) எனக்கு ஒன்றும் ஆக்ஷேபனை கிடையாது. அவர் யார்?

பட்லர்:—அவர் இவ்வூரில் பிரபல வக்கீல். அவர் பெயா ரகுநாத தீக்ஷிதர்.

ஃ

[இதற்குள் தீக்ஷிதர் உள்ளே வந்து சின்னுன் பக்கத்தில் நாற்காலியில் உட்கார்ந்து மேஜையைப் பார்க்கிருர்.]

ஃ

சின்னுன்:—(தீக்ஷிதரைப் பார்த்து) சலாம் செய்கிறேன்.

தீக்ஷிதர்:—ராம! ராம! (பட்லரிடம்) இது யார்? உனக்குப் பரிச்சயமுண்டோ?

பட்லர்:—(தீக்ஷிதருடன்) இவர் அடுத்த வண்டியில் மதுரைக்குப் போகிருர். இந்த ஊருக்குப் புதிய ஆசாமி. பெரிய மனிதர் போலிருக்கிறது.

தீக்ஷிதர்:—பரவாயில்லே! யாராயிருந்தால் நமக்கென்ன? இன்றைக்கென்ன 'மேனு' (Menu.)

பட்லர்:—"சூப்" ரோஸ்ட் அண்ட் எக் ஐஸ்கிரீம் ரெடி. "டீ" ஸார்.

தீக்ஷிதர்:—பேஷ்! எல்லாம் கொண்டு வா.

ஃ

[பட்லர் 3, 4, ப்ளேட்டுகளில் யாவும் கொண்டுவர, தீக்ஷிதர் உத்ஸாகமாய்ப் புசிக்கிருர்.]

ஃ

தீக்ஷிதர்:—இன்றைக்கு 'டிஷ்' ரொம்பவும் நன்ருக இருக்கிறது. ஹே! வைதீக மடிஸஞ்சிகளும் உருத்திராக்ஷதாரிகளும் இதையெல்லாம் சாப்பிடக்கூடாதென்று முட்டாள் தனமாய்ப் பிதற்றிக்கொண்டிருக்கிருர்களே! சமீபத்தில் நடந்த யாகத்திலாவது ஆட்டுக் கொழுப்பின் ருசி பார்த்திருக்கலாமே! இவர்களுக்கு என்ன தெரியும்?" டாம் இட் ஆல்!"

சின்னுன்:—பாப்பார் இப்படிக் கண்டதைச் சாப்பிடலாமா?

தீக்ஷிதர்:—சாப்பிடக் கூடாதென்று எங்கே சொல்லியிருக்கிறது? முன்காலத்தில், இப்போதுங்கூட யாகத்தில் பிரகரணம் மாமிசம் சாப்பிட்டார்களே? அது இருக்கட்டும், நீர் இங்கு என்ன ஜோலியாக வந்தீர்?

சில வருடங்களில் உடம்பின் வளர்ச்சி முடிந்து விடுகின்றது. பிறகோ வளர்வதில்லே. மனமோ அங்ஙனமன்று; நாளாவட்டத்தில் அது வளர்ந்து பெருகிக்கொண்டே யிருக்கின்றது.

சின்னன்:—ஒன்றும் விசேஷ மில்லை. நான் மதராவில் ஹரிஜன சேவா சங்கத்தின் ஒரு தொண்டன். இவ்வூரில் ஹரிஜன இயக்கத்துக்கு விரோதமாய் ரகுநாத தீக்ஷிதர் என்ற பிரசித்தி பெற்றவர் ஒருவர் இருக்கிறாராம். அவர் தர்ம சாஸ்திரங்களில் மகா தேர்ச்சியுள்ளவராம். இவ்வூர் சனாதன தர்ம ஸேவாசங்கத்தின் காரியதரிசியாம். அவரைக்கண்டு சில சந்தேகங்கள் கேட்டுத் தர்மம் தெரிந்துகொள்ளலாமென்று வந்தேன். என் அதிர்ஷ்டவசமாய் அவர் இங்கு அவசியம் வருவார் என்று பட்லர் சொல்லி, நீங்கள்தான் அப்பெரியார் என்று தெரிவிக்கவே வெகு ஸந்தோஷமானேன்.

ஃ

[இந்த சமயம் வெளியி லிருந்த ராமன் திடீரென்று உள்ளே நுழைகிறான்.]

ஃ

தீக்ஷிதர்:—(ராமனைப் பார்த்து) இந்தப் பள்ளப் பயலை யார் உள்ளே விட்டது? (என்று கூச்சலிட்டார்.)

ராமன்:—என்ன சாமி! ஐயரின் வீட்டிலேதான் நான் வரப்படாது! இங்கேகூட வரப்படாதா? இந்த ரயில் ஏறக்கூடாதா? நம்ப மருமகன் இதோ உங்கள் பக்கத்தில் உட்கார்ந் திருக்கிறாங்கோ! அவரைப் பார்க்க வந்தேன். இதில் என்ன தப்பிதம்?

தீக்ஷிதர்:—இங்கே உன் மருமகனா?—யாருடா? அது?

சின்னன்:—நான்தான் ஸார்! என் உடையைப் பார்த்தால் பள்ளனென்று தோன்றவில்லையாக்கும்.

ராமன்:—என்ன எஜமான்களே! இந்த 'சூப்' கடு சாப்பிட்ட தோஷம் தீர எவ்வளவோ ஜெபம் செய்யப் போறீங்கோ? இந்தக் கிளப் பொட்லர் என்ன ஜாதிங்கோ? நம்முடைய அண்ணுத்தை ஆச்சே! இன்றைக்கு அமாவாசையில் இப்படித் தின்னலாமா? தங்களுடன் ஒரே மேஜையில் உட்கார்ந்து சாப்பிட்ட பெரிய மனிதரும் நம்ம மருமகன்தானே! என் பெண்ணைத் தானே அவருக்குக் கொடுத்திருக்கு. உள்ளூர் பறப்பயல் மட்டும் கூடாதாக்கும். வெளியூர் பறப்பயலா யிருந்தால் தோஷமில்லை என்று சாஸ்திரத்திலே சொல்லி யிருக்கா சாமி. உங்க தீண்டாமையின் ரகசியம் வேடிக்கையா யிருக்கே.

ஃ

[தீக்ஷிதாது முகத்தின் அழகை என்னென்று சொல்ல? அசடு தட்டிவிட்டது. மூஞ்சி தொங்கி விட்டது. புசித்துக் கொண்டிருந்த முட்டையைப் பாதியில் நிறுத்தி விட்டார். பட்லரை விரைக்கப் பார்த்துக் கோபம் கொண்டார்.]

ஃ

தீக்ஷிதர்:—(பொட்லரைப் பார்த்து) என் அப்பா. அவர்களை இங்கே விட்டாய்? வேறு பிரத்தியேகமான இடத்தில் உட்காரவைக்கப்படாதா?

பட்லர்:—ரயில்வே ஸ்டேஷனில் இந்த ஜாதிபேதமெல்லாம் பார்த்தால் கிளப் வியாபாரம் நடப்பதெப்படி?

[தீக்ஷதர் முணுமுணுத்துக் கொண்டு கோபத்தோடு

கால ஸமுத்திரத்துள் எத்தனை அரிய கலைவல்லோர்—வீரர்—புண்ணிய புருடராதியோரின் வியப்புக்குரிய செயலுங் கீர்த்தியும் மூழ்கித் தோற்றுது போயின?

வெளியே செல்கிறார். இவ்விஷயம் ஊர் முழுதும் பரவி விடுகிறது. சாஸ்திரியாரின் மீது ராமன் கடன் தொகைக்காக வியாஜ்யம் செய்து அவரை வாரண்டில் பிடித்துவிடுகிறான். அதன்மேல், ஜாமீன்மீது விடுபட்ட சாஸ்திரியார் கேணியில் ஜலம் எடுத்துக் கொள்ளும்படி ராமனை வேண்டுகிறார். கெஞ்சினால் மிஞ்சுவதும், மிஞ்சினால் கெஞ்சுவதும்தான் தீண்டாமையின் ரகசியமாம்.]

எஸ். வி. ஸ்ரீனிவாஸன்,
பீ. ஏ., பீ. எல்.

ஒரேவீட்டில் இருக்கிற இருவருக்கு இரண்டுதினுசில் தனித் தனிக் கடிதங்கள் எழுதுவது. ஒருவருக்குக் கடிதம் எழுதியிருப்பதை மற்றவர்க்கு எழுதும் கடிதத்தில் தெரிவியாது மறைத்துவிடுவது. இருவரிடமிருந்தும் தனித்தனிப் பதிலை எதிர்பார்ப்பது. இந்த இருவருக்கும் இடையே பேதம் விளைவிக்க முயல்வது. இத்தகையோர் மிக்க பயங்கரமானவர்களாவர்.

நடிப்பதும் பார்ப்பதும் வெவ்வேறு வேலை.

நீ நாடகத்தைப் பார்த்து சந்தோஷப்படுவது, பிறருடைய கல்யாணத்தைப் பார்த்து ஆநந்தமாக இருப்பதற்குச் சரியாகும். நீ ஒரு நடிகனாகவே அந்த நாடகத்தில் நடிக்கத் தொடங்கினால் அப்போதுதான் அதில் அதிக அனுபவமும் பொறுப்பும் ஏற்று, நாடகம் பார்த்ததைவிட, நடிகனாக நடித்ததில் அதிக ஆநந்தமிருப்பதாக உணர்ந்துகொள்வாய். ஒன்றில் சம்பந்தப்பட்டு அதன் கஷ்டங்களை நுகர்ந்து கண்டு அதிலிருந்து பெறும் ஆநந்தமே பெரியது. பிறரது விவாகத்தைப் பார்த்ததைவிட, நீயே விவாகம் செய்துகொண்டு ஒரு மாப்பிள்ளையாகி, அந்தப் பாடுகளையும் செலவுகளையும் உணர்ந்து அதிலிருந்து காணும் இன்பமே ஒப்பற்றதென்பதைச் சொல்லவும் வேணுமா?

சிலர் மற்றவர்களுடைய நட்பிலிருந்தும் விலகிக்கொள்ள நினைக்கிறார்கள். மற்றவர்களோ அந்த விலகுதலுக்கு ஆசி கூறி, அந்த நட்பின் ஆயுள் காலம் அவ்வளவு தானாகையால் அது முடிந்துவிட்டதாக்கும் என்று எண்ணி சாந்தமாகவே இருந்து விடுகிறார்கள். ஆனால், விலகிக் கொண்டவர்கள் நட்பாயிருந்த காலத்தில் காட்டிய அன்பையும் உதவிகளையும் பிராணனுள்ள வரையில் மறவாமல், விலகினோர்க்கு ஸதா மங்கள வாழ்த்து கூறியபடியே இருக்கிறார்கள்.

ஸ்ரீ சைதன்ய சரித்திரம்.

ஒரு பகுதி.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்யருக்கு நிமை என்பது செல்வப் பெயர். அவரது முதல் மனைவியின் பெயர் லக்ஷ்மி தேவி. அந்த அம்மை நிரியாணத்தை யடைந்ததால், விஷ்ணுப்பிரியை என்னும் வேறொரு பெண்ணை விவாகம் செய்வித்தனர். அம்மங்கை சநாதனர் என்னும் சிறந்த பிராமணருடைய புத்திரி. அவள் சில காலமாக நிமையைப் புருஷனாக அடைய இச்சைகொண்டு பிரதிதினமும் கங்கையில் நீராடி ஜெபம் செய்த பின்னர், நிமையின் தாயாகிய சசிதேவியை நமஸ்கரித்து அவளுடைய ஆசியைப் பெற்று வந்தாள். கடைசியாக விஷ்ணுப்பிரியையின் விருப்பம் நிறைவேறியது. இந்த விவாகம் நடந்த பின் சசிதேவி தன்னைப் பாக்கியசாலியாக நினைத்துக்கொண்டாள். மிகுந்த அழகும், நன்னடக்கையும், பிரீதியுமமைந்த விஷ்ணுப்பிரியை தனக்கு மருமகளாகக் கிடைத்தது முன் ஜென்மத்திற் செய்த நல்வினையின் பயனென்று எண்ணி, கடவுளின் கருணையை நோக்கி மனமுருகுவாள். இவ்வாறாகச் சில தினங்கள் கழிந்தன.

ஃ

நிமை உத்ஸாக மனத்தினராய் தமது நேசர்களை யழைத்துக்கொண்டு கடைவீதியிற் சென்று ஒவ்வொரு வர்த்தகர்களிடமும் ஸமத்காரமாய்ப் பேசி, அவர்களது மனத்தை இழுத்துத் தமக்கு வேண்டிய சரக்குகளைப் பெற்றுக்கொண்டார். பிறகு அவற்றின் கிரயத்தைக் கொடுக்கத் தம்மிடம் பணம் இல்லை யென்றார். பக்திப் பரவசத்தில் மூழ்கிய வர்த்தகர்கள் விலையின்றி எடுத்துச் செல்லுமாறு வேண்டிக்கொண்டனர். நிமை அவ்விதமே சரக்குகளுடன் தமது இல்லத்திற்குத் திரும்பி வந்து, அவற்றின் கிரயத்தை முழுதும் கொடுத்தனுப்பி விட்டார். இந்த ஆச்சரியத்தை அக்காலத்திலிருந்தவர்களே வர்ணிக்கக் கூடும்.

ஃ

ஊரிலுள்ள சிலர் "அதோ அரசன் போகிறார்" என்று நிமையைக் கண்டு பரிகாசம் செய்வர். ஒரு நாள் ஸ்ரீதரர் என்னும் வைஷ்ணவரை நிமை பரிகாஸம் செய்யத் தொடங்கவே, அவர் "ஐயா! நான் ஏழை, என்னைத் தொந்தரவு செய்யாதேயுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். அப்போதும் அவரை விடாமல், "நீர் கங்கையம்மனைப் பூஜிக்கிறீரே; அதைப்போல் என்னையும் பூஜை செய்யும்" என்றார். வைஷ்ணவர் மனம் வெறுத்து நிமையை நிரீசுவரவாதி யென்று நிச்சயித்துத் தமது இல்லிற் கேகினார். இவ்வளவு வெறுப்பைக் கொண்ட ஸ்ரீதரர் பிற்காலத்தில் சைதன்யரது சிஷ்யர்களுள் ஒருவ

தனக்கு ஒன்றிலே நம்பிக்கையில்லாத விஷயத்தில் அவர் செய்யும் சிபாரிசு, கேட்போர் மனதைக் கவரும் சக்தியுடன் எவ்விதமிருக்கும்?

ராய் ஆய்விட்டதை யறிய யாருக்குத் தான் வியப்பு உண்டாகாது?

ஃ

நிமையின் உல்லாஸ முகமும், சூது வினையற்ற சுபாவமும், பெருங் கருணையும், பிராணிகளிடத்திலுள்ள பிரேமையும், சரீர அழகும், ஆச்சரியமான புத்தியும் அவருடைய நேசர்களின் மனதை இணைத்துக் கட்டின. இதற்குமுன் அவரை வெறுத்து வந்த அநேகர் அவர்பால் விருப்பம் கொள்ளலாயினர். ஒரு நாள் சைதன்ய பகவான் கங்கைக்குப் போய்ப் பிதுர் சிரார்த்தம் செய்ய விரும்பி, தமது தாயின் அனுமதியைப் பெற்று சிஷ்யர் குழாத்துடன் ஆநந்தமாய்ப் பிரயாணமானார். மார்க்கத்தின் மத்தியிலுள்ள 'மந்தரம்' என்னுமிடத்தில் அவருக்கு ஜ்வாலை வீசுவது போல், தாபஜ்வரம் கண்டு தேகத்தை எரிக்கத் தொடங்கியது. இந்த ஜ்வரம் நிமையின் முகமலர்ச்சியையும், உத்ஸாகத்தையும் தொலைக்க வந்ததே யென்றெண்ணிக் கூட இருந்த நண்பர்களும் சிஷ்யர்களும் வியஸன மடைந்தனர். கடைசியில் பகவத் கிருபையால் ஜ்வரம் நீங்கி சரீரத்தில் சக்தியுண்டான தக்ஷணம் மந்தர நகரை விட்டுப் பிரயாண மாகிக் கயையை யடைந்தார்.

ஃ

கயை நகரில் பிரவேசிக்கு முன் அதைக் கைகூப்பித் தொழுது, "ஏ! புண்ய பூமியே! என்னைப் புனிதனாக்கு" என்று பிரார்த்தித்து விஷ்ணுபாதத்தின் அருகே சென்றார்: அங்கே செய்யவேண்டிய சடங்குகளையும் செய்து முடித்து, ரமணீயமான ஸ்ரீ கிருஷ்ணனது பாதாரவிந்தத்தில் புஷ்பங்களை வருஷித்துப் பிண்டப் பிரதானங்களைப் போட்டு சிரார்த்தத்தை முடித்தார். இதன் பிறகு ஸ்ரீ கிருஷ்ணனது பாதாரவிந்தத்தைச் சற்று நேரம் உற்றுப் பார்க்கையில் ஆநந்தம் பொங்கி ஸ்மரணை தப்பி ஒரு சித்திரப் பதுமைபோல் அசைவற்று நின்றார். அவருடைய கண்களிலிருந்தும் ஆநந்தக் கண்ணீர் பெருகி ஆறாய் ஓடி அருகே யிருக்கும் பல்குனி நதியில் விழுந்தது. விஷ்ணுபாதத்திற் கருகே நின்ற எல்லோரும் பொற் பிரதிமைபோல் அசைவற்று நின்ற நிமையைக் கண்டு, "ஓகோ! இவர் அரசனைப்போல் விளங்குகின்றார். ஒரு ஸமயம் கிருஷ்ணனே இப்படி அவதரித்து வந்தாரோ! முன் கரிய மேனியனாய் வந்து கடாக்ஷித்தோம். இப்போது பொன் மேனியனாக வருவோ மென்றெண்ணி, பகவான் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியே இரண்டாவது அவதாரம் செய்திருக்கிறாரோ" வென்று ஸந்தேகித்தனர். நிமை சில நேரம் அசைவற்று நின்று கிருஷ்ணப் பிரேமை அதிகமானதால் திடீரென்று கீழே விழ ஆரம்பித்தார். நல்ல வேளையாய் நிமையின் எதிரே ஈசுவரபூரி என்னும் ஸாது தற்செயலாய் வந்திருந்ததால் அவரைக் கீழே விழாது தடுக்க ஏதுவாயிற்று. பிறகு சிறிது களை தெளிந்தெழுந்து தாம் இறங்கியிருந்த விடுதிக்குச் சென்று, ஆங்கு ஈசுவர பூரிப் பெரியோருக்கு உணவளித்துத் தாமுமுண்டு, அவரைத் தமக்கு ராதாகிருஷ்ண பக்தியாகிற

ஒருவரைப்பற்றிப் பத்திரிகையில் தூஷணையாக எழுதியபோதிலும், அந்த ஒருவரை மதிப்புடன் நினைப்பவர்கள் எந்தக் காலத்திலுமே உயர்வாகத் தான் கருதுகிறார்கள். பத்திரிகையில் வெளிவந்த விஷயத்தை அவர்கள் லக்ஷியம் செய்கிறதில்லை.

உபதேசத்தைச் செய்யவேண்ட, அவ ரும் உபதேசங்கூற, அன்று முதல் பக்திப் பிரேமையுடன் கூச்சலிடு வதும், சுற்றிலும் நடப்பதை முற்றி லும் மறப்பதும் ஆகி கிருஷ்ண பைத் தியம் மேற்கொண்டார். பிருந்தா வனம் சென்று என் கண்ணனைப் பார்த்தாற்றான் என் கண் மகிழ் வெய்தும் என்று கூறி எழுந்தார். ஆயினும், அங்கிருந்தோர் பத்திரமாய் நவத்வீபம் கொண்டு வந்து தாயாரி டம் ஒப்புவித்தனர். ஸ்வாமிகளின் புதிய மாறுதலைக் கண்ட அன்னையார் "உலக வாழ்க்கையிற் களிப்புண்டு ம்மை யெல்லாம் மகிழ்வுறுத்து வன் என்று நாம் எதிர்பார்த்திருக்க, இவ்வாறாயினனே!" என்று உள்ளுக் குள் உருகினர்.

(முற்றுப் பெறவில்லை.)

[மற்ற விவரச் சுருக்கத்தை "அமிர்தகுணபோதினி" ஏழாம் வால் யம் 270-ம் பக்கத்தில் காண்க.]

ஓயாமல் நச்சு நச்சு என்று நச்சுப் பிடித்து ஸதா தொல்லை தருகிற சில அற்ப குள்ளநரிகள் உண்டு. இவர்களுக்குப் பிறரது காலத்தின் அருமை தெரியாமல் வெகு நேரம் பேச ஆரம்பித்து விடுவார்கள். பிறரது அவசரம் தெரியாமல் அந்த சமயத்தில் ஏதாவது கேட்டுப் பெற்றுச் சுற்றிக்கொண்டு போகப் பார்ப் பார்ப்பார்கள். இத்தகையோ ரிடத்து ஒதுங்கி விலகியிருப் பதே தப்பித்துக்கொள்ளும் வழி.

வாக்கு தவறுதிருக்க வழி எப்படி?

எப்பொழுதும் வாக்குக்கு மதிப்புவேண்டும். ஒருவ வருக்கு ஒரு வாக்கு தந்து விடில் என்ன கஷ்டங்கள் வரினும் கொடுத்த வாக்கில் பிசகவே கூடாது. அதுதான் அதிக மதிப்பையுண்டுபண்ணும். தன்வாக்கைக் காப்பாற்றிக் கொள்ளவே ஒருவருக்கு எண்ணம். தன் வாக்குத் தவறு திருக்க எவ்வளவோ முயற்சி எடுத்துக்கொள்கிறார். தன்னை இன்ன இடத்தில் சந்திக்கும்படியும், ரயிலுக்கு வரும்படியும் ஒரு வாரத்துக்குமுன்பே கடிதம் எழுதுகிறார். பிறகுநேரும் சம்பவங்களால் முன்வாக்கு தந்த காலத்தில் புறப்பட முடி யாமலே போய் ஏமாற்றமாகிறது நாளைக்குப் பணம் வரு மென்று எண்ணி ஒருவர் நாளைக்குத் தன் கடனைத் தந்து விடுவதாகக் கூறுகிறார். நாளையோ பணம் வருவதில்லை. கட னும் தீர்க்க முடிகிறதில்லை. அடுத்த நிமிஷம் நேர்வது இன்னதென்றறியாத அஞ்ஞான வாழ்வில் தன் சக்தி யானுசாரமே வாக்கைக்காப்பாற்ற முடிகிறது; முற்றிலுமே என்றைக்கும் முடிகிறதில்லை தன்னால் ஆன வரையில் வாக்கை நிறைவேற்றலாம். அவ்வளவே வாக்குத்தவறு திருக்க உன் பேச்சுடனே ஈசனையும் வணங்கிவேண்டுக.

6-ஆங்கில காதற் கடிதங்கள்.

(283-ம் பக்கத் தொடர்ச்சி.)

4-வது கடிதம்.

(அந்தப் பெண்ணின் பதில்.)

துரையே!

உமது காகிதத்தை வாசித்துப் பார்க்கையில், நான் உம்மை மெத்தவும் இழுப்பில் விடுகிறவளாக எண்ணுகிறீரென்று எனக்கு அச்சம் உண்டாகின்றபடியால், என் உள்ளத்தில் இருக்கும் மெய்யான கருத்துகளை, மிக நியாயத்துடன் அறிய வேண்டியவராகிய உமக்கு மறைப்பது நன்றல்ல.

ஃ

துரையே! நான் சொல்லிய ஆக்ஷேபங்கள் மிகவும் ஆழ்ந்த யோசனையாற் சொல்லப்பட்டவைகளேயல்லாமல் எளிதாக நினைத்து எழுதப்பட்டவைகளல்லவென்று நிச்சயமாகக் கூறுகிறேன். அன்றியும், எனது ஹஸ்தத்தையும் ஹிருதயத்தையும் கொடுக்க நான் எண்ணியிருக்கும் உம்மை மோசம் செய்ய ஒருவிதத்திலும் எனக்கு மனமிராது. அப்படிச் செய்வேனாகில், நீங்கள் சொல்லியதைப் பார்க்கிலும் அதிக பொல்லாத குற்றமா யிருப்பதுந் தவிர, மன்னிப்புக் கேட்கத் தகாததாயு மிருக்கும். கள்ளத்தனமானது எவ்வகையாகக் காட்டப்பட்டாலும் கள்ளத்தனமே. அப்படிச் சிறிய காரியத்திற் செய்கிறவர்கள் பெரிய காரியத்திலுஞ் செய்யக்கூடியவர்களே.

ஃ

நான் சொல்லிய ஆக்ஷேபங்களுக்கு நீங்கள் எழுதிய உத்தரம் முழுதும் சமாதானமாயிருப்பதால், நான் உமக்குப் பத்தினியா யிருப்பதுமன்றி, "பேருக்குமட்டும்" உமது பிள்ளைகளுக்குத் தாயாகவும் இருக்க இப்போது எனக்குச் சம்மதியாயிற்று. "பேருக்கு மட்டும்" என்று நான் சொல்ல நேர்ந்ததெதற்கெனில், உமது பிள்ளைகளை என் பிள்ளைகளைப்போலவே தயவோடு நான் நடப்பிக்க வேண்டியவளா யிருந்தாலும் எனக்கு அந்த (சாமானியப்) பேரே வருமொழிய வேறில்லை. அப்படி யிருந்தபோதிலும், உம்முடைய இனிய ரூபமும் சகவாசமும் பேச்சும் எனக்கு இஷ்டமாயிருப்பதுமன்றி. உமது கீர்த்திக்கும் பழுதில்லாதிருப்பதால், எனக்கு இதுவரையிலும் தெரியாத சமுசார வாழ்வைச் சுகித்தறிய இஷ்டமாயிருக்கிறேன். ஆகிலும், உள்ளபடி சந்தேகத்தோடே யல்லாது வேறல்ல. இல்வாழ்வைப்பற்றி ஏதும் தெரியாத எனக்கு சந்தேகங்கள் எழுவதும், எப்படியாமோவென்று பின்னடை

சில பத்திராசிரியர்கள் தங்களின் சகோதரப் பத்திராசிரியர்களை மதிப்பதே யில்லை. தங்களுக்கே மூன்று கொம்பு முளைத்திருப்பதாகத் தங்களை ஆகாசத்தில் உயர்த்திக்கொள்கிறார்கள். ஆனால், பத்திரிகையிலோ படிப்பவர்கள் பிரமிக்கும்படி சகோதர ஒற்றுமையைப்பற்றி வெகு திறமையோடு எழுதுகிறார்கள்.

வதும் சகஜந்தானே. ஆதலால், யாதொரு இடையூறு சம்பவித்தாலும் அது என் குற்றத்தால் இருக்கலாமே யொழிய, உமது குற்றத்தாலிராது.

ஃ

இனி வருங் காரியங்களை நாம் அறியக்கூடாத வகையில் திரையால் மறைப்புண்டிருத்தலால், ஒருபோதுந் தவறாத கடவுளுடைய சித்தத்துக்கு அவைகளை நாம் மனஸ்பூர்வமாய் ஒப்புவிக்கவேண்டியதுதான். ஆதலால், இனி உமக்கு நான் ஆலசியம் செய்வதே யில்லை.

ஃ

நேற்றையதினம் என் தமயன் 'பிரைட்' என்கிற பெண்மணியை விவாகம் செய்துகொண்டுவிட்டபடியால், அவர்களிருவருக்கும் இம்மையிலும் மறுமையிலும் ஸகல செல்வ சௌக்கியங்களும் உண்டாகக் கடவது. என் தமயனுருடைய கடிதமும் இதற்குள் அடக்கமாகி உமக்கு வருகின்றது.

ஃ

பிராணகாலமளவும் உம்முடன் கூடி வாழ இனி எனக்கு ஒரு தடையுமில்லை யென்று உமக்குள் நிச்சயமாய் உறுதிகொள்ள வேண்டுகிறேன். விவாகத்திற்குக் குறிக்க வேண்டிய சுபதினத்தை முழுதும் உமது இஷ்டப்படி தீர்மானித்துக் கொள்ளுங்கள். நியாயப்படி நீங்கள் இதைவிட அதிகமாய் என்னிடமிருந்து அறியவேண்டுவதொன்றுமில்லை யென்று கருதுகிறேன்.

ஃ

நான் நம்பியிருப்பதுவும் ஆசைப்படுவது மாகிய எல்லாம், நீங்கள் முன் கடிதத்தில் சொல்லியிருக்கும் சத்திய வசனங்களின்படி என்னை நடப்பிப்பீரென்பதேயொழிய வேறில்லை. அப்படி நடப்பித்தால் இவ்வுலகத்திற் காரியங்களின் ரீதிக்குத் தகுந்தபடி நான் பாக்கியவதியாயிருக்கத் தப்பாதென்று நினைக்கிறேன். அதற்கு மிஞ்சிய ஆவலாதி அற்புதங்கள் எனக்கு வேண்டியதில்லை. நீங்கள் லண்டனுக்குப் புறப்படுமுன்னே, சந்தேகமில்லாமலுமக்கு மெத்தவும் வேலை யிருக்குமாதலால், நான் உம்மைக் காணுமளவும் ஒரு கடிதம் எனக்கு நீங்கள் எழுதினாற் போதுமானது. இவ்வாறாக நமது விவாக விஷயம் இனிதாய் முடிவுபெறுகையில், யூத சாதியார் சொல்லும் வழக்கப்படி "நீங்கள் திருப்தியும் சந்தோஷமும் அடையக்கடவது" என்று உங்களை நான் வாழ்த்துகிறேன்.

தங்கள் அன்பிற்குரிய

மேரி.

ஐந்தாவதாகிய
அப்பெண்ணின் தமயனது
கடிதம்
அடுத்த சஞ்சிகையில் வரும்.

ஒருவன்சிரித்துப் பேசவரும்பொழுது, அவன் ராங்கியாய், முறைப்பாய், அலக்ஷியமாய் முன்பு இருந்ததையும் எதிர்த்து ஏசியதையும் எண்ணிக்கொண்டு விடுவாயானால், அப்பொழுது நீ அவன் சிரிப்பில் ஏமாறாதபடி உடனே எச்சரிக்கைப்பட முடியும்.

மனக்கசப்பு ஏற்படுவது எதனாலென்றும், அதைச் சீர்திருத்த வழி எதுவென்றும் ஒருவர் கேட்கிறார்.

கலகத்தை யடக்கும் ஔஷதி.

"பிழை செய்தவனுடைய குற்றத்தைப் பொறுக்கும்படி, பிழை செய்யாதவனைத் தூண்டுவதே—கலகத்தை அடக்கி சமாதானம் செய்வதற்கு முக்கியமான மருந்து" என ஒருகால் ஓர் நல்ல மந்திரி சொல்லியிருக்கிறார். மற்றொருவர் சாந்தமே பிரதானமென மேற்கொண்டு நடந்து வந்தார். அவரை இன்னொருவர் நோக்கி, "ஐயா, உமக்கு எங்ஙனம் சச்சரவினின்றும் விட்டு விலகச் சாத்தியப்பட்டிருக்கின்றது" என வினவ, அவர் "சண்டை முழுதும் வெகுண்டவன் பங்கேயன்றி நமக்கு உரியதன்று" என நான் நினைத்திருப்பதினாலே தான் என்று சாந்தமாகச் சொன்னார்.

ஃ

ஆப்பிரிக்கா தேசத்தில் ஒருவன் தன் வீட்டுக்கு சமீபத்திலிருந்த மற்றொருவனைப் பார்க்கப் போயிருந்தான். அவ்வீட்டில் மனைவியும் கணவனும் முன்னே எப்பொழுதும் சச்சரவு பட்டுக்கொண்டிருந்தது போய், அப்பொழுது மிகவும் ஒற்றுமையாயிருந்தார்கள். அது தெரிந்து அவன் அவர்களைப்பார்த்து, "நீங்கள் இப்பொழுது எங்ஙனம் சாந்தமாய் வாழ வசப்பட்டீர்கள்" என்று வினவ, அவ்வீட்டுக்காரன், "ஐயா, சிலவேளை என் பெண்சாதிக்கு விருப்பமில்லாத சில வார்த்தைகளை யான் சொல்லுவேன்; அவளும் எனக்கு இஷ்டமில்லாத சிலவற்றைச் சொல்லவாவது சொல்லுவாள்; அல்லது செய்யவாவது செய்வாள். அப்பொழுது நாங்கள் கலகப்படும்படி வரும். இப்பொழுதோ அப்படிப்பட்ட வேளைகளில் ஒருவர்க்கொருவர் கை குலிக்கிக்கொண்டு கடவுளைத் தோத்திரம் செய்ய ஆரம்பிக்கிறேம். உடனே எங்களுக்கு அமைதியுண்டாகின்றது" என்றனன். ஆ! அது சரியே! இந்த மருந்தை ஒவ்வொருவரும் தங்களின் சொந்த அனுபவத்தில் செய்து பார்க்கலாம். நமக்குச் சச்சரவு உண்டாகுமென்று தோற்றும்போது, சற்று நிதானித்துத் தெய்வ ஸ்தோத்திரம் செய்யத் தொடங்கிக் கொண்டால், அந்த வேளையில் தோன்றக்கூடிய கோபாக்கினி வளமாய் எழும்பி வெளிவருமுன்னமே சமனமாகிவிடும்.

ஃ

ஓர் கீழ்நாட்டரசன் புத்திமான்களாகிய தன் மந்திரிகளில் இருவரைப் பார்த்து, "மந்திரிகளே! என் ஜனங்களுக்கு எவ்விதத்தில் மிகுந்த நன்மை செய்யவும், சந்தோஷப்படுத்தவும் கூடுமோ அதனைச் சொல்லவேண்

தம்மை ஆர்வத்துடன் காண வந்தவர்களைச் சிலர் அலக்ஷியமாயும் கர்வத்துடனும் நடத்துகிறார்கள். தாங்கள் வெகு பெருமையில் நிற்பதுபோல் காண்பித்துக் கொள்கிறார்கள் இவ்விதம் கேவலப்படுத்தப்பட்டோர் மறுபடியும் வந்து எந்த நாளும் சந்திப்பதேயில்லை. பரஸ்பரம் உபசரிப்பு இருந்தால் தான் சந்திப்பு.

டும்'' என்று கேட்டு, அதற்கு உத்தரம் யோசித்துச் சொல்லும்படி அவ்விருவர்க்கும் இரண்டு மாதகாலம் தவணை கொடுத்தான். அதன்முடிவில அந்தப் புத்திமான்கள் அரசன் சந்நிதானத்துக்கு வந்தனர். அவ்விருவரில் ஒருவன், அரசன் குடிகளைப் பாக்கியவான்களாகச் செய்வதற்கு வேண்டியவையென்த் தனக்குத் தோற்றிய இருநூறு விதிகளையும், அப்பொழுது கடிதாசிச்குப் பதிலாக அந்நாட்டில் வழங்கிவந்த ஒருவகை மரப்பட்டைகளில் எழுதிக்கொண்டு, அவற்றைச் சுருளாகச் சுருட்டித் தோள்மேலிட்டுச் சுமந்து வந்தான். மற்றொருவனோவென்றால், தன் மனதில் ஓர் சாதுர்யமான எண்ணத்துடன் வெறுங்கையனாய் எதிர் வந்து நின்றான். அவர்களுள் ஒருவன், முதலில் அவ்விருநூறு திட்டங்களையும் படிக்கக் கேட்டு அயர்வுற்று, அவைகளைக் கேட்டவுடன் மற்றொருவனுடைய ஆலோசனையை வினவினான். அதற்கு அவன் "கடவுளை நேசிக்க'' என்னு மிரண்டு சிறிய வார்த்தைகளைச் சொல்லி நிறுத்திவிட்டான்.

ஃ

அதற்கு அரசன், "நீர் இப்படிச் சொன்னீரே, இதன் கருத்து என்ன? நான் என் குடிகளை எங்ஙனம் பாக்கியவான்களாகச் செய்திடலாம்? என்று உம்மைக் கேட்டேனே யொழிய, சுவாமியைக் குறித்து நான் என்ன செய்யவேண்டிய தெனக் கேட்கவில்லையே'' என்றனன்.

ஃ

அதற்கு அந்தப் பண்டிதன், "உண்மையே, கடவுளைப் பூரணமாய் நேசித்தால் உமக்கும் உம்முடைய குடிகளுக்கும் மிகவும் விசேஷமான பாக்கியம் உண்டாகும்'' என்று சமாதானம் சொன்னான். அவன் சொன்னது அரசனுக்கு மிகவும் ஏற்ற சமாதானமாகவே இருந்ததால் அந்த மந்திரியைக் கொண்டாடினன்.

ஃ

"தெய்வமிகழேல்'' என்றபடி கடவுளைப் பழிக்காமல், தெய்வபக்தியுடையவர்களாகி, அவரவர் செய்ய வேண்டிய கடமைகளைத் தவறாமற் செய்துகொண்டு வருபவர்களுக்கு ஒருநாளும் எவ்விதமான குறைவும் நேரிடாததுடன், கலகத்தின்போது கொள்ளவேண்டிய சாந்தத்தையும் பெற அவர்கள் தகுதியுடையவர்களாவார்கள்.

ஃ

இன்னொரு புத்திமான் அவரைப் பிறர் எவ்வளவு கோபித்த போதிலும், அவர் பதில் சொல்லாதவராய், வெறுமனே அவற்றைக் கேட்டவாறாக மட்டுமிருப்பது வழக்கம். என் அவ்விதம் இருக்கிறீர் என்று அவரை ஒரு நண்பர் கேட்டதற்கு, "நான் எதையும் மறுதினம் வரையில் சாந்தமாய் யோசித்த பிறகு ஒரு முடிவுக்கு வருவது வழக்கம்; உடனே எதற்கும் பதில் சொல்லி விடுவது கிடையாது; அத்துடன் கலகத்தை யடக்க மௌனமே சிறந்த ஔஷதம் என்பது என் துணிபு. ஒருவர் பேசும்போது பதில் பேசாதிருந்து விடுவதே பேச்சை சீக்கிரம் முடிவுக்குக் கொண்டுவர வழி என்று தெரிந்திருக்கிறேன். கலகம் ஆரம்பிக்கும்

ஆசிரியரோடு முடிவடைந்து விடுகிற பத்திரிகைகளே தமிழ்நாட்டில் அதிகம். ஆசிரியன் காலத்திலேயே நின்றுவிட்ட பத்திரிகைகளும் எண்ணில. ஆசிரியர்களின் காலத்திற்குப் பிறகும் மற்றவர் கை மாறி நடக்கும் பத்திரிகைகள் லோகோபகாரி, சுதேசமித்திரன் இரண்டே தான்.

போது கலகக்காரர்களின் இதுவரை வெளிவராதிருந்த துர்க்குணங்கள் வெகுவேகத்துடன் வெளிவருவதால், அவற்றைத் தெரிந்துகொள்வதில் கவனத்தைச் செலுத்துகிறேன். கலகம் என்று அந்த வேளையை எண்ணுமல், என் மனதையும் வாயையும் அடக்கிக்கொண்டு, நற்புத்தியும் நல்ல அனுபவமும் பெறுகிற காலமாக நினைத்து விடுகிறேன்” என்ருர்.

தங்களின் தவறுதல்களையும் குற்றங்களையும் பிறர் அறிந்து எழுதுகையில், அதை சாமர்த்தியமாக மூடி மறைத்து வாதம் செய்பவர்களுக்கும், எழுதும் கடிதங்களிலெல்லாம் குற்றமே கண்டுபிடிப்போருக்கும் எவ்வித கடிதமும் வரையாமலிருப்பதே உத்தமமாகும்.

ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்.

“ஒப்பனை கடந்த அப்பனே வாராய்
அழகுக்கோ ரணியே யையனே வாராய்
குழலினி தூதிக் குழகனே வாராய்
மையலின் மயங்கி மனந்தடு மாறுமேன்
இன்னல் தீர்க்க இறைவனே வாராய்
நன்னல மருள நாதனே வாராய்
அழகைக் காட்டி யகன்றது மேனே
மனதைக் கெடுத்து மறைந்தது மேனே
புன்னகைக் கோலமும் புனிதவோய் யாரமும்
இன்னிசைப் பாடலு மினியநல் லாடலும்
விளங்கவே வாராய் விசனம தோழிப்பாய்
களங்கமு நீக்கிக் கடுகியே வாராய்.”

என் அப்பனே! ஒப்பிலா மணியே! தேனினுமினித்துப் பாலினுஞ் சுவைத்த தெள்ளிய வமுதே! எனக்குன் கருணை வாராதோ! பக்தி யமுதம் தாராதோ! அடியா ரோடுனைச் சேராதோ! என் மனம் ஓராதோ! கருணைசெய்.

T. பக்தவத்ஸலம், பி. ஏ.,

ஒருவர் ஒரு பொருளை வைத்திருந்து, அதைக் கேட்டு அவர் தராவிடில் அவரது குணத்தைச் சோதிப்பதற்காக அதை ஆயிரமுறை கேட்டு, அவர் கடைசிவரையில் தர மறுத்துவிடுவதைத் தெரிந்துகொள்வது நல்லது. எதையும் கடைசிவரையில் சோதித்துப் பார்த்துவிட வேண்டும்.

நாகானந்தம்.

(-310ம் பக்கத் தொடர்ச்சி.)

அமுதத்தின் பெயரைக் கேட்டவுடனே கருடன் மகிழ்ந்து "சரியான சமயத்தில் இக்கிழவி எனக்கு அமிருதத்தின் பெயரை நினைவிப்பித்தாள். இப்பொழுதே நான் தேவலோகஞ் சென்று தேவேந்திரனிடமிருந்து அமுதத்தை வாங்கிவந்து ஜீமூதவாகனனை மாத்திரமன்றி இதுவரையில் நான் கொன்ற பாம்புகளையும் பிழைப்பிக்கிறேன்." என்றுகூறி, உடனே பறந்து சென்றான்.

∴

கருடன் சென்றவுடனே ஜீமூதகேது சங்கசூடனைப் பார்த்து "அடே சங்கசூட! வீணாகப் பொழுதுபோக்குவதிற் பயனில்லை. நீ உடனே சிதையடுக்கு. ஜீமூதவாகனனுடன் நாங்களும் உயிர் துறப்போம்." என்று உத்தரவிட, சங்கசூடனும் சிதையைத் தயாரித்தான்.

∴

ஜீமூதகேதுவும் அவன் மனைவியும் சிதையில் விழ ஆயத்தமாயினர். மலயவதி கைகூப்பி "கௌரிதேவி! நீயும் பொய்யுரைப்பாயோ? 'வித்தியாதர சக்ரவர்த்தி உன்னுடைய கணவனாவான்.' என்ற உன் வரமும் பொய்யோ? இதெல்லாம் நான் முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனே." என மொழிந்தவுடனே பக்த பராதீனையாகிய கௌரிதேவி அவளுடைய துக்கத்தைச் சகியாமல் அவள்முன் தோன்றினாள்.

∴

"ஜீமூதகேது அவசரப்படாதே! மலயவதி! என் வரம் எப்படிப் பொய்யாகும்?" என வாய்மலர்ந்து கௌரிதேவி தன் கமண்டலுவிலிருந்து சிறிது ஜலத்தை யெடுத்து ஜீமூதவாகனன்மேல் தெளிக்க, துயிலிலிருந்து கண்விழித்த மனிதன்போல் உடனே அவன் உயிர்பெற்றெழுந்துக் கைகூப்பி, "பிராணிகள் விரும்பும் பொருள்களை யெல்லாம் கொடுக்க வல்லவளே! சரணமடைந்தவரைக் காப்பவளே! வித்தியாதரர்களால் தொழப்படும் கௌரியே! நான் உன்னை வணங்குகிறேன்." எனத் துதித்தான்.

∴

இதற்குள் தேவலோகத்துக்குச் சென்ற கருடன் அமிருதத்தைப் பொழிய. எல்லா நாகங்களும் உயிர் பெற்றெழுந்து, உடலிற் சிறிதும் காயமின்றி, வேகமாக சமுத்திரத்தில் ஓடிப் புகுந்தன.

∴

ஒருகாலத்தில் தமிழ்நாடு முழுமையும் வியாபித்துநின்ற "மஹாவிகடதூதன்" பத்திரிகையின் ஆசிரியரது வீடு விற்கப்பட்டுப் போயிற்று. அவர் எழுதிய மகா பெரிய ஞானக்களஞ்சியமான "பூலோக விநோதக் கதைகள்" இப்போது எங்கும் விற்கப்படுவதில்லை. அவற்றில் நான்காம் வால்யம் கைவசமில்லை. அவற்றை அச்சிடுவதாகவும் உத்தேசமில்லையாம்.

கௌரிதேவி ஜீமூதவாகனுடைய தோத்திரத்தால் மிக மகிழ்வுற்று "ஜீமூதவாகன! உனக்கு உயிர்ப்பிச்சைக் கொடுத்தது மாத்திரம் போதாது. இப்போதே என் மனதினுற் கற்பிக்கப்பட்ட பவித்திரமான தீர்த்தங்களால் உன்னை வித்தியாதர சக்ரவர்த்தியாக அபிஷேகஞ் செய்கிறேன்." என வாய் மலர்ந்தருளி தன் திருக்கைகளால் ஜீமூதவாகனனுக்கு அபிஷேகஞ் செய்வித்தாள்.

ஃ

பின்பு கௌரிதேவி உனக்கு இன்னும் வேண்டிய வரத்தைக் கேள்." என்றுரைக்க, ஜீமூதவாகனன் "தேவி! கருடனுடைய பயத்திலிருந்து சங்கசூடன் காப்பாற்றப்பட்டான். இதுவரையில் கருடனால் விழுங்கப்பட்ட நாகங்கள் பிழைத்தெழுந்தன. நான் இறப்பதால் தாமும் இறக்கத்துணிந்த என் பெற்றோர்களும் துன்பத்திலிருந்து விடுபட்டனர். நானும் சக்ரவர்த்தியானேன். உன்னுடைய அரிய தரிசனமும் கிடைத்தது. இன்னும் நான் விரும்பத்தக்கது யாதெனில், மாதமும்மாரி பெய்ய, குடிகள் பிறருக்கு உதவி புரிந்து, நற்குணங்கள் பொருந்தி, சுகமாக வாழவேண்டுமென்பதே" என்றான். கௌரிதேவி அவ்வரத்தையும் தந்து மறைந்தனள்.

ஃ

இவ்விருத்தாந்தத்தைச் செவியுற்ற விச்வாவஸுவும் மித்ராவஸுவும் ஆனந்தமடைந்தனர். மதங்கள் முதலிய அரசர்களும் வணங்கும்படியான சக்ரவர்த்தியின் ஸ்தானத்தைப் பெற்ற ஜீமூதவாகனன் பின்பு தன் பெற்றோர்களுடனும், மனைவியுடனும் தனது இராஜதானிக்குச் சென்று, முன்போல் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு மலயவதியுடன் இனிது அரசுபுரிந்து வந்தான். குடிகளும் சந்தோஷமாக வாழ்ந்தனர்.

(முற்றிற்று.)

K. S. ஸ்ரீநிவாசாசாரியார்.

[இந்த "நாகானந்தம்" என்ற ஸம்ஸ்கிருதக் கதை தமிழில் முதன் முதலில் 1886-ம் வருஷத்தில் "ஜநவிநோதினி"ப் பத்திரிகையிலும், பின்பு ஸ்ரீமான் M. C. சடகோபாசாரியரால் 1900-ம் வருஷத்தில் 107-பக்கங்களில் புஸ்தக வடிவமாகவும். பின்பு 1922-ம் வருஷத்தில் "ஆநந்தகதா கல்பகம்" மூன்றும் வால்யத்திலும், அதன் பின்பு கோயமுத்தூரில் மற்றொருவராலும் வெளிவந்திருக்கின்றது. ஆயினும், ஸ்ரீமான் K. S. ஸ்ரீநிவாசாசாரியர் இப்போது எழுதியது இன்னொரு சுவையாகத் தோன்றினமையின் இப்பத்திரிகையில் இடம் தரலாயிற்று. ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் ஒவ்வொரு ருசி எனினும், உள்ளேயிருக்கிற கதை ஒன்றே தான்.—ப—ர்.]

ஒரு நூலாசிரியரின் புஸ்தகங்கள் வெளியில் எத்தனையோ இடங்களில் விற்கும்போது, அங்கு விலைக்குப் பெற்றுக் கொள்ளுகிறதுதானே? அவ்விதமின்றி நூலாசிரியரிடம் நட்பு முறைகொண்டாடிவிட்டு, பிறகு அவரது நூலைக்கேட்டு, அதற்கு விலையும் தருவதாகப் பணத்தை நீட்டுகிற கபடம் ஏனோ? அவர் பணம் பெறமாட்டாரென்றும், இலவசத்திலேயே தருவாரென்றும் அறிந்துகொண்டு செய்கிற வஞ்சக தந்திரமாகும் இது.

ரணஜத்சிங்கு.

இத்தேசத்தின் வட மேற்கிலுள்ள பஞ்சாப் என்கிற பாஞ்சாலம் அல்லது லாஹோர் தேசத்தில் சீக்கிய ஜாதியார்க்குத் தலைவனாய் சீக்கிய அரசாட்சியை ஸ்தாபித்தவரான ரணஜத் சிங்கு என்பவர் 1780-ம் வருஷத்தில் பிறந்தவர். அவருடைய தந்தை மகா சிங் என்பவரும் சீக்கியர்களுக்குத் தலைவராயிருந்தவரே. சீக்கியர் என்ற ஜாதியார் இத்தேசத்தில் மோகலாய ராஜ்யம், போர்த்துகீஸ் ராஜ்யம் இவைகள் ஏற்படுவதற்கு முன்னமே, பிரசித்தி பெற்றிருந்ததாகத் தெரிய வருகின்றது. அவர்கள் ஜாதிக் கட்டுப்பாடில்லாத ஒரு புதிய சமயத்தார். முதலில் இந்த மதத்தை ஏற்படுத்தியவரின் பெயர் நானக்ஷா. அவர்கள் ஆதியில் மதாசார விஷயங்களையே பாராட்டி வந்தவர்களாயிருந்தாலும், இத்தேசத்தில் மொகலாய ராஜ்யம் க்ஷீணித்து வந்த காலத்திலே நாடு பிடித்து அரசாள வேண்டுமென்கிற கருத்து உள்ளவரானார்கள். சிறிது சாமர்த்தியமுள்ள ஒவ்வொருவனும் தன் கீழ்ப் பல வீரர்களைச் சேர்த்து ஒவ்வொரு அரசனெனப் பெயர் பெற்றுக்கொண்டு சதத்துரு நதியின் கரையோரங்களை யெல்லாம் கைப்பற்றலானான்.

ஃ

இப்படி யிருக்கும் காலத்தில் ரணஜத்சிங்கு என்பவர் பிரசித்தராகி ஆப்கன் தேசத்து அரசரான ஜிமான்ஷா என்பவருடைய உதவியைக்கொண்டு லாஹோர் ராஜ்யத்துக்கு அதிபதியாயினர். ஸதாரணமானவர்களைப்போல் அடங்கி யிருக்கின்ற தன்மை அவரிடத்திலில்லாமையால், அங்கங்கே சிதறிக் கிடந்த சீக்கியர்களை யெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து உறுதியான கட்டுப்பாடுடையதாய்ச் சிறந்த ராஜாங்கமொன்று ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்கங் கொண்டவராகி, அதற்காக விடாமுயற்சியுடன் பாடுபட்டு, சதத்துரு நதிக்கு மேற்கிலும் வடக்கிலும் பல நகரங்களைப் பிடித்து அங்கிருந்த சீக்கியர்களை யெல்லாம் தன் வசப்படுத்திக்கொண்டார்.

ஃ

இவ்விதமாக ரணஜத்சிங்கு கொஞ்சங் கொஞ்சமாய் லாஹோர் நகரத்தைச்சுற்றி உள்ள நாடுகளைக் கைக்கொண்டு, தெற்கே மூல்தான் அல்லது மூலஸ்தானம் வரையிலும், மேற்கே பெஷாவர் பட்டணம் வரையிலும், வடக்கே காச்மீரம் வரையிலும் சுவாதீனம் செய்து கொண்டார். கிழக்கே மாத்திரம் சதத்துரு நதி

சிலர் மகா கல்விமான்கள், மேதாவிகள். ஆனால், காலணாவுக்கு அவர்களை நம்புவதற்கு யோக்கியதையில்லை. பேசுவதெல்லாம் பொய். எந்த வாக்கையும் நிறைவேற்றக் கூடியவர்களல்ல. எந்தத் தொழிலையும் நிலைத்துச் செய்யக்கூடியவர்களல்ல. நாணயமோ, நட்போ, கற்போ ஏதுமில்லை. அவர்களுக்குள்ள வித்தையோ எவரும் மயங்கும்வாறாயுள்ளது.

யைத் தாணடி வர வொட்டாமல் ஆங்கிலேயர் அதற்குவேண்டிய காவல் செய்து கொண்டிருந்ததால், அந்தப் பக்கம் செல்வதற்குப் பெருந் தடையாயிருந்தது. இதில் ஆங்கிலேயருக்கும் ரணஜத்சிங்குக்கும் மனஸ்தாபங்கள்கூட உண்டாகி பிறகு ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டு, சதத்துரு நதியின் மேலண்டைக் கரை சீக்கியருடைய தென்றும், கீழண்டைக் கரை ஆங்கிலேயருடைய தென்றும் எல்லைக் கோடு ஏற்பாடாகி அப்படியே நெடு நாள் நடந்து வந்தது.

ஃ

ஒருமுறை ரணஜத் சிங்கு ஆப்கன் தேசத்தரசரான ஷாஷுஜா என்பவருக்கு உதவி செய்து, அவரிடமிருந்து ஒளிமலை யெனப் பொருள் படும் கோகினூர் என்னும் வயிரமணியைக் கொண்டார். அம்மணியைத்தான் அங்கிலேயே வீரர் அவரிடத்தினின்றும் வாங்கிக் கொண்டுபோய் விக்டோரியா மகா ராணியாரின் கிரீடத்தில் வைப்பதாயினர்.

ஃ

இவ்வாறாக ரணஜத் சிங்கு வர வரப் பிரபலனாகி முதலில் தான் கோரியபடியே ஒரு பெரிய தேசாதிபதியாயினர். 1831-ம் வருஷத்தில் இவருடைய கீர்த்தி எங்கும் விசேஷமாகப் பரவியது. தூர தேசத்து அரசர்களும் சிற்றரசர்களும் பிரபுக்களும் அவரிடத்தில் மிகவும் கௌரவம் பாராட்டி அவருடைய சிநேகத்தை விரும்பினார்கள். அவர்களுக்குள் ஏதாவது விவாதம் நேரிட்டால் அப்பொழுது ரணஜத் சிங்குவையே மத்தியஸ்தமாகக் கோரிக்கொள்வார்கள். சிந்து நதிக்கு மேலண்டைக் கரையிலுள்ள பேலுசிஸ்தானத்து அரசர் சிறந்த குதிரைகளைப் பரிசாகக் கொடுத்தனுப்பித் தன் நாட்டில் சத்துரு பயமில்லாமல் இருப்பதற்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஹீராத்து தேசத்து அதிபதியான ஷாமாமூத் என்னும் துருக்கிய வேந்தரும், சிந்தியா ராஜ்யத்து அதிபதியான மகா ராஷ்டிரப் பிரபுவும் பத்திரிகைகள் எழுதி ரணஜத் சிங்குடன் நட்பு பாராட்டினார்கள். ருஷியா தேசத்தரசருக்கும் ரணஜத் ஸிங்குக்கும் கூடக் கடிதங்கள் போகவர ஆரம்பமாயினவென்றும் அங்கிலேயர் சந்தேகிக்கலானார்கள். ரணஜத் ஸிங்கினுடைய விரோதமிருந்தால் தங்களுக்கு வர்த்தகம் செழிக்கவும் செங்கோல் ஓங்கவும் வழியுண்டாகாதென்று கண்டு அங்கிலேயரும் அவருக்கு இன்சொற் சொல்லி ஒற்றுமையாய் நடக்க ஆரம்பித்தனர். ரணஜத்ஸிங்கும் அங்கிலேய துரைத்தனத்தார் விஷயத்தில் எப்போதும் உண்மை தவறாமலே நடந்து வருவதானார்.

(மற்றதில் முடிவு)

தாங்கள்பிறருக்குஒருஉதவி செய்துவிட்டு, அதன்மூலமாகத் தங்களின் பல காரியங்களையும் நிறைவேற்றிக்கொள்ள வெகு பக்குவமாய் முயல்கிறார்கள். இத்தகையோரிடம் எவ்வித உதவியும் பெறாமல் ஜாக்கிரதையாயிருப்பின், அவர்களின் தொந்தரவுகளுக்கு உட்படாமல் மனோ சமாதானப்பட முடியும்.

'நமது நட்பின் பலஹீனம் நமக்குப் பல தடவைகளிலும் அநுபவத்தில் நிரூபணமாகியிருக்கிறது. ஆவலுடன் எதிர்நோக்கிய மன எழுச்சி கடைசியில் ஒருவித ஊனத்தையே காட்டுவதாக முடிந்திருக்கிறது.''

தொட்டாற் சுருங்கி.

தொட்டாற் சுருங்கி என்பது மூலவர்க்கத்துள் சேர்ந்த ஒரு விசித்திரமான செடி. அதைக் கையினால் தொடுவதினாலே மாத்திரமல்ல; வேறு வகையாலும் அது சுருங்குவதுண்டு. இருந்தாற்போலிருந்து உண்டாகிற அதிக உஷ்ணம், அதிக சீதளம் முதலியவற்றாலும் அது சுருங்கும்; ஜந்துக்களுடைய நரம்புகளைத் தாக்குகின்ற நீராவி, கந்தகப் புகை முதலியவற்றின் பரிசத்தாலும் அது சுருங்கும். அச்செடி உஷ்ண மண்டலங்களில் எங்கும் உண்டு. ஆயினும், தென்னமெரிக்காவில் அது மிகுதி. அதை எவ்வளவு மிருதுவாகத் தொட்டாலும் அது சுருங்காதிராது. அதை நன்றாய்த் தொட்டுவிட்டால் அது அடியோடு ஒன்றாய்ச் சுருங்கிக்கொள்ளும்.

ஃ

அந்திப் பொழுதானதும் அதன் இலை கீழ்நோக்கிக் குவியும்; பின்பு அருணோதய காலத்தில் அவ்வாறு குவிந்த இலை மீண்டும் விரியும். அதன் இலை வாடிப் பழுத்துப்போயிருக்கையிலும் அதற்குள்ள சுருங்குங் குணமட்டுங் கெடாது. மழை மிதமாய்ப் பெய்வதினால் அதற்குச் சிறிதும் குற்றமில்லை. ஆனால், அதிக மழை பெய்தாலும், அல்லது மழையோடு காற்றுங் கலந்தடித்தாலும், அது சிறிதும் பொறாமல் சுருங்கும். அது சுருங்குவதற்கும் விரிவதற்குமான காலவளவு ஒரு வேளையிலிருந்ததுபோலிராது; காலத்திற்கும் நேரத்திற்கும் தக்கபடி பத்து நிமிஷ முதல் இருபது நிமிஷமளவுமாகும். மழைக்காலத்தைவிடக் கோடைக்காலத்திலேதான் விரைவில் சுருங்கும்.

ஃ

அதின் கிளையிலொன்றை அதினின்றும் வேறாகத் தறிப்பினும், அதின் இயற்கையாகிய சுருங்குங் குணமட்டும் நீங்காது. அதின் கிளையை வெட்டி, அவ்வாறு வெட்டின பக்கத்தைத் தண்ணீரில் முழுகும்படி வைத்திருந்தால், சிறிது நேரமளவும் அப்படியே வாடாதிருக்கும். தண்ணீருக்குள் அந்தச் செடியை அமுத்தி வைத்திருந்தால், அதன் இலை குவிந்து மீண்டும் விரியும். தண்ணீருக்குள் இருக்கையில் அதைத் தொட்டால் அது பூமியின்மீதிருப்பதுபோலவே சுருங்கும். ஆனால், சிறிது தாமதப்படும். இப்படிச் செய்வதினால் செடிக்கு யாதும் ஊறுபாடு உண்டாகாது. அது யாது காரணத்தால் இவ்வாறு சுருங்குகின்றதென்பதை சாஸ்திரிகள் என்ன பிரயத்தனம் செய்து பார்த்தும் அவர்கட்கு ஒன்றும் புலப்படவில்லை. அது மூலவர்க்கம், பிராணிவர்க்கம் இவ்விரண்டிற்கும் இடையாகிய ஓர் அற்புதமான சிருஷ்டியாயிருக்கவேண்டும்; அதனாலேதான் அது இவ்வாறு சுருங்குகின்றதெனச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இருவரும் சிரித்துக்கொண்டு ஒரு தலையணையில் படுத்துக் கொஞ்சும்போது, இவ்விருவரது கபட குணங்களையும் நன்கறிந்த மூன்றாவது மனிதன் ஆ, என்ன அன்பு என்று இவர்களைவிட அதிகமாகச் சிரிக்கிறான்.

ஸ்ரீகண்ணனின் வேணுகானம்

—பிருந்தாவனத்தில்—

ஒரு நாள் மாலை சூரியன் தன் கிரகணங்களாகிற குடையை மடித்து தான் வந்த வேலை தீர்ந்ததே யென்று மெள்ள வீட்டிற்குச் செல்வான்போன்று குடகடல் மூழ்கி மறைந்தனன்! ரஸிக சிகாமணிகளுடைய மனதை ரமிக்கச் செய்யும் சந்திரனும் அனைவர்க்கும் வந்தனைசெய்து நடன வரங்கத்தில் தோன்றுவது போல் வான்முகட்டில் புறப்பட்டனன். அன்றோ அவன் மறைந்தும் குறைந்தும் மழுங்கிக் கிடக்கவில்லை. பூரண வடிவமும், பூரண ஒளியும் பெற்று, மேகமாகிற பாவிகளால் மாசுபடாது அதி சுந்தரமாய் வெகு கம்பீரமாய்த் தோன்றினன். தன் அரசாட்சிக் குறிப்பாகிய வெண்கொற்றக் குடைக்குள் மனமோகன சர்வாலங்கிருதர்கள் அனைவரும் சுக சந்தோஷத்துடன் விளங்கலாமென்று தன்னுடைய கருணையாகிய கிரகணங்களால் முரசறைந்தனன். பழுதற்ற அழகுடைய பாவையர்களும் பர்த்தாக்களுமாய்க் களிப்புற்றோர்க்கு திருஷ்டி சுழற்றுவதுபோன்று, ஆகாயவாணியின் அருமைக் கரத்திலேந்திய பொன்னட்டம் இந்நிலவே இன்னவகை நன்னயமுற்றது என்று ஒவ்வொருவரும் மகிழும்படியிருந்தது. பால்போல் நிலாக் காய்வதால் மல்லிகை முல்லையாதி மலர்களும் தடங்களும் எல்லா இடங்களும் வெகு சோபிதமாய் விளங்கிற்று. இந்த சுந்தர சந்தர்ப்பத்தில் நீலநிறம் பொருந்திய கோலந்தாங்கிய கண்ணன் பிருந்தாவனத்தில் குழலெடுத்து நன்றாய் இசைபாடினன். இதைக் கேட்ட கோபியரனைவரும் உற்றாரையும் பெற்றாரையும் பர்த்தாவையும் துறந்து எல்லாவற்றையும் மறந்து, குழலோசை வழியே சென்று கோவிந்தனிடம் அடைந்தனர். இரும்பை இழுக்கும் காந்தமும் சுரும்பை யிழுக்கும் மலருமோ அவன்! இப்படியோடும் கோபியர்களி லொருவர் இருவரை, ஓடாது தடுக்கத் தூணில் பிணித்துத் துயருறுத்தியக்கால், அவர்கள் உடலம் அங்கிருந்ததேயன்றி ஆத்துமா ஐயனிடமே நாடிற்று. இதென்ன அபார நேசம்; ஒப்புயர்வற்ற உளமகிழ்வு; களங்கம் நீக்கிய காதற்கடல்!

ஃ

கண்ணிகள்.

1. பசுவின்பால்கறந்துகொண் டிருக்கையிலவரவர்
 பாதியில் விட்டோடி வந்தார் சிலமாதர்
 உசிதமாய்க்கன்றைவிட்டுக் கறப்பதற்குமுன்னமே
 யோடிவந்ததென்ன சொல்வேன் சிலமாதர்

தாங்கள் பிறரைப்பற்றி நன்றாக அறிந்திருப்பதாக நினைக்கிறவர்கள், தங்களைப் பற்றியும் பிறர் அறிந்தே வைத்திருக்கிறார்கள் என்று ஏன் தெரிந்து கொள்வதில்லையோ?

2. பாலையடுப்பில்வைத்துப் பொங்கிவருவதையும்
பாராம லோடிவந்தார் சிலமாதர்
பாலுடன்கோதுமையன்னம் பக்குவம்பார்ப்பதைவிட்டு
பறந்துபறந் தோடிவந்தார் சிலமாதர்

3. குழந்தைகளுக்குமுலைப் பால்கொடுக்கும்நடுவிற்
கொடுக்காம லோடிவந்தார் சிலமாதர்
கொழுந்துமுல்லைக்கோதையார் புசிப்பைநடுவில்விட்டு
கும்பல்கும்பலாக வந்தார் சிலமாதர்

4. புருடர்க்குப்பணிவிடை செய்வதைவிட்டவர்கள்
புருஷோத்தமன்பால் வந்தார் சிலமாதர்
இருடீகேசன்மாயையாற் கோகுலத்திலேயுள்ள
வேந்திழை மார்களிலே சிலமாதர்

5. ஒருபாலிற்சந்தனமுங் குங்குமங்களும்பூசி
யொருபாற் பூசாமல்வந்தார் சிலமாதர்
ஒருகண்ணுக்கு மைதீட்டி யொருகண்ணில்மையிடாம
லுடைசோர வந்தாரையா சிலமாதர்

6. ஆடையாபரணங்க ளணிவதிற்சிலதுக
ளணியுமுன் னேடிவந்தார் சிலமாதர்
வேடிக்கையாய்க்கண்ணுடி பார்ப்பதைவிட்டுமெதி
வேகமா யோடிவந்தார் சிலமாதர்

7. காதலரொருவரதற்கா யலங்காரங்கொண்டதெல்லாம்
கண்ணனுக் கேற்றதென்பார் சிலமாதர்
மாதவரவர்முன்னே மனமகிட்சியதாக
மையல்கொண் டோடிவந்தார் சிலமாதர்

8. வத்திராபரணங்கள் வரிசைகண்டணியாமல்
தாருமாருய்த் தரித்துவந்தார் சிலமாதர்
சித்தனுகியகண்ணனின் நெடுமோலாயிருக்கவும்
நெடுமோலாய் வந்தாரய்யா சிலமாதர்

ஃ

இவ்வாறு ஒவ்வொருவரும் அத்யந்த ஆநந்தானுபவத்தில் அழுந்தி, சிரமம் நீங்கிய பரமபதத்தின் நித்யர்களும் முக்தர்களும் அத்தனேடு இத்தலத்தில் உற்றனரே என்னும்படி, பரந்தாமனும் பக்தர்களும், பூவும் மணமும் போன்றும், ஊசியும் சரடும் போன்றும் பிருந்தாவனத்தில் உல்லாஸமாய் உலாவி மகிழ்ந்தனர். சங்கீதத்தில் பிரியமுடையவர்களிடம் சங்கீதம் பாடிக்கொண்டும், தத்துவ விஷயத்தில் ஊற்றமுடையவர்களோடு தத்துவங்கள் பேசிக்கொண்டும், இப்படிப் பலவிதமாய் பகவான் தோன்றும் அற்புத மகாத்மியத்தை வியந்து பண்ணவரும் விண்ணவரும் பத்தி மிகுந்து பரவசமாகினர்.

மங்கையர் முயன்றால் ஆகாததெது?

மங்கையர் முயன்றால் மாநிலம புத்தாம் !
இங்கினி ஆடவர் எங்களை ஒதுக்கிப்
பணிசெய முயல்வதிற் பயன் எதுவுமிலையே !
தணிவு மங்கையர் தாமும் பணியிற்
கலந்துழைத்திடல் கடவுளுக்கினிதே !
நலந்திகழ் சிசுவின் நற்றொட்டிலினை
ஆட்டுங் கையே அவனியை ஆளும்.
காட்டில் வேடனைக் கணத்தில் எரித்த
நற்றமயந்தி நங்கையாளல்லவோ ?
கற்றவர் புகழும் கனமிகும் ஔவை
மங்கையன்றோ? மாரதம் தூக்கிய
செங்கைகேயிச் செல்வி பெண்ணலவோ ?
வீடியாதிருக்க விளைத்த நளாயினி
கோடிநிகர் மாதே ! கோபந் துறந்து
பொறுமையிற் சிறந்து புகழ்மிகப் பெற்ற
நறுங்குண நங்கை நற்ஜானகியே !
சத்தியம் காத்த சந்திரமதியும்
பக்தி மிகுந்த பாஞ்சாலி தேவியும்
காலனை வென்ற கற்புக் கரசி
சீலசாவித்திரிச் செல்வியும் அரக்க
நரகனை முடித்த நற்சத்தியபாமை
பரமவிழி நிகர் பத்னி ருக்மணி
சூடிக்கொடுத்தும் சொல்திருப்பாவை
பாடியும் உயர்ந்த பாவைநல் ஆண்டாள்
என்போர் பலரும் என்றும் சிறக்கும்
அன்பு மிகுந்த அணங்குகளன்றோ ?
செல்வத்தலைவி—யார் ? சீரிய சக்தி—யார் ?
கல்வித் தலைவி—யார் ? காரிகைமாரே !
ஆடவர் சொற்பொழி(வு) அத்துடன் பறக்கும் ;
நீரேம் உரைகள் நிற்கும் என்றென்றும் !
வேதகீதம் முன்னாள் ஓதினோம் !
வீதி பெருக்கும் வீணர் இன்று ஆனோம் !
நாட்டுப் பற்றும் நலமுறு வீரமும்
கூட்டிக் குழைத்துக் குழந்தைக்(கு) ஊட்டி
கல்வி பெருக்குவோம் ! கழகம் சேர்ப்போம் !
பல்விதத் தொழிலும் பண்புற வளர்ப்போம் !
அகமது துணிந்தால் ஆகாத(து) உண்டோ ?
புகழ் நமையன்றிப் புருடர்கள் பெறுவரோ ?
நிலைமையை உயர்த்தி நேர்மையை வளர்த்து
நலமிகுவீர நங்கையராகுவீர்.

பழமொழிக் குறிப்புகள்

4. மக்கள்.

(235-ம் பக்கத் தொடர்ச்சி.)

369. "சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால் சீரும் சிறப்பும் கெடும்."

சித்திரை மாதத்தில் பிறந்த குழந்தைகள் அவ்வளவு அதிர்ஷ்டசாலியாக இராதென்பது நம்மவர்களுக்குள் ஓர் கொள்கை. இது அனுபவத்தில் பொதுவாகப் பார்த்துக் கண்டறிந்த ஒரு முடிவாம். சித்திரையிற் பிறந்த குழந்தை ஸகல பாக்கியங்களும் நிறைந்த ஐசுவரியக் குடும்பத்தில் பிறந்திருந்தபோதிலுங்கூட, அந்த செல்வங்கள் அக்குழந்தைக்கு ஒட்டாமலே போய்விடலாம். இப்படி ஒட்டாமற்போவது சிறுவயதிலிருந்தே ஆரம்பமாகலாம். எவரால் ஐசுவரிய ராசிகள் பெருகிக் குடும்பம் பெரிதும் செழித்தோங்குகின்றதோ அவர் அந்தக் குழந்தை பிறந்த சில வருஷங்களுக்குள்ளேயே மரித்துப்போய் சொத்துக்கள் யாவும் சின்னபின்னமாகலாம். எத்தனையோ இடங்களிலிருந்து கைக்கு வந்துசேரவும் ஒட்டவும் கூடியதாயுள்ள தனராசிகள் வருவதுபோல் மாயம் காட்டிக் கடைசியில் வேறொரு கைக்குப் போய்விடலாம். எதைத் தொட்டாலும் அதிர்ஷ்டம் சுருங்கிக் கிடக்கலாம். நாலு நாள் கனத்த வியாபாரம் நடந்து பின் எந்த வியாபாரமும் காணாது வாடும்படியாகலாம் எத்தனையோ தொட்டும் தொழில் நடத்தியும் ஒவ்வொன்றுக்கும் இடையிலே ஆபத்துகளும் நஷ்டங்களும் நேர்ந்து கஷ்டப்படும்படியும் விட்டுவிடும்படியும் ஆகலாம். நடுநடுவே பிழைப்பு முறிந்து போகும்படியும் வரலாம். எதிலும் அதிர்ஷ்டம் சுருங்கி மனம் வெந்திட நேரலாம். செல்வக் குடும்பம் ஏழைக் குடும்பமாக மாறிவிடலாம். இப்படிச் சின்னபின்னம் செய்கிற மாதமாக இந்தச் சித்திரை மாதம் இருந்தாலும், மற்றொருவிதத்தில் இது மேன்மையாகிறது. சித்திரை மாதத்தில் பிறப்போன் நான்கு வேதங்களையும் (இருக்கு—யஜுசு—சாமம்—அதர்வணம்) இவைகளின் உட்சாரமாகிய பிரிவின் (மந்திரம்—பிரமாணம்—உபநிஷதம்) இவைகளைக் கரதலாமலகம்போல ஐயந்திரிபறக் கற்றவனும், பிதாவையும் பெற்ற மாதாவையும் அன்னமிட்டு ஆதரிக்கும் சன்மார்க்கனும், கடல்சூழ்ந்த பலதேயங்களிலும் பிரக்யாதியுள்ள கீர்த்தி வகித்தவனுமாக மகிழ்வான் என்று சோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு வித்தியாவல்லபமும் புகழும் மட்டும் அதிகரிக்கலாமேயன்றி, செல்வத்தில் ஏழையாகவே காலங்கழிக்க நேருமென்றும், ஏதோ நடுத்தரமான நிலையில் வாழலாமென்றும்,

---

சந்தா கொடுத்துப் பத்திரிகையைப் பெறுவோரைவிட, இலவசத்தில் பெறுவோரே பத்திரிகை சற்றுத் தாமதமாய்க் கிடைக்கும் போது—என் இவ்வளவு தாமதம்?—என்று ஆத்திரமடைகிறார்கள்.

வித்தையின் துணை கூடவே இருப்பதால் வயிறு பசித்துக் காய்ந்தாலுங்கூட மதிப்புடன் கௌரவமாய் ஜீவிக்கலாமென்றும் அனுபவங் கண்டவர்கள் கூறுகிறார்கள். ஏதோ ஒன்றைத் தொட்டோம்; அப்படித் தொட்டதைக் கொண்டு முன்னுக்கு வந்து ஓங்கிவிட்டோம் என்ற சங்கதி சித்திரையிற் பிறந்த செல்வனுக்கு அபூர்வந்தானும். கஷ்ட ஜீவனமாகத்தான் முடியுமாம்.

370. "சூரிய தசையில் வாழ்ந்தவனு மில்லை, சந்திர தசையில் கேட்டவனு மில்லை."

சித்திரை மாதத்தில் சூரிய தசையில் பிறப்பது சிலாக்கியமல்லவாம். அந்த சூரிய தசையிற் பிறந்து நன்றாக வாழ்ந்தவனுமில்லையாம். ஐப்பிசியில் சந்திர தசையில் பிறந்தால் வெகு அதிர்ஷ்டசாலியாக இருப்பானும். இது சோதிட நூல்களின்படி உண்மையென நம்பப்படுகிறது. ஆயினும், இதுவே நிச்சயமென்று சொல்லிவிடுவதற்கின்றி இந்த நம்பிக்கைக்கு நேர்விரோதமாய் மற்றொரு பழமொழியாக,

371. "சித்திரை மாதத்திற் பிறந்த சீர்கேடனுமில்லை, ஐப்பிசி மாதத்தில் பிறந்த அதிர்ஷ்டவானு மில்லை"

என்ற பழமொழி தோன்றியிருக்கிறது. சோதிட சாஸ்திரத்தில் சிலருக்கு நம்பிக்கையில்லாதிருந்து அதனால் இந்தப் பழமொழி உதித்தது போலும். மாதம் கெட்டதென்று வைதால் மாதம் என்ன செய்யும்? எவன் எந்த மாதத்தில் பிறக்கும்படியாகிறதோ—அது கடவுளின் செயல். ஒருவன் சுகப்பட்டு வாழ்வதும், தரித்திரமடைந்து துக்கப்படுவதும் அவனவன் உழைக்கும் உழைப்பிலும, செய்யும் முயற்சிகளிலுமே இருக்கிறதென்ற கருத்தை இந்தப் பழமொழி குறிப்பிடுகிறது. சித்திரை மாதத்தில் பிறந்த சீர்கேடனில்லையென்றால், ஒருபக்கம் தரித்திரமும் அதிர்ஷ்டக்குறைவு மிருப்பினும், மற்றொன்றினால் (வித்தையினால்) அவன் சிறப்பாகக் கூடியவரை வாழ்ந்து விடும்படியாகலாம்; அவ்விதமே, ஐப்பசிமாத அதிர்ஷ்டவானும் ஏதோ ஒரு நிவர்த்திக்க முடியாத குறையால் காலமுழுதும் திருப்தியற்றவனாகலாம் என்ற கருத்தும் இந்தப் பழமொழிக்கு உண்டு. (தொடரும்.)

வீட்டுக்காரன் பச்சை ஜலத்திலும் குளிக்க முடியுமாயினும், அவ்விதமே இருதடவைகளில் செய்தால், அவனுக்கு வீட்டில் வென்னீர் வைக்கும் வழக்கம் நின்றுபோகும். எண்ணெயைக் காய்ச்சாமலே தலைதேய்த்துக் கொள்ளலாமாயினும், அப்படிச் செய்தால் அவனுக்காக எண்ணெயைக் காய்ச்சி வைக்கும் வீட்டு வழக்கம் நின்று போய்விடும். ஆனதால், அந்த வழக்கங்களும், தனக்கு நடக்கவேண்டிய சௌகரியங்களும் நின்று போகாதிருப்பதற்காக, வீட்டுக்காரன் ஒருதினம் வீட்டார் வழக்கப்படி செய்வதைத தவறினாலும் என் செய்யவில்லை யென்று கண்டித்துக் கேட்கவேண்டியவனாயிருக்கிறான். சில வீடுகளிலுள்ளவர்கள் உழைத்துப் போடுகிற வீட்டுக்காரனின் விஷயத்தில் இவ்வளவு மோசமும் அலக்ஷியமுமாக நடந்து கொள்ளுகிறவர்களா யிருக்கிறார்கள். மனதில் அன்பு இருந்தால் எதையும் சிரத்தையோடு செய்யவைக்கும். அன்புக்குப் பதில் வெறுப்பு இருந்தால் எல்லாம் கோணல்கள் தான். அப்படிப்பட்ட வீட்டிலிருக்கிறவன் படும்பாடு தெய்வமே அறியும். உழைத்தும் போட்டும் பயனில்லை. யாருக்கும் விசுவாசமுமில்லை.

சார்லெஸ் டிகென்ஸ் பண்டிதர்.

—அவரது பாலப் பருவம்.—

அங்கிலேய பாஷையை அறிந்தாருள் சார்லெஸ் டிகென்ஸ் எனும் பண்டிதரைப் பற்றிக் கேளாதார் இல்லை. அவர் ஆதியில் கிரந்தமெழுத ஆரம்பிக்கையில், தாமாகவே 'பாஸ்' என்று நாமம் சூட்டிக்கொண்டார். அதன் பின்பு மற்றோர் கிரந்தத்தை எழுதித் தமது தம்பியின் செல்வப் பெயராகிய 'பிக்விக்' என்பதை அதற்கிட்டார். அந்தக் கிரந்தத்தினால் அவர் விரைவில் எங்கும் பிரசித்தி பெற்றார். அந்தக் கிரந்தத்தைப் படிக்கப் படிக்கச் சிரிப்பும் விளையாட்டுமாய் இருக்கும். நாம் இப்பொழுது அவர் இயற்றிய நூல்களைப்பற்றிச் சொல்லப் புகாமல், அவரது பாலப் பருவத்தை மட்டும் சிறிது சொல்லுகிறோம்.

ஃ

அவர் சிறு குழந்தையாயிருந்த காலத்தில், அழகியதும், புராதனமானதும், 'மிட்வே' யாற்றின் அருகே உள்ளதுமான 'சாதம்' நகரத்தில் வசித்தார். இளம்பிராயந்தொட்டே பாடசாலைக்குப் போகு முன்பே, தமது அன்னையார் மடியிலிருந்த வண்ணமே அவர் புத்தகங்களைக் கண்டால் அதிக ஆவலாயிருப்பார். அந்நாளில் இப்பொழுது இருப்பது போல புத்தகங்கள் அத்தனை அதிகமாய்க் கிடைக்கா. இருந்த சில பழய புஸ்தகங்களைப் படித்து விட்டு, வேறு புத்தகமின்மையால் அவற்றுள் சிறந்த அரபிக் கதைகள் முதலியனவற்றை மீண்டும் படித்து வருவார். ஒவ்வோர் சமயங்களில் அவர் அவற்றிலுள்ள விஷயங்களை மற்றச் சிறுவர்கள் கேட்டு வியக்கும்படிக் கதையாக மொழிவது முண்டு. இவ்வாறு களிப்புற்று வாழ்ந்து வருகையில் அவர்க்குப் பெரிய இடையூறு ஒன்று உண்டாயிற்று. அவருடைய தந்தை தமது குடும்பத்தாரோடு 'சாதம்' நகரை விட்டு லண்டன்மா நகரம் சென்றார்

ஃ

அவர் அங்கே போனது முதல் வறுமையால் வருத்தமுற்று அன்றாடம் வயிறு வளர்ப்பதே கஷ்டமாயிற்று. இருந்த பழய புஸ்தகங்களிற் சிலவற்றையும் ஒவ்வொன்றாய் விற்கும்படி நேரிட்டது. பிராணனுக்குச் சமமான பழய நூல்களை விற்பதெனில் மனம் சுலபத்தில் சம்மதிக்குமா? தன் உயிரையே பிரிவதுபோன்ற தவிப்பு தோன்றுமன்றோ? இவ்வாறு அவரது பெற்றோர் வறுமையால் மனமழிந்து நிற்கையில், லண்டன் நகரம்

தங்களுக்கு வாழ்வும் செல்வாக்கும் இருக்கிறதென்று எழைகளின் வயிற்றில் அடித்துத் தாங்கள் லாபம் தேடுகிறவர்களும், சரியான கூலி கொடாதவர்களும், பிறகு அந்த எழைகளின் வாழ்வுக்கே வந்து விடுகிறார்கள். தங்களை நம்பிய எழைகளும் இரண்டு காசு சேர்த்து வாழும்படி உதவி செய்து, தாங்களும் சந்தோஷமாய் வஞ்சனையின்றி வாழ்பவர்கள் என்றைக்கும் ஓங்கிய வாழ்வில் உன்னதமாகவே இருக்கிறார்கள்.

டிகென்ஸ்ஸுக்கு ஒத்துக்கொள்ளாமல் நோய் கொண்டு சிந்தை சோர்ந்தார். அவருடைய தந்தையானவர் பட்ட கடனை இறுக்க மாட்டாமல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். அதன் பின்பு அக்குடும்பத்தார் அங்கிருக்கச் சரிப்படாமல் படாத கஷ்டங்களை யெல்லாம் படவேண்டியதாயிற்று.

ஃ

வேறு விதியின்மையால், டிகென்ஸ் என்பவர் தாமாகவே பொருள் தேடி வயிறு வளர்க்கவேண்டியவரானார். ஆகவே, அவர் லண்டன் நகரத்திலுள்ள ஓர் தொழிற்சாலையிலமர்ந்து பகல் நேரமெல்லாம் குப்பிகளுக்குக் கருப்புமை பூசிக்கொண்டு வார மொன்றுக்கு மூன்று ரூபாய் சம்பளம் வாங்கி ஜீவனம் பண்ணும்படி நேர்ந்தது. அவர் உலக வியாபாரத்தில் நன்றாகப் பயிலாத சிறுபிள்ளையா யிருந்ததுபற்றி, தனியே லண்டன் நகரத்தில் இந்த மூன்று ரூபாயிலே வாரத்தின் முதலில் அதிகமாய்ச் செலவழித்துவிட்டுப் பின்பு செலவுக்கில்லாமல் அந்த வாரமெல்லாம் கஷ்டப் படுவார்.

ஃ

இவருக்கு அதிபாலியத்தில் இப்படி அன்ன விசாரமே பெரிய விசாரமாகி விட்டதனால், இவ்வித்துவான் அடிநாளில் பட்ட துன்பம் மிகப் பெரிது: பட்டினியால் வாடியது எத்தனை நாட்களோ! இவரோடு கூட இருந்த பால்கிரீன், பேஜின் முதலிய தோழன்மார் நிரக்ஷர குக்ஷிகள் ஆதலால், இவரது பெருமையை யறியாமல் இவரைக் கண்டால் ஒன்றும், காணவிட்டால் ஒன்றுமாக ஒவ்வோர் சமயங்களில் இகழ்ந்து பேசுவதும் உண்டு. வீம்பாவது தற்புகழ்ச்சியாவது இவரிடத்தில் என்றும் இருந்ததேயில்லை. இவர் தமக்கிட்ட வேலையில் ஒரு நாளும் வஞ்சனை பண்ணுகிறதில்லை.

ஃ

இவருக்குத் தக்க பருவம் வந்த பின்பு ஒரு சமயத்தில் தம்மைப் பற்றித் தாமே சொல்லுகையில், "நான் பட்ட கஷ்டத்தை இவ்வளவு என்று அளவிட்டுச் சோல்ல எனக்குத் திறனில்லை; ஆனால், நான் கோண்ட கோட்பாடு என்னவேன்றல், 'மனதுக்கு மனதே சாக்ஷி' என்ற வண்ணம் ஏற்றுக்கோண்ட வேலையைக் கைசோர விடாது சேய்யவேண்டுமேன்பதேயாம்" என்றார். இவர் சிறு வயதில் தம்மைக் காப்பாற்றுவாரற்று, கரையான் தன் வாய் நீரைக்கொண்டு பிழைப்பதுபோலத் தாமாகவே தலை யெடுத்து முன்னுக்கு வந்தார். ஆண்டவனது அருள் ஒன்றுமட்டும் இவருக்கு இல்லாவிடின் இவ்வாறு இவர் நலம் பெறறுப் பேர்பெற்ற பண்டிதராயிரார் என்பது இவர் தம்மைப்பற்றித் தாமே கொண்ட கருத்து.

ஃ

பாலும் காபியும் பலகாரங்களும் சாப்பிட்டவர்க்ளெல்லாம் பழயசோறு உண்ணும்படியான தரித்திர காலத்தையும் பார்க்கும்படியாய்விட்டிருக்கிறது. அந்தப் பழய சாதத்துக்குக் கூடத் திண்டாட்டமாய்ப் போயும் இருக்கிறது. முப்பது வருஷம் வாழ்ந்தவர்களுமில்லை, முப்பது வருஷம் கெட்டவர்களுமில்லை. ஆதலினால், எதிலும் தள்ளிப்போய் வீணான பெருமை டம்பம் காண்பித்துக் கொள்ளக்கூடாது. எதிலும் அடக்கமும் நிதானச் செலவுகளுமாய் வாழ்கிற குடும்பம்தான் க்ஷேமமாயிருக்கும்.

அடிநாள் முதற்கொண்டு இவர் அளவற்ற கஷ்டங்களை யெல்லாம் தாமே பட்டறிந்தவர் ஆதலால், இவர் எழுதிய நூல்களைப் படிப்பவர்களுக்கு இவ்வுலக விருத்தாந்த மனைத்தும் நன்றாய்ப் புலப்படும். அங்கிலேய பாஷை வழங்கும் இடங்களிலெல்லாம் இவரை இப்பொழுது கொண்டாடாதார் இல்லை. "பெருமையும் சிறுமையும் தான்றரவருமே" என்ற வண்ணம் இவர் தமக்குத் தாமே வருந்திப் பாடுபட்டு எங்கும் தமக்குப் பெருமை தேடிக்கொண்டவராவார்.


அன்பர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கையில், தன்னை நாடிவந்த அன்பரின் சொந்தக் காரியம் எதுவோ அதையே குறிப்பாக முதலில் கேட்டு, அந்தக் காரியத்தை முடித்துக்கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டு, பிறகு மற்ற சம்பாஷணைகளைத் தொடங்குவது உதாரகுண மனத்தினர்களின் உயரிய சுபாவம்.

உன் ஜீவிய நாடகத்தைப் பிறர்க்குப் பயன்படும்படி எழுதிவை.

உன் வாழ்நாளில் நீ கண்ட சம்பவங்கள் அநந்தம்! நீ ருசித்த ருசிகள் நாநாவகை! நீ மோசம் போனதும், ஏமாறியதும், உன் சித்தம் குழம்பியதும் எத்தனையோ தடவை! உன் கண்ணீர்ப் பெருக்குகளுக்குக் கரை காணாது! நீ நம்பியிருந்தவர்கள் இறைவனிடம் சென்றுவிட, நீ பட்ட தவிப்பு கொஞ்சமா? கடன் வாதனை கூற இயலுமா? நீ தொடங்கிய காரியங்களுக்கு எத்தனை இடையூறுகள் சம்பவித்தன! எத்தனை சுயநலஸ்தர்களை உத்தமரெனவும் அன்பரெனவும் பிழைபட எண்ணினாய்! ஆகவே, உன்னிடமும் ஒரு சிறு ஜீவிய சரித்திரம் இல்லாமலில்லை. அதனைப் பிறர்க்கு அறிவுச்சுடர் கொளுத்தும் முறையிலே பொறுக்கி எடுத்துச் சேர்த்து எழுதினால் அதுவும் ஒரு லோகோபகார நூலாகும்.

வீட்டிலே கிணறு இருக்கிறதென்று ஜலத்தை அதிகமாய் ஊற்றிச் செலவிடாதே. நீ நாளைக்கு விவாகமாகிப் போகிற வீட்டில் கிணறு இருக்குமோ என்னவோ? ஆனதால், ஜலத்தைக் கொஞ்சமாகச் செலவிட்டு உபயோகித்துக்கொள். ஒரு சொம்பு ஜலத்தையும் கால் கைகழுவ உபயோகித்து, அது போதாமல் இன்னொரு சொம்பு ஜலமும் வேண்டும்படி செய்யாதே. ஒரு சொம்பு ஜலத்தில் பாதி சொம்பு ஜலத்திலேயே கைகால்களைச் சுத்தி செய்து கொண்டு பாதி ஜலம் சொம்பிலேயே இருக்கும்படி செட்டும் சிக்கனமுமாக நடக்கக் கற்றுக்கொள். சின்ன அல்ப சங்கதிக்கு வருகிற கைதான், வாய்தான், நாளைக்குப் பெரிய சங்கதிக்கும் வரும். ஆனதால், சின்ன சங்கதியையே சீராகச் செய்தால், பெரிய சங்கதியிலும் ஒழுங்காக நடக்கலாம்.

கோர்ட்டுக்குப் போவது.



பிரஜைகளெல்லாம் விவேகிகளாய் சாந்த குணிகளாய் ஸத்ய நெறியினர்களாயிருந்தால் கோர்ட்டுகளே வேண்டியதில்லை. ஆனால், அவ்விதம் ஸத்யமும் நற்குணமும் எல்லோரிடமும் நிலைத்திருப்பது ஸாத்யமல்ல. கோர்ட்டுக்கும், வக்கீலுக்கும் குடும்ப சொத்தைப் பறி கொடுத்து உண்ணச் சோறின்றி உடுக்கத் துணியின்றிக் கஷ்டப்படும் ஜனங்கள் கணக்கிலர் கட்குடியனுக்கு அடிக்கடி கள்ளருந்தத் தோன்றும். காமிக்கு ஸதா சிற்றின்பத்திலேயே மனம் செல்லும். அதுபோல் ஒருமுறை கோர்ட்டுக்குச் சென்று வழக்காடியவர்க்கு அடிக்கடி கோர்ட்டுக்குப் போகத் தோன்றும். அவர்களை எத்தனைமுறை தடுத்தாலும் கேளார். அதிரகஸ்யமாகச் சென்று போலீஸார்க்கோ, அல்லது வக்கீலுக்கோ பணத்தைத் தொலைத்து பிராது எழுதிக் கோர்ட்டில் தாக்கல் செய்வர்.

ஃ

ஒரு கோர்ட்டில் வாதி பக்ஷம் தீர்ப்பாகில் அத்துடன் வியவகாரம் தீருகிறதில்லை. பிரதிவாதி கீழ்க் கோர்ட்டார் செய்தது நியாயவிரோதமென்று மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்கிறான். இப்படி எத்தனை வாதிகள் அல்லது பிரதிவாதிகள் கீழ்க் கோர்ட்டார் அளித்த தீர்ப்பை நியாயமற்றதென்று மேல் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்கிறார்கள். இவர்களெல்லாம் கீழ்க்கோர்ட்டாரை நியாயாதிபதியென்று ஒப்பவில்லையே! ஆதலின், அந்தக் கோர்ட்டாருக்கு நியாயாதிபதி என்னும் பட்டம் போய்விட்டதா? அவர் உட்கார்ந்திருக்கும் நியாயாஸனத்துக்குக் கௌரவம் இல்லாமற் போயிற்றா? நியாயாதிபதியும் மனுஷ்ய வகுப்பினரன்றோ? அவர் தப்பிப்போவது ஸகஜமே. உண்மை ஒரு புறமிருக்கும்; தீர்ப்போ அதற்கு நேர் விரோதமாய் வேறொரு புறமிருக்கும்

ஃ

சில ஸமயங்களில் வாதி பிரதிவாதிகளின் வழக்குகள் முடிவதற்குள் இருவருக்கும் ஆயுள் முடிந்துவிடுகிறது. ஒரு வழக்குத் தொடர்ந்தால் சீக்கிரத்தில் முடிகிறதில்லை. வழக்கு தொடராவிடிலோ பிறரது அக்கிரமத்திற்கு மானம் கெட்டு சகித்திருக்க நேர்ந்து வெகு கஷ்டமாகிறது. இதற்காக வியாஜ்யம் செய்யினோ: வழக்கு விசாரணை யாகுந்தோறும், கேஸை ஒத்திப்போடுந்தோறும், கோர்ட்டு வாசலில் வேலைகளைக் கெடுத்துக்கொண்டு காத்திருக்க வேண்டியிருக்கிறது. சில

“ஆரு ஒருவேளை சோறு போடுவோ? வீடு ஊரு சோறு போடுமோ? பேரு பெருமை சோறு போடுமோ? வேறு ஊரு ஓடி தேடிவா போடா. போய் பண மூட்டைகள் கட்டி வாடா. கூடியே எல்லோரும் குந்தித் தின்போமடா. நீ கொண்டுவா, உண்டுவிட்டு உன்னைத் திட்டுகிறோம். நீ உழைக்கப் பிறந்த மாடு. நாங்கள் உட்கார்ந்து தின்னப் பிறந்தபுண்ணிய சாலிகள்”—என்று வீட்டிலுள்ளவர்கள், அந்த வீட்டுக்குச் சம்பாதித்துப் போடுகிறவனைப் பார்த்துச் சொல்லுகிறார்களாம்.

சில ஸாக்ஷிகள் இன்னும் வந்து சேர
வில்லையே என்று விசாரம், வக்கீல்
வேறு கோர்ட்டுக்குப் போயிருக்கிறு
ரே என்று துக்கம், எதிரி வக்கீல்
கேட்கும் கேள்விகட்கு என்ன விடை
சொல்லுகிறதென்று ஆலோசனை எதி
ராளி ஸமாதானத்துக் கிணங்கு
கிருனு? அவன் யாருடன் பேசிக்
கொண்டிருக்கிருன்?—என்ன பேசு
கிருன்?—என்று கவனிக்க ஒரு
மனுஷ்யனைத் தேடுகிருன்.

ஃ

வக்கீல் வருவதற்குள் நியாயாதி
பதி கேஸை விசாரிக்கத் தொடங்கி
னால், கக்ஷிக்காரன் பாடு கலக்கமாகி
றது. அவன் எண்சாணுடம்பும்
ஒரு சாணுய்க் குன்றி, வக்கீல் வந்து
கொண்டிருக்கிருர், கொஞ்சநேரம்
காத்திருக்க வேண்டும் என்று கேட்
டுக்கொள்ளுகிருன். நியாயாதிபதி
சீறி விழுகிருர். இப்படிப்பட்ட
அவஸ்தைகள் அநந்தமாயிருக்கின்
றன.

ஃ

இங்கு ஒரு உதாரணம் தருகி
ருேம். 1893-ம் வருஷம் செப்டம்
பர் மாதத்தில் சிவய்யா என்பவன்
வயலில் விளைந்த தான்யத்தைத் துர்
எண்ணத்தோடு அறுத்ததாக ராமை
யா பேரில் குற்றஞ் சாட்டினுன்.
இதனுல் மேற்படி ராமய்யா இரண்
டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டின்
முன்பாக துராகிருதப் பிரவேசம்,
களவு அசால்டு முதலிய குற்றங்கள்
செய்ததாகக் கொண்டுவரப்பட்டான்.
அவனை அந்த மாஜிஸ்திரேட் விசா
ரித்துக் குற்றவாளியென்று தீர்மா
னித்தார். உடனே மேற்படியான்
ஹெட் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்தி
ரேட்டினிடம் அப்பீல் செய்ய, அங்கு
அவனைக் குற்றவாளி யென்றே தீர்
மானமானது. இதன்பிறகு ராமை
யா ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ய,
அவர்கள் கீழ்க்கோர்ட்டாரின் தீர்மா
னத்தை ரத்து செய்து, ராமையா
குற்றவாளி யல்லவென்று தீர்மா
னித்து மேற்படியானை விடுதலைசெய்
தனர். இதன்பிறகு ராமையா தன
க்கு நேர்ந்த நஷ்டத்துக்காக டிஸ்ட்
டிரிக் முனிசிப் கோர்ட்டில் சிவய்யா
வைப் பிரதிவாதியாக்கி வியாஜ்யம்
செய்தான் முன்சீப் ஹைகோர்ட்
டாரின் தீர்மானத்துக்கு விரோத
மாய் வாதியாகிய ராமய்யாவுக்குப்
பிரதிகூலமாய்த் தீர்ப்பளித்தார்.
இதன்பிறகு ராமய்யா சும்மா இருக்க
வில்லை சப் கோர்ட்டில் அப்பீல்
செய்தான். சப் ஜட்ஜி முன்சீப்
செய்த தீர்மானம் பிசகென்றும்,
ராமையாவுக்குப் பயிர் சொந்தமாகை
யால் அவன் அதை யறுத்தது குற்ற
மல்லவென்று ஹைகோர்ட்டார் கொ
ண்ட அபிப்பிராயம் சரியானதென்
றும். ஆகவே, ராமையாவுக்கு சிவய்
யா நஷ்டம் கொடுக்கவேண்டியதுதா
னென்றும் தீர்ப்பளித்தார். இதன்
பேரில் சிவய்யா ஹைகோர்ட்டில்
அப்பீல் செய்தான். ஹைகோர்ட்
டார் சப்ஜட்ஜியின் தீர்ப்பை ரத்து
செய்து, சிவய்யா கேஸ் கொண்டு
வந்ததற்குத் தகுந்த காரணமில்லா
மற் போகவில்லை யென்றனர். சிவய்
யா நஷ்டம் தரவேண்டியதில்லை
யென்றும் தீர்ப்புச் செய்தனர். இவ்
வாருக, 5-ரூபாய் தானியத்துக்காக
ராமைய்யாவுக்கும், சிவய்யாவுக்கும்
வியாஜ்ய வகையில் 5000-ரூபாய்
செலவாயிற்று. 1893-ம் வருஷம்
ஆரம்பமான இந்த வியாஜ்யம் இவ்
வித முடிவை யடைவதற்கு 8-வரு
ஷங்களாயின. ஆதலின் உபயவாதி
களும் கோர்ட்டுக்குப் போகாமல் ஸம
ரஸமாவது நன்று.



இன்று கூடிய நமது கடையில் அன்பு குலாவிவிட்டுக் களைத்துப் போவதைப்பற்றி அல்லாபிச்சை பேசினார். “ஒருவரையொருவர் எவ்வளவோ அன்புடனும் எதிர்பார்க்கிறார்கள். அவர்களும் வந்து சேருகிறார்கள். எவ்வளவோ அன்புடனும் ஆவலாதிகளுடனும் பேச்சுகள் நடக்கின்றன. பிறகு அதிக நேரம் பேசிவிட்டதாகவும் எழுந்து போகவேண்டுமென்றும் நினைக்கத் தொடங்கிக் கொள்கிறார்கள். இவ்விதமே நினைத்துவிட்ட பிறகுங்கூட மேலுக்குமேல் பேச்சுகள் வளருவதானால் அது ஒரு பாரமாகப் படுவதோடுகூட, சீக்கிரம் அந்தப் பேச்சை ஒரு முடிவுக்கும் கொண்டு வரவும் முயலுகிறார்கள். எப்போது பேச்சை முடித்துக்கொண்டு எழுந்திருப்போமென்றும் எண்ணமிடுகிறாகள் முதலில் வந்து உட்கார்ந்து பேச ஆரம்பித்த ஆவலாதிகளெல்லாம் இப்போது தீர்ந்துபோய் ஒருவர் புறப்படுவதிலும், மற்றவர் அவருக்கு விடை கொடுத்தனுப்புவதிலுமே கண்ணாகிவிடுகிறார்கள். இது அன்பு குலாவிக் களைத்துப்போனார்களோ வென்று எண்ணும்படியாகிறது” என்றார்.

ஃ

“அல்லாபிச்சை பேசியது ஒரு தினுசு. அது அத்தனை ஆழ்ந்த அன்பு கொண்டவர்களின் சங்கதியல்ல. ஏதோ ஒருவித அன்பு வைத்தோ, சும்மாபார்த்துப்போகவோ வருகிறவர்களின் சங்கதியாக அது இருக்கலாம். தூரத்திலிருந்தே வந்தவர்களானாலுங்கூட அவர்களுடைய சந்திப்பும் இப்படிச் சொற்ப நேரப்பேச்சாக முடிந்து இருவரும் சீக்கிரமே எழுந்து விடை பெற்றுக் கொள்ளும்படியாவதில் இவர்கள் அத்தனையாக நேசித்தவர்களாயில்லாமல் சாதாரணத் தன்மையான பிரியத்தோடிருப்பவர்களாக இருக்கலாம். இத்தகையோரிடம் ஒருவன் ஒரு ரூபா கடன்கேட்டுவிட்டால், “ஐயோ! என்னிடம் இல்லையே” என்று உடனே மற்றவன் சொல்லிவிடலாம். அதைக் கேட்டவனே உள்ளுக்கு மனக்குடைச்சலுடன் வெளிவார்த்தையாக—“இல்லாவிட்டால் பாதகமில்லை; நான் போய் வரட்டுமா?” என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டு விடலாம். கையிலிருந்தாலுங்கூட இவர்கள் ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொள்ளவுமாட்டார்கள். கொடுத்தாலும் திருப்பித் தரவுமாட்டார்கள். இவ்வளவு யோக்கியதையில் உள்ளவர்கட்கே தாங்கள் அதிகநேரம் பேசிவிட்டதாகத்தோன்றும். விடைபெற்று எழுந்துபோகவும் முயலுவார்கள். மற்றபடி உண்மையான அன்புள்ளவர்களுக்கோ உயிருக்குயிராகப் பழகினவர்களுக்கோ எவ்வளவு நேரம் பேசினாலும் சலிப்பு ஏற்படாது; களைப்பும் வராது; எழுந்து போகவும் மனம் ஒப்பாது; பொழுது போவதும் தெரியாது; இரவுவந்து விளக்கேற்றியதையும் அறியார். இலையில் சாதம் வட்டித்து ஆறிப்போகிறதென்று சிடுசிடுத்தாலுங்கூட இதோ வந்து விட்டேனென்பார்கள். இப்படிப்

பட்டவர்கள் சந்தித்துவிட்டு உடனே புறப்பட்டுவிட எண்ணிவருவது அபூர்வம்தான். ஒரு இரவுக்கேனும் பகலுக்கேனும் இருந்து ஆசைதீரத் தங்கிவிட்டு மெதுவாகப் போவதற்கே அதற்கு வேண்டிய ஓய்வுகாலத்தைப் பார்த்துக்கொண்டு புறப்பட்டு வந்து சேருவார்கள். வந்ததுமுதல் புறப்பட்டுப்போய்த் தொலைகிறவரையில் கொச கொசவென்று ஓயாமல் பேசியபடியே கிடப்பார்கள். இரவு ஒரு மணியாகியும்கூடப் பேச்சு முடிவு பெறுவதே யில்லை. ஆனல், இவர்களின் அன்பைவிட நித்திராதேவி எவ்வளவோ பலசாலியல்லவா? ஆகவே. ஒருவன் மற்றவன் பேசுவதைக் கேட்டுக்கொண்டே தன்னையறியாமலே தூங்கிப்போவான். பேசிக்கொண்டிருப்பவனே தன் பேச்சுக்கு அவன் 'ஊங்' கொட்டாததால் அவன் முகத்தைப் பார்த்து, ஓ! பாவம் தூங்கிவிட்டானு என்று கண்டுகொண்டு, பிறகு தானும் நித்திரையின் வசமாவான். இன்னும் சில அன்பர்கள் அப்படா! இரவு இரண்டு மணியாய்விட்டதே என்று சொல்லிக்கொண்டு, போதும் இவ்வளவு பேசியது என்று திருப்திபட்டு இருவருமாகத் தூங்கச்செல்வார்கள். இவ்விதமே மறுதினமும் பேசத்தொடங்குவார்கள். இதிலே ஒருவனுக்குத் தனது சொந்த வேலை யிருந்து அதை அன்பரின் வீட்டிலே செய்யப்புகுந்தால், அந்த அன்பனும் அந்த வேலைக்குத் தான் ஒரு தடையாக இல்லாமல் தூரவிலகி அவனை ஒண்டியாக இருக்கவிட்டு அந்த வேலை நடக்கும்படி ஒத்தாசைசெய்வான். தானும் கூட இருந்து செய்யக்கூடியதானல் அவ்விதமே செய்தும் கொடுப்பான். இதிலே வீட்டடனுள்ள அன்பன் ஏதாவது சில்லரை வேலைகளுக்கு வெளியில் போவதாயிருந்தால், கால் மணிநேரத்திலே. ஐந்து நிமிஷத்திலே வந்துவிடுவேன் என்று சொல்லிக்கொண்டுபோய்ச் சீக்கிரமே திரும்பி வந்துவிடுவான். இப்படியாக இருவரும் சலிப்பும் களைப்பும் இல்லாமல் எத்தனை பகல் இரவுகள் பேசினலும், பிறகு புறப்பட்டுப் பிரியவேண்டிய வேளை ஒன்று இருக்கிறதல்லவா? அந்த வேளையில் ஒருவருக்கொருவர் மிக்க மனத்தவிப்போடு திண்டாடிப் போவார்கள். பகல் மூன்றுமணிக்குப் புறப்படவேண்டியவனை 4-5-6-மணி வரையும் நிறுத்திக்கொண்டு அப்பால் அனுப்பவும் பார்ப்பார்கள். இவ்விதமான மனம் கலந்த அன்பிலே களைப்புமில்லை, சலிப்புமில்லை, சீக்கிரம் எழுந்துபோகப் பார்ப்பதுமில்லை" என்று தாண்டவக்கோன் புகன்ருர்.

ஃ

"அப்படி ஒரே முடிவுகட்டிவிடக் கூடாதய்யா. களைப்பு சலிப்பு என்பது இந்த உண்மையான அன்பர்களிடம் கூடத்தான் தொட்டுக்கொண்டிருக்கும். அது எப்படியெனிலோ சொல்லுகிறேன். பிரிந்து வரும்படி நேரிட்டதே, மறுபடி சந்திப்பது எப்போதோ என்ற சலிப்பு அவர்களுக்குள் கட்டாயம் உண்டாகவே செய்யும். ஆனல், அந்த சலிப்பு பிளவை யுண்டாக்கும் சலிப்

நம்மிடம் ஒரு காரியத்தை விரும்பி வருகிறவர்கள் நமது குழந்தைகளைக் கண்டதும் வெகு பிரிய முள்ளவர்கள் போல் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சுகிருர்கள். தாங்கள் வந்த காரியம் முடியாவிட்டால் குழந்தைகளைத் தொப்பென்று கீழே இறக்கி விட்டுவிட்டுப் போய்விடுகிருர்கள். அவர்கள் காட்டிய பிரிய நடிப்பு அப்பொழுதே தெரிந்து போகிறது.

பல்ல; ஆசையை வளர்க்கும் சலிப்பாகும். இவ்விதமே அத்தனை அன்பாகப் பேசிப்பிரிந்த பின்பு களைப்பும் தானுகவே தோன்றிக்கொள்ளும். இன்பம் கண்ட பின்பு களைத்துப் போவது சாதாரணந்தானே. அந்தக் களைப்பால் சிலர் தாங்கள் ஊர்போய்ச் சேர்ந்த பிறகு சில நாள் வரை கடிதம் எழுதாமலே இருந்து விடுவதும் உண்டு. பிறகு தங்களின் அன்பெல்லாம் விஸ்தரித்து நீண்ட கடிதம் அனுப்புவார்கள். அதைப் பெற்றுக் கொள்கிறவர்களுக்கும் ஒரு சலிப்பு வருகிறதுண்டு. கடிதம் தானே வந்தது, மனிதன் வரவில்லையே என்றும் சலிப்பு தோன்றும். ஆயினும் கிடைத்தது லாபம் என்று கடிதத்தைக் கண்களில் ஒத்திக்கொண்டு பரவசப் படுவார்கள். இதனிடையே அவர்களின் சுக துக்க சோதனைகள் என்னென்னவோ! அதனுலும் பதில் எழுதச் சில நாள் தாமதித்துப் பிறகு கடிதம் எழுதுவார்கள். இத்தகைய அன்பினர்கள் எப்போதும் தூர தூரமான இடங்களிலேயே பிரிந்து நிற்கும்படி கடவுள் செய்து விடுகிருர்! ஒரு ஊருக்குள்ளாகவே இத்தகைய அன்பினர்கள் அகப்படுவார்களானுல், அவர்கள் பெரிய அதிர்ஷ்டசாலிகள் தான்" என்ருர் ஆமைவடைப் பண்டாரம்.

ஃ

"இவ்வளவு முற்றிய அன்பிலிருந்து பிரிந்து போனவர்களுமுண்டு. விரோதத்தால் பிரிந்ததுண்டு; பழகிப் பழகிச் சலித்துப் பிரிந்ததுண்டு; இரு அன்பர்களில் ஒருவன் தனவானுகி, மற்றவன் ஏழையாகவே இருப்பானுகில் அதனுலும் பிரிவதுண்டு; புதிய வாழ்வு வந்து புதிதாய்ப் பெரிய மனுஷ்யனுகி விட்டால் தனது பழய அன்பர்களை மறந்து விடுவோரும் உண்டு. ஒருவருக்கொருவர் கடன் கொடுத்துக்கொண்டு அதில் ஏமாற்றம் கண்டு பிரிந்ததுமுண்டு. இப்படிப் பிரிவுகள் எத்தனையோ விதம்" என்ருர் இஞ்சி பச்சடியார்.

ஃ

"ஏதோ அன்பு மட்டும் காட்டுவார்கள், பிரியமாய் நடந்து கொள்வார்கள், மற்றபடி கைநீட்டித் தாராளமாய் உதவித் தான் முன்னுக்கு வரும்படி ஒத்தாசை செய்ய மாட்டார்கள் என்று காணுகிற இடத்தில் அந்த மட்டுக்கும் அன்பைப் பெற்றுக் கொண்டு அவ்வளவுடன் திருப்தியடைகிறவர்களுமுண்டு. சில அன்பர்கள் ஒருவர் மீதொருவர் வெகு மதிப்பு வைத்தவர்களாய் இருப்பார்கள். ஆனுல், ஒருவர்க்கு ஒரு வாக்கு தந்தால் அதை நடத்திக்கொடுக்க மாட்டார்கள். அறுந்த விரலுக்கு சுண்ணும்புகூட உதவமாட்டார்கள். ஆனுல், மதிப்போடு புகழ்வதிலோ உயர்ந்து நிற்பார்கள். இது அவர்களின் கோணலான சுபாவம் என்று மற்றவர்களும் கண்டுகொண்டு, அதற்காக மனவருத்தப்படாமல் ஒட்டியும் ஒட்டாமலும் அன்பாக நிற்பார்கள். இத்தகையோர் சாதித்துக்கொள்கிற காலத்தில்தான் பேசிக்கொள்வார்

அவரவர்கள் தங்கள் வீட்டிலிருக்கிற வரையில்தான் கௌரவம். தன் வீடு இழந்து, பிறர் வீட்டில் தங்கி யிருப்பதாகில், அவ்வீட்டினர் முன்பு எவ்வளவோ கௌரவித்து மரியாதை செய்தவர்களாயினும், இப்போது இகழ்ந்து கேவலமே புரிவர். தாங்கள் மறைந்துகொண்டு மூன்ருவது மனிதனை ஏவி நமது சாமான்களை அவர்களின் வீட்டினின்றும் வெளியிலெடுத்து எறியச்செய்து வீட்டைக் காலியாக்கும்படி தூண்டுவர்.

கனே தவிர, இவர்களுக்குள் கடிதப் போக்குவரத்துகள் ஏதுவுமே இருக்க மாட்டா. ஒருவர் கடிதம் எழுதினலும் மற்றவர் அதற்குப் பதில் தர முக்காலணு செலவிட்டுக் கார்டு வாங்கவேண்டுமே யென்றும் யோசிப்பார்கள். ஆனாலும் இவர்கள் எப்போதும் ஒருவரையொருவர் மதிப்புடன் நினைத்து அன்பாக இருப்பதில் தவறமாட்டார்கள். தங்களுக்குள் எவ்வளவு சுடுநாற்றங்களும் அழுக்குக் குப்பைகளும் மலிந்து கிடந்தாலும் மூன்றாவது மனிதனின் முன்பு அதைக் காட்டிக்கொள்ளாமல், தங்களின் 'பிகுவை' விடாமல், ஓ அவரா! எனக்கு மிகவும் வேண்டிய ஆருயிர் நண்பராயிற்றே, என்று புகழ்ந்து பேசுவார்கள் இன்னும் சிலர் தமது அன்பர் நல்லவர்தான். ஆனல் குணத்தில் அவரைக் கொண்டாட முடியாது என்று உள்ளே யிருக்கும் கசுமாலக் குப்பைகளை எல்லாம வெளியிவிழுத்துவிட்டு, அதற்காகத் தாங்கள் விசனிக்கக்கூடாம விருப்பதற்கில்லை என்றும் சொல்லுவார்கள். இப்படியும எத்தனையோ விதய" என்றார் மோர்க்குழம்புத் தேவர்

ஃ

"அதோ ஒரு அன்பரிடமிருந்து கற்கண்டுத் துண்டுகளடங்கிய ஒரு கடிதம் வருகிறது! இவ்வளவு அன்பான பதங்களை வாரிக் கொட்டுதற்கு இவர் அத்தனை தகுதியான அன்பரல்லவே என்று மற்றவர் நினைக்கிறார். பிறகு கடிதம் எழுதிய அன்பரும் வந்து சந்திக்கிறார். வெகு பிரியமாய்ப் பேசிக் குலாவுகிறார்கள் வந்த அன்பர் தமக்கு ஆகவேண்டிய ஒரு முக்கிய விஷயத்தை வெளியிடுகிறார். உடனே மற்ற அன்பர், ஓகோ இந்த காரியத்துக்குத்தானே அத்தனை அன்புமயமான பதங்களுடன் கடிதம் எழுதினர் என்று உணர்ந்து கொள்கிறார். அவரது காரியத்தை இவர் செய்து கொடுக்க முடியாதவராய் இருப்பதை வணக்கமாகவே தெரிவித்துக்கொள்கிறார். உடனே ஊரிலிருந்து வந்த அன்பருக்கு, இந்தப் பயனற்ற மனுஷ்யனைத் தேடிக்கொண்டு வீணாக ஏன் வந்தோமென்று சலிப்பும் வெறுப்பும் உண்டாகிவிடுகிறது. அதன்பிறகு ஸம்பாஷணைகள் குறைந்துபோகிறது. வந்தவர் ஊருக்குப் புறப்பட்டுப்போகிறார். பிறகு கடிதங்களே வருவதில்லை. இது காரியார்த்தமான அன்பானலும், இவர்களும் தாங்கள் எவ்வளவோ அன்பாக இருப்பதாகவே மேற்பூச்சு பூசிக்கொள்கிறார்கள்" என்றார் ஆழாக்கு அரிசியார்.

ஃ

"அன்பினரில் இன்னொரு வகையுண்டு. இவர்களுடன் அதிகம் பழகினல் மிக்க சாமான்யமாக நினைத்துவிடுகிறார்கள். பிறரது மதிப்பு கௌரவங்களை எண்ணமற் போகிறார்கள் அலக்ஷியத்தன்மையுடன் பார்க்கிறார்கள். தாங்கள் பழகியவர்களைப் பற்றிப் பிறரிடம் மிக்க அல்பத்தனமாய்ச் சொல்ல ஆரம்பிக்கிறார்கள். ஆகவே, இத்தகையோர்களுடன் சேருவதற்கு மிகவும் அஞ்சவேண்டியிருப்பதுடன், தங்களின் அந்தரங்க விஷயங்களை அவர்களுக்குத் தெரியாமல் மூடி மறைக்கவும், கூடியமட்டில் தூரவிலகி மானம்

சிறந்த யோக்கியதையும் மரியாதையும் உடையவர்கள் தங்களின் நண்பர்களது காலத்திற்குப் பிறகும் அவர்களின் வீட்டிற்குச் சென்று க்ஷேம சமாசாரங்களை விசாரிக்கிறார்கள் இவர்களின் உள்ளன்பு தெரிந்த அவர்களும் இவர்களைப் பிரியமாய் வரவேற்கிறார்கள்.

மதிப்பைக் காத்துக்கொள்ளவும் வேண்டியிருக்கிறது. இவர்கள் கடிதம் எழுதினாலும், அதற்குப் பதில் தருவதற்கு நடுங்கவேண்டி யிருக்கிறது. ஏனெனில், முக்காலணா ஒரு அணா செலவிட்டுக் கடிதம் எழுதப்போக, அந்தக் கடிதத்திலே குற்றம் ஆராய்கிறவர்களா யிருக்கிறார்கள். அவர்களுடைய குணக் கோணல்களைக் கடிதத்தில் எழுதிவிட்டாலோ பெரிய விஸ்தாரக்கடிதம் எழுதி வம்பளக்கவும் எதிர்க்கவும் தொடங்கிக் கொள்கிறார்கள். இத்தகையோருக்கு அனாவசியக் கடிதங்கள் எழுதாமலிருந்துவிடுவதே சமாதானவழி. இத்தகையோரும் சந்திக்கும்போது அன்பினர்களாகவே காண்கிறார்கள். பிறகுதான் நாற்றம வீசத் தொடங்குகிறது. மேலும் இவர்கள் தங்கள் கடிதத்தில் இன்னொருவரின்மீது புகார், கோள் கூறி எழுதித் தங்களைக் குணத்தி லுயர்ந்தோராகக் காட்டிக்கொள்ள முயல்கிறார்கள். அக் கடிதத்தை வாசிக்கும்போது—"இப்படித்தானே நம்மைப்பற்றியும் இந்த மனிதன் பிறருக்கு எழுதித் தூற்றக்கூடும்"—என்று நீள நினைத்து, இந்த ஆபத்தான மனிதனிடம் அதிகம் பழகலாகாதென்று ஒதுங்க வேண்டி வருகிறது" என்றார் உக்காபிரதர். இத்துடன் நமது கடையும் பூர்த்திபெற்றது.

பகநூர்-பொன்வண்டு செட்டியார்.

> உனக்கு மிகவும் வேண்டியவர்களைப் பிறருக்கு அறிமுகப்படுத்துவதில், அதிகஜாக்கிரதையுடன் இரு. உன் மூலமாக உனக்கு வேண்டியவர்களிடம் பழகிக்கொண்டு பிறகு உன்னைப் பற்றியே அங்கு கோள், புகார்கள் கூறி உனக்கு ஜென்மசத்துருக்களாய்விடுவார்கள். அந்த இடத்தில் ஓயாமல் தொந்தரவு கொடுக்கவும் ஆரம்பித்துவிடும்போது, அது உனக்கு அவமானமாக ஏற்படும். உனக்கு வேண்டிய இடங்களை ஒருபோதும்காட்டிக்கொடுப்பது கூடாது. அது உனக்குப் பெரிய ஆபத்தாகும்.

ஒரு வீட்டுக்காரன் இரவில் படுக்கும்போது தன் வேஷ்டியின் ஒரு முனையில் முடிந்திருந்த இரண்டு காலணாக்களையும், மற்றொரு முனையில் முடிந்திருந்த இரண்டணாவையும் எடுத்து ஒரே முனையில் முடிபோட்டுக் கொண்டு தூங்கினான். காலையில் எழுந்தபோது அந்த இரண்டரையணாவைக் காணோம்! அன்னியர் எவரும் இரவில் வரவில்லை. எடுத்தவர்கள் வீட்டிலுள்ளவர்களேயானாலும், எவர்மீது சொல்வது? எடுத்தவர்கள் நாசமாய்ப் போகட்டுமென்று வைதாய், அது தன்னைச் சேர்ந்தவர்களையே வைததாகிறது. தான் வைதது பலித்து நாளைக்கு யாராவது பாயிற் படுத்தால், வைத்தியனை அழைத்து வந்து செலவு செய்யவேண்டியதுதானே தான்! தன்னுடைய ஐந்து விரலில் ஒரு விரல் தன் கண்ணைக் குத்திவிட்டால் அதை அறுத்தெறிய முடிகிறதா? அறுத்தால் அந்த வலி தனக்கேதான். தன் பல்லே தான் நாக்கைக் கடித்து விடுகிறது. அந்த நாக்கைத் துண்டிக்கிறதா? இரண்டரையணா திருடியவர்களைத் திட்டவும் முடிகிறதில்லை. இவ்வளவு குணம் கெட்டவர்கள் இந்த வீட்டில் இருக்கிறார்களேயென்று உண்டாகிற ஆத்திர கோபங்களுக்கும் குறைவில்லை! என்ன செய்கிறது?—பொறுத்து சகித்துக்கொண்டு போகவேண்டியதே.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்
REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

பூணூலு கிருஷ்ணன்பிள்ளை யாரு!



யாரப்பா இவரு? எவ்வூரு? எப்போ வந்தாரு?—வருகிறாரு? திவான்பகதூரா? ராய்பகதூரா? ராவ்பகதூரா? அல்லது ராவ்சாகிபா? அல்லது கவிராயரா? பண்டிதரா? வித்வானா? சங்கீத சரபமா? சபாரஞ்சிதமா? அல்லது வியாபாரியா? உத்தியோகஸ்தரா? யாரு இவரு? ஒரு சமயம் ஊருக்கே தெரியாமல் விகடனுக்கு மட்டும் தெரிந்தவராயிருப்பாரோ என்பீர்களோ? அப்படியல்ல, எல்லா ஊராருமே தெரிந்ததுதான்! இவர் ஒரே ஒரு ஆசாமியல்ல! மூணு வெவ்வேறு ஆசாமிகளய்யனே! மூணும் மூணு தெய்வீகங்களப்பா! வெகு பேர் பெற்றவைகளப்பா! ரொம்ப ரொம்ப பெரியவர்களப்பா! மகா மகா மகத்துவம் தாங்கியவர்களப்பா! மூவரும் ஒரு குறித்த மாதத்திலேயே வந்து ஒரு குலுக்கு குலுக்கி விட்டுப் போகிறவர்களப்பா! இவர்கள் யாரு என்றாலோ, விகடன் விவரமாகச் சொல்லட்டுமோ? கேட்கிறீர்களா!

ஃ

"பூணூலு கிருஷ்ணன்பிள்ளை யாரு" என்பதை 'பூணூலு'—"கிருஷ்ணன்"—"பிள்ளையாரு" என்று மூன்றாகப் பிரித்துக்கொண்டு பார்த்தால், விகடன் சொல்ல வந்தது பளிச்சென்று விளங்கிவிடும்! இதிலே புதுப் பூணூலுப் பெரியாரு இந்த ஆவணிமாதம் 8-ம் தேதி வருகிறாரு! பூணூல் தரிப்போரெல்லாம் அன்று புதுப் பூணூல் அணிந்து புது மாப்பிள்ளைகளாய்ப் புது அழகுடனே, ஆனால்,-பழைய விட்டுவிடாத அழுக்குக் குணங்களுடனேயே,—புதுச் சிரிப்பிலே துள்ளுவார்கள்! இந்தப் புதுப் பூணூல் பண்டிகை கோயிலுக்குள் போகிற பாப்பாரச்சாமி முதல் கோயிலுக்குள் நுழைய விடாத சாமி வரையில் எல்லோருக்குமே யுண்டு! பூணூல் தரித்ததினாலேயே உயர்ந்த ஜாதி என்றில்லை. பூணூலுள்ள வாணியச் செட்டியார்களை ஈரோடு ஈசுவரன் கோவிலுக்குள் தாழ்ந்த ஜாதி யென்று நுழையவிடாத சங்கதி கோர்ட்வரையும் போன சங்கதி தான். பெரும்பாலும் பூணூலு சாவி முடிந்துகொள்ள ரொம்ப ரொம்ப உபயோகப்படுகிறதாம்! பூணூல் அணிகிற கலியாணமும் வேறேயிருக்கிறது! செத்துப் போனவர்களுக்குத் திதி கொடுக்கையிலும், கல்யாணத்தி

னும், ஜெப தப திலும் பூணூலுக்கு மகிமை யுண்டாகிறது. அவசரத்துக் குக் கயிறு அகப்படா விட்டால் பூணூலை உபயோகிக்கிற நாகரீகர் களும் இருக்கிறார்கள்! கவிச்சக்கர வர்த்தி யென்று செத்த பிறகு அழைக்கப்படுகிற ஸ்ரீமான் சி. சுப் பிரமணிய பாரதியார் புதுச்சேரியி லிருந்தபோது தமது பூணூலை அறுத் தெரிந்து விட்டாராம்! அவரைப் பிடித்துத் தர அடையாளம் கண்டு பிடித்துக்கொள்ளும் குறிகளில் பூணூலை அறுத்தெறிந்ததும் ஒரு குறி யாகப் போலீஸ் ஸ்டேஷனில் ஒட் டப்பட்டிருந்த விளம்பரத்திலிருந் தது!

ஃ

பூணூல் போட்டதினாலேயே குணங்கள் உயர்ந்துபோய் விட வில்லை! பூணூல் அணியாததினா லேயே குணங்கள் தாழ்ந்து விட வில்லை! பூணூலுக்குத் தரவேண்டிய உயரிய மதிப்பையும் அதற்குத் தக்க மேன்பாடான சீலங்களையும் மறந்து போய்ப் பேருக்கு மட்டும் தரிக்கிற சிங்காரத்திலே என்ன காரம், சாரம் இருக்கப்போகிறது! "ஆறு கெட நாணல் இடு, ஊறு கெட நூலை இடு, காடு கெட ஆடு விடு, மூன்றுங்கெட முதலியை (முதலையை) விடு" என் றுள்ள பழமொழி சும்மா வந்ததல்ல. நாணற் புல் நிறைய முளைத்தால் ஆற் றின் பாதை கெட்டுவிடும்! ஆடு மேய்ந் தால் எந்தக் காடும் விளையாமலே பாழாகிவிடும்! முதலை யிருக்கிற பக் கத்திலே எதுவுமே நாசம்தான்! அப் படியே ஊரு கெடவேணுமானால், நூலை, அதாவது பூணூல் தரித்த பார்ப்பன சாமிகளை உள்ளே விட் டால் போதுமாம்! அவர்கள் தங்க ளின் காரிய லாபத்துக்காக ஊரை இரண்டுபடச் செய்து பிரித்துப் போடுவார்களாம்! பாப்பாரச் சாமி மட்டுமே யல்ல, மொத்தத்துக்குப் பூணூல் தரித்த எல்லாச் சாமிகளுக் குமே புத்தியும் கபடமும் சுயாலமும் அதிகமாயிருக்குமாம்! காரியத்திலே யே கண்ணாயிருக்க வைக்குமாம்! இப் படியாகச் சொல்லுகிறதிலும் உண் மையில்லாமலில்லை! ஆனாலும் ஒன்று! ஆகிறவன். ஆகாதவன் எதிலுமே யுண்டு! எல்லாமுமே கெட்டதில்லை! எல்லாமுமே நல்லதில்லை! அத்திப் பழத்தைப் பிட்டுப் பார்த்தால் அத் தனையும் சொத்தை யென்பதுபோல ஒவ்வொன்றிலும் ஒரு குறை யொட் டிக்கொண்டுதான் கிடக்கும்! கடைசி யிலே இன்னொன்று! இந்தப்பூணூலு எதற்காக எனனத்திற்கு அணிகிற தென்ற சங்கதியும், அதன் வரலாறும தூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதே முக்காலேமூவீசம் பேருக்குத் தெரி யவேதெரியாதப்பா! ஏதோஒருவழக்க மாய்விட்ட வேடிக்கைக் கோலத்தைத் தவிர வேறு சீலம் எதையும் காணே மே யென விகடன் சிரிக்கிறேன் !

ஃ

பூணூல் திருவிழாவுக்குப் பின் னே ஸ்ரீ கிருஷ்ணன் அவதாரமாகி றாரு! ஸ்ரீ ஜயந்தி ஆவணி மாதம் 17-ந் தேதி வருகிறது! கண்ணனை அர சர்பிரானாக எவருமே வணங்கவில்லை! கோபிகாரமணனாகவும், கோபால கிருஷ்ணனாகவும், பாலகிருஷ்ணனாக வும், ருக்மணி மனோகரனாகவுமே கொண்டாடுகின்றனர். கண்ணன் அரச அலங்காரத்துடன் ராதாதேவி யிடம் வர. ராதா அந்தப் புது உரு வத்தினை விரும்பாமல், அதில் அழகே யில்லையென்று தள்ளி, அவ்வுடை யைக் கழற்றி யெறிந்து, முன்போல வே தன்னொத்தநிலையினனாய், காதற் கண்ணனாய், வேணு கிருஷ்ணனாய் வந்தாலொழிய தான் பாக்கமாட்டே னென்று கண்களை மூடிக்கொள்ள, கண்ணனும் அவ்வாறேசெய்து ராதா

வின் அபீஷ்டத்தை நிறைவேற்றினார். ஸ்ரீ கிருஷ்ணனின் சுந்தர முகமும், சுயம்பிரகாஸமும், முல்லையைப் பழித்த பல்லழகும், முத்தை யிகழ்ந்த முறுவலின் வனப்பும், ஒவ்வொருவரையும் மயக்கிவிட்டது! கண்ணனின் நண்பரோ தம் வயதுக்கியைந்த இயல்பினனென்று அவனை எண்ணுவார்கள்! பால்ய ஸ்திரீகள் தம் அழகுக்கியைந்த வெகு சுந்தர சுகுமார யௌவன லாவண்ய மன்மதனென்று 'அவனிடம்' மயக்கம் கொள்ளுவார்கள்! ஞானிகள் 'அவனை' ஞான ஸ்வரூபி யென்று நவிலுவார்கள். துஷ்டர்கள் தம் 'வள்ளல்' வெளியாகுமே யென்று கஷ்டங் கொள்வார்கள்! கண்ணனின் அதியற்புதங்கள் சொல்லத்தரமோ! அப்பப்பா கண்ணன் இல்லாவிடில் பாரத யுத்தம் ஏது? கர்ணனின் தாய் குந்தி தேவியே என்று பாரதயுத்தத்துக்கு முன் பஞ்சபாண்டவர்களுக்குத் தெரிந்திருந்தால், யுத்தமே நடவாமல் சமாதானமாய்ப் போயிருக்குமே! அதை வெளிவராதிருக்க மறைத்து மூடியது கண்ணனின் கபட நாட்டியமன்றோ? பாண்டவர்களுக்கு ஐந்து அடி நிலம் தந்தால் சமாதானமாய் விடுவதாகத் துரியோதனனிடம் சமாதானத் தூதுசென்ற ஸ்ரீ கிருஷ்ணன், உண்மையாகவே சமாதானப்படுவதில் கருத்து கொண்டிருப்பாரானால், "குந்திதேவியின் குமாரனே கர்ணன்" என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் எல்லா சமாதானமும் அப்போதே பிறந்துபோயிருக்குமே! சமாதானத்தால் துஷ்ட நிக்கிரகம் கெட்டுவிடுகிறதென்று "கர்ணன்—குந்தி" செய்தியை மூடி மறைத்துவிட்டார்போலும்! கண்ணனின் மாயலீலா விசித்திரங்களை விவரிக்கவும் கூடுமோ! கண்ணனின் அவதார நாள் எல்லோருக்குமே பெருங் குதூகல நாள்! பக்திப் பரவசந் தரும் நாள்! சிறைச்சாலையிற் கண்ணன் ஜனனமான காக்ஷியை நினைக்க நினைக்க மகாமாக்ஷியே!

ஃ

"பூணூலு"—"கிருஷ்ணன்"—இதற்குப் பிறகு பிள்ளையாரு ஆவணி மாதம் 28-ம் தேதி வருகிறாரு! பிள்ளையாரப்பா, பிழைக்கிற வழி சொல்லப்பா என்று கணேசர் பிறந்த தினத்தன்று எல்லோருமே கொண்டாடுவார்கள். பிள்ளையாருக்குக் கொழுக்கட்டையின்மீதே பிரீதியென்று விசேஷமாய்ப் படைப்பார்கள். புதுப் பிள்ளையாரொன்றும் விலைக்கு வாங்கிவந்து பூசித்துப் பின் அதனை மூன்றாம்நாள் குளம் ஆறுகளில் விட்டுவிடும் தத்துவம், முதலில் விக்கிரகாராதனையிற் பழகித் தேர்ந்து, அவ்வழியில் பகவானைத் துதிக்கப் பக்குவ மார்க்கம் கண்டுகொண்டதும், அப்பால் எங்குமுள்ள இறைவனை மனக் கண்களால் நோக்கிப் பக்திசெய்யுமாறு போதிக்கும் வகைபோன்றுமிருக்கின்றது! விநாயகனடிதொழ, நம் வினை யகலு மென்பார்கள்! எழுதும் எந்தக் கடிதத்திலும் "உ" என்று பிள்ளையார் சுழி போடுவார்கள்! தன் தாயாரை யொத்த சுந்தர சோபித ஸ்திரீ ரத்நத்தைத் தேடி மணமுடித்துக்கொள்ள வாடி ஆற்றங் கரைகளிலும், குளத்தின் கரைகளிலும் விநாயகர் வீற்றிருப்பதாய்

பிறர் வீடுகளில் சிலர் எல்லா சௌகரியங்களையும் அதிகாரத்தோடு பெற்றுப் பலநாள் வரை தங்கிப் புசிக்கிறார்கள். வேறு சிலரே எந்த அதிகாரமும் செய்ய நாணி அடக்கத்துடன் தங்கியிருந்து, தாங்கள் வந்த காரியம் பார்த்துக்கொண்டு புறப்படுகிறார்கள்.

விநோதம் பேசுவார்கள். விநாயக புராணம் என்பது ரொம்ப ரொம்பப் பெரிய புராணம்! தும்பிக்கையானைத் தொழாத இடமேயில்லை! வணங்காதவர்களேயில்லை! ஸ்ரீரங்கத்தில் கோயில் விமானத்துள்ளே விநாயகருக்குப் பட்டைநாமம் பளபளப்பாய்ச் சாத்தித் "தும்பிக்கை யாழ்வார்" என்ற பெயருடனே வைத்திருக்கிறார்கள்! ஆனால், இந்தத் தும்பிக்கை யாழ்வார் நாலாயிரப் பிரபந்தத்துள்ளே ஒரு பாடலும் சொல்லவில்லை! இன்னொரு வேடிக்கை! பிள்ளையார் சதுர்த்தசியன்று அவரை வணங்குவோர் பட்டினி கிடந்து விரதமிருப்பார்கள்! பிள்ளையாரை வணங்காத ஸ்ரீவைஷ்ணவர்கள் அன்று மூன்று வேளையும் முழுக்கத் தின்று விழுங்குவார்கள்! அவர்களின் வீடுகளில் பிள்ளையார் கொண்டாட்டமிராது! இப்படியே, ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தியின்போதும் சைவர்கள் விரதமிரார்கள்! மூன்று பொழுதிலும் கொழுக்கத் தின்று வயிறு உப்புவார்கள்! பட்டினி கிடக்க மாட்டார்கள்! அவர்களின் இல்லங்களில் கிருஷ்ணன் பிறந்த திருவிழா கிடையாது! சிலர் கருவாட்டுக் குழம்பும் அன்றைக்கு ருசி பார்ப்பார்கள்! ஒரு ஹிந்து மதத்துக்குள்ளே இரண்டு விதமான போக்கு! இதெல்லாம் பெரிய விகட வேடிக்கைகளல்லவா? இப்படியாக, ஆவணி மாதத்தில் இந்த மூன்று விசேஷங்கள் ஒன்று கூடிக்கொள்வதால், விகடன் இம்மூன்றையும் சேர்த்து ஒன்றாகப் பிசைந்து "பூணூலு கிருஷ்ணன்பிள்ளை யாரு" என்று ஒரே கம்பியாக்கி நீட்டிக் கூட்டிக் காட்டிவிட்டேன். சுண்டல்—வடை—பாயசம்—முறுக்கு—சீடை—தோசை — கொழுக்கட்டை — சந்தனம்—புஷ்பம்—பழம்—பாக்கு வெற்றிலை—சூடம் சாம்பிராணி—வாழை மரம் முதலிய செலவுகளுக்கு இப்போதே பணம் சேர்த்து வையுங்கள்! ராம்! ராம்! சுபம்! சூ! சுவாஹா!!

தன் காரியத்திற்காக உன்னிடம் வருபவனின் வெளிவணக்க வேஷங்களிலே நீ மயங்கி விடாதே. அவனது முன் குணங்களை முக்கியமாக ஆராய்வதற்கு அதுவே தக்க சமயம். அவனது இனிய வசனங்களை உன்னை ஏமாற்றுவதற்கு உபயோகிக்கும் கூர்மையான அம்புகளாக எண்ணி விலகு.

தாயாதிகளுக்குத் தங்கள் வீட்டில் இடம் கொடுத்தால், பிறகு அவர்களைச் சுலபத்தில் எழுப்ப முடியாதென்றும், அந்த வீட்டின்மேல் பிற்காலத்தில் அனுபோக பாத்தியம் கொண்டாடுவார்களென்றும், ஆகவே, அவர்களுக்கு வீட்டில் இடம் தருவது ஆபத்து என்கிறார்கள்.

தன்மீது எவ்வளவோ அன்புள்ளவர்களை அவர்களின் அன்பு தெரியாமல் வீணே பகைத்துக்கொள்கிறார்கள். அவர்கள்மீது துவேஷமாகிறார்கள். இவர்களின் பேதமைக்கு அந்த அன்பினர் மனது வாடித் துக்கிக்கின்றனர்.

காலம் என்னும் நீரோட்டத்தை இரு கரைகள் என்னும் ஓயாத வேலைகள் அமைந்த ஆற்றின் வழியே செல்லவிட்டால்தான் ஜலமும் தெளிவுடன் ஆகி, ஓடுகிற சுறுசுறுப்பும் கொண்டிருக்கும். அவ்விதமின்றி குளத்துநீர் போன்று சோம்பி ஒரே இடத்தி லிருப்பின் பாசி படர்ந்து நாறும்.



மற்றவர்களுக்கு ஒரு விசேஷம் நடக்கும்போது, அந்த விசேஷம் தங்களுக்கு இல்லாதவர்கள் ஆத்திரப்பட்டு ஏங்கி வீங்குவார்களாம்!

தாங்கள் வேறு, அவர்கள் வேறு, இவர்கள் வேறு, அவர்கள் அன்னியர் என்று பிரித்து, பேத நினைவு கொள்ளுகிறவர்கள் பயங்கரமான இரத்த வெறி கொண்ட கோனாய்களாம்! ஆனால், பெருமூச்சைத் தவிர வாரிக் கொள்வது ஒன்றுங் காணோமாம்!

பிறருக்குக் கெடுதி நினைக்கையில்தான், தன் கையில் இருப்பதற்கும் ஆபத்து வந்துவிடுகிறதாம்!

இப்போது சிரித்து வஞ்சகம் பேசி ஒருவனை ஏமாற்றிவிட்டதற்கு, நாளை தானே அவ்விதம் ஏமாறிப் போகும்படியும் வருமாம்!

ஒருவன் நன்றாக உடுத்திக்கொள்ளும்போது பொறாமைக்காரன் தன் கண்ணால் அதைக் காணாதிருக்க வெகுதூரம் போய்விடவோ, எங்கேயாவது ஒளிந்துகொள்ளவோ எண்ணுவானாம்!

தன்னை மதிக்காதவர்களைத் தான் அவர்களைவிட மேன்மைப்பட்டவனென்று எண்ணிக்கொண்டு பழிக்கிறார்களாம்!

இழந்துவிட்ட இறந்துபோனவர்களைவிட, உயிரோடு இழக்கக் கொடுத்துப் பிரிந்தவர்களின் தொகைதான் அதிகமாம்!

இலையில் புசித்து வழக்கமில்லாதவர்கள், தங்கள் விருந்ினர்கட்குப் பாயின்மீது இலையைப் போட்டுச் சாதம் படைத்துத் தடுமாறுவார்களாம்!

சும்மா சும்மா சிலர் நம்ம வீட்டுக்கு வருவது நம்மைப் பார்த்துப் போவதற்காகவா என்று ஒருவர் விகடனைக் கேட்டதற்கு, மேலுக்குப் பசப்புவது அப்படித்தானானாலும், உள்ளுக்கு ஏதாவது காரியம் வைத்துக் கொண்டேதான் வருவார்களென்று பதில் சொன்னானாம்!

திடியர்களென்றுபேர் வாங்கியவர்களெல்லாம் இளைத்துத் துரும்பாகிவிட, துரும்பாயிருந்தோரெல்லாம் உப்பிக் கொழுத்து வருகிறார்களாம்!

தேகப் பயிற்சி செய்து பலம் சம்பாதிக்கத் தட்டானிடம் நகை செய்யக் கொடுத்து நாலு மாதம் அலைந்தால் போதுமாம்!

வீட்டிலே எத்தனை பிணி பாடுகள் தொல்லைகளாயினும், செட்டியார் தனது கடையில் வெகு ஒழுங்காக வந்து உட்கார்ந்து வியாபாரம் செய்யத் தவறவே மாட்டாராம்!

"அமிர்த குணபோதினி"யிலுள்ள அநுபவக் குறிப்புகளை வேறு விதமாய் மாற்றித் தானாக எழுதியதாய் மற்ற பத்திரிகைக்கு அனுப்பினாலும், அதைப் படிப்பவர்கள் இன்ன பத்திரிகையிலிருந்து எடுத்ததென்று தெரிந்து கொள்கிறார்களாம்!

பிறரை நேசிக்காதவர்களுக்குத் தமது மனைவி மக்களின் நேசமும் கிடைக்காமல் கடவுள் பிரித்து விடுவாராம்! அப்படிப் பிரிவு வாராதிருப்பதற்காகவாவது மற்றவரோடு கலந்து நேசித்து அன்பாயிருக்க வேணுமாம்!

ஒரு நல்ல புஸ்தகத்தின் பெயரை ஒருவன் சொன்னால், உடனே, "உன்னிடத்தில் இருக்கா?" என்று கேட்க வேணுமாம்! தன்னிடத்தில் இருந்தாலும் இல்லை யென்று மறைக்க வேணுமாம்!

பணக்காரனுடன் பத்து பேராம்! பயித்தியக்காரனுடன் பத்து பேராம்!

சென்றமாதம்

2000-மனுக்கள்:—

"ஆழாக்கு அரிசி, மூவாழாக்குப் பானை, முதலியார் வருகிற வீறப் பைப் பாரு" என்பதாய், சுக்கூர் ரயில்வே ஒர்க் ஷாப்பில் 20-ரூபாய் சம்பளத்தில் 20-காலி ஸ்தானங்களிருந்ததில், அதற்காக 2000-மனுக்கள் வந்து குவிந்ததாம். மனுதாரர்களின் கூட்டம் சகிக்க முடியாது போக, ரயில்வே அதிகாரி வெறுப்படைந்து ஆட்களைத் தெரிந்தெடுக்க வேறு தேதியைக் குறித்துவிட்டுக் கூட்டத்தைக் கலைத்தாராம். ஒரு காசு சம்பளமானாலும் அது உத்தியோக பதவியிலிருந்து பெறவேண்டுமென்கிற ஆவல் செய்யும் கோலம் இது. அத்துடன் ஜீவனத் திண்டாட்டமுங்கூட. எந்தப் படிப்புமில்லாமலே காய்கறிக்கடைச் சிமாட்டியம்மாள் தினமும் இரண்டு ரூபாய் சம்பாதித்துவிடுகிறாள்!

ஃ

பெண்மணிகளுக்கு மகாத்மாவின் புத்திமதி:—

"ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே" என்பார்கள். மகாத்மாஜீ காசியில் பெண்மணிகளுக்குப் பின்வருமாறு போதித்தார்:—பெண்களுக்குக் கற்பும், பரிசுத்த ஹிருதயமுமே நல்ல பூஷணங்களாகையால் செயற்கை யாபரணங்களைவிலக்கிவிடவேண்டும். இந்த தேசத்தில் சீதையும் சாவித்திரியும் நடந்து காட்டிய மார்க்கத்தைப் பெண்மணிகள் பின்பற்றவேண்டும். தாங்களும் எழுதவும் வாசிக்கவும் தெரிந்துகொண்டு, தங்களின் மக்களுக்கும் எழுதப் படிக்கக் கற்பிக்க வேண்டும்.

ஃ

ஜார்ஜ் மன்னரது ஆளுகையின் வெள்ளி விழா:—

"வானம் மும்மாரி பொழிக; மன்னவன் கோள் நிலை திரியாக் கோலோன் ஆதுக" என்பது வாழ்த்து. (கோள்=குணம்,கோட்பாடு) ஜார்ஜ் வேந்தர் மணிமுடி தாங்கி 1935ளு மே 6-ம் தேதியோடு 25 வருஷங்களாவதால் அந்த தினத்தில் ஆட்சியின் வெள்ளி விழா கொண்டாட ஏற்பாடாகிறது. இவ்விதம் வெள்ளி விழா நடைபெறுவது இதுவே முதல்தடவையாம். 1935-ம் வருஷத்திற்கு வெள்ளி ஜுபிலி வருஷம் என்று சொல்லப்படுமாம். இதையொட்டி இந்தியாவுக்கும் ஒரு சுபசெய்தி—நன்றியின் மகிழ்ச்சி—தெரிவிக்கப்படுதலும் கூடும். பிரிட்டிஷ் அரசரின் குடும்பத்துக்குத் தீர்க்காயுள் பாக்கியம் சொந்தம். மன்னர்பிரான் பொன் ஜுபிலியும் கண்டு நீடூழி வாழ்க.

ஃ

ஆசிரியர்கள் தங்களின் சொந்த உழைப்பினாலும் புத்தி நுட்பத்தினாலும் மிகு பிரயாசையுடன் எழுதியிருக்கும் விஷயங்களையும் கற்பனைகளையும், மற்றவர்கள் தாங்கள் புஸ்தக ரூபமாய்ப் பிரசுரித்துக்கொள்ள இலவசமாய்க் கேட்டால் அதற்கு ஆசிரியர்கள் சம்மதிக்க முடியுமா? தாங்கள் எழுதியவற்றை ஒரு சொத்தாக—ஒரு ஜவேஜியாக ஆசிரியர்கள் மதிக்கையில் பிறருக்குத் தருவதெப்படி ? வியாபாரச் சரக்கிலே இலவசம் உண்டா ?

சட்டசபைப் பிரவேசம்:—

"கலியாணம் செய்கிறதும் கதவைச் சாத்துகிறதும்" முதலில் ஆகிவிடுகிற வேலையானாலும், பிறகு தான் இருக்கிறது எல்லா பாடும் திண்டாட்டமும்! 'தேச நலத்தைப் பெருக்குவதற்கு அனுகூலமாக இருக்கும் எல்லா வசதிகளையும் பூரணமாக உபயோகித்துக்கொள்ள வேண்டுமென்னும் உத்தேசத்துடன் காங்கிரஸ் கட்சியினர் சட்ட சபைக்குள் பிரவேசிக்கப் போகிறார்கள்' என்றும், அவர்கட்கே ஓட் தரவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. இதற்கு முன்பும் சட்டசபையிலமர்ந்து ஒரு சிறு விரலை அசைக்கவும் முடியாமற் போன அனுபவம் இனி நேராதிருக்குமாவென்பது பிறகே பட்டுத்தெரிய வேண்டிய விஷயம். காங்கிரஸின் நற்பெயரைத் தங்களின் சுயலாப கௌரவங்கட்கு உபயோகித்துக் கொள்வோரும் இல்லாமலில்லை. காங்கிரஸில் சேர்ந்த வக்கீலென்றால் அவருக்கு அதிக பிரஸித்தி; அந்த அதிகப் பிரக்யாதிக்குத் தகுந்தபடி அதிக பீஸு! தங்களின் சுய கௌரவங்களுக்கென்று உழைக்கும் வழியிலே தேச நன்மையையும் சற்றே நாடுவோர் ஒரு சாரார். தேச நலத்திற்கே தங்களின் உடல் பொருள் ஆவியை அர்ப்பணஞ் செய்திருப்போர் மற்றொரு சாரார். இவர்களைப் பிரித்தறிவதும் சுலபமே.

ஃ

கனம் ஆகாகானின் இராஜ்ய ஆசை:—

"ஆசைக்கு அளவில்லை" என்பதாக, கனம் ஆகாகான் தாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குச் செய்துள்ள உதவிக்காகத் தமக்கு ஒரு ராஜ்யம் வேண்டுமென்று கேட்டதாகவும், அது மறுக்கப்பட்டு விட்டதாகவும் செய்தி. ஒரு இராஜ்யம் கேட்கும்படியாக அவ்வளவு கனத்ததாய் ஆகாகான் என்னென்ன உதவிகள் செய்துள்ளாரென்பது வெளிவந்தால் அது படிப்பதற்கு ருசிகரமாக இருக்கும்.

ஃ

மகாத்மாவின் உபவாஸம் :—

"காந்தியின் வழியை நெஞ்சே கணந்தோறும் பாடு கண்டாய்" என்றொருவர் வாழ்த்தினர். வார்த்தா கஞ்சநகரில் காந்தியடிகள் ஆகஸ்டு மீ 7-ந்தேதி காலையில் 6-மணிக்குப் பாலும் பழரஸமும் அருந்தியபின்னர் தமது உண்ணாத உபவாஸத்தைத் தொடங்கி, ஆகஸ்டு மீ 14-ந்தேதி காலையில் 6-மணிக்குப் பூர்த்தி செய்தருளினர். இறைவன் மகாத்மாஜீயைக் காத்தருள்வாராக.

எந்த நூலாசிரியரிடம் சென்றாலும், அவர் எழுதிய நூல்களை—அத்தனையும் இலவசமாகவே கொள்ளை கொள்ளும் நோக்கத்தினராய் சில சண்டாளர்கள் இருக்கின்றனர். இன்னோருக்கு இலவசத்தில் சேகரிப்பதே எப்பொழுதும் வேலை இலவசத்தில் பெற்றதற்கு ஒரு புன்னகையோ, விஸ்வாசமோ காண்பிக்கின்றனரா? அதுவுமில்லை.

வீட்டு விஷயம் பெரிய சங்கதி. நண்பர் உறவினர் எவ்வளவு வேண்டியவரா யிருந்தபோதிலும் சரியே; வாடகையின்றி இலவசத்திலிருக்கத் தங்கள் வீட்டில் இடம் தரார். தரினும் பிறகு தந்திரமாய் வெளியேற்றிவிவேர்.



சாரதா தேவி.

சிறிய குடிசை. சூரியனுடைய கிரணங்கள் ஆயிரம் ஈட்டிகளாகப் பாய்ந்து அக்குடிசையை விளக்கிற்று அது குடிசையே யாயினும் சுத்தமாக இருந்தது. கிழவி யொருவள் பாயும் படுக்கையுமாய்க் கிடந்தாள். அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சாரதா அழுதுகொண்டிருந்தாள். "சாரதா! என் செல்வமே! ஏன் அழுகிறாய்? எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. நேரமாய்விட்டது நீ புஷ்பங்களைக் கட்டி வாடிக்கை வீடுகளுக்குப் போட்டுவிட்டுச்சீக்கிரம்வாகண்ணே!" என்றாள் தாயார். சாரதா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தோட்டத்திற்குள் புகுந்தாள்.



ஃ

குடிசையும் தோட்டமுமே சாதாவின் ஆஸ்திகள். அத்தோட்டத்தை ஒரு வருடமாக உழைத்து இராப்பகலாகக் கண்ணோடு கண்வைத்து உண்டாக்கினார்கள் சாரதாவும் கிழவியும். கிழவி அவளுடைய தாயார். சாரதா கிழவியின் ஏக புத்திரி. உலகத்திலே வேறு யாரும் அவர்களுக்குப் பந்து மித்திரர்கள் கிடையா. தரித்திர காலத்தில் நேசர் உறவினர் ஏது? சாரதா பூக் கொய்து தொடுத்து வைத்தால், கிழவி அவற்றை வாடிக்கை வீடுகளுக்குப் போட்டு வருவாள். சென்ற ஒரு மாதகாலமாக நோய்வாய்ப்பட்டுக் கிழவி படுக்கையாகிவிடவே, சாரதா தான் அவ்வேலையைச் செய்து வந்தாள். காரணம் அதனால் கிடைக்கும் பணமே அவர்கள் உயிருக்கு ஆதாரம்.

ஃ

தோட்டம் சிறியதே யாயினும் மல்லிகை, ரோஜா, சம்பங்கி முதலிய உயர்ந்த செடிகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகள் பூத்து ரமணீயமான கதம்ப பரிமளத்தை வீசிற்று. இத்தகைய இன்பமுறும் பூந்தோட்டத்தில்

புகுந்த நம் இன்னொளியாள் பூக்கொய்து தொடுத்தாள். பிறகு தலை சீவிக் குளித்து மேகலைத் திருத்தி யணிந்து புஷ்பக்குடலை எடுத்தாள். அவள் நகையின்றி இருந்தபோதிலும், இயற்கைக் கூந்தலின் அழகும், நீலம் படர்ந்த மானின் மருண்ட பார்வையும், சற்றுச் சிவந்த மேனியும், பக்குவ மடைந்து சிறப்புற்று விளங்கிய அங்கங்களும் யார் மனதைத்தான கொள்ளை கொள்ளாது?

ஃ

பூக்குடலையை எடுத்துக்கொண்டு "அம்மா நான் போய் விரைவில் வருகிறேன். வரட்டுமா?" என்று புன்னகையும் விசனமும் கூடிய முகத்தோடு விடை கேட்டாள். "கண்ணே! பத்திரமாய்ப் போய் பத்திரமாக வா. ஜாக்கிரதையாகப் பார்த்துப் போ. சீக்கிரம் பொழுது போவதற்குள் வந்து விடு" என்றாள் மாதா. சாரதா வெளியே வந்தாள்.

ஃ

—"யாரங்கே! பூக்காரம்மாளா? உள்ளே வேலையாக இருக்கிறார்கள். அம்மா, உள்ளே போய்க் கொடு" என்றார் சதாசிவ ரெட்டியார். சாரதா நாணிக்கோணி அடக்கமாக அன்னமென அடியிட்டு உள்ளே சென்றாள். ரெட்டியாரும் அவள் பின்னே சென்றார். சாரதா உள்ளே யாருமில்லாததுகண்டு ஒருகால் சமையலறையி லிருக்கின்றனரோ என்று அந்த அறையை நோக்கத் திரும்பினாள். பின்னே ரெட்டியார் நிற்பது கண்டு அஞ்சி அகன்று, "எங்கே. அம்மாளைக் காணோம்?" என்று கேட்டாள். குயிலை நிகர்த்த அவள் மொழியின் கீதத்திலே மயங்கிய ரெட்டியார் பல்



லிளித்தார். பிறகு "இல்லை. உள்ளே தோட்டத்தின் வழியாய் ஒருவேளை வெளியே போயிருப்பார்கள். அவர்கள் இருக்கா விட்டால் என்ன? நான் இல்லையா?" என்றார். பைந்தொடி பயந்தாள். உடல் நடுக்கங் கொண்டாள். ஒன்றும் பேசாது மேலே நடக்கலானாள். "கண்ணே! என்ன அவ்வளவு கோபமாகப் போகிறாயே" என்று அவளைப் பிடித்தார். சாரதா பிடிக்குத் தப்பி, "ரெட்டியாரே! என்ன காரியம் செய்ய நினைத்தீர். உமக்கு மூளை கிடையாதா...?" என்று சொல்லியவள், இனி தாமதித்தால் என்ன நேரிடுமோவென்று ஓடி வெளியே வந்தாள். பெண்களின் சரீர லாவண்யம் எவ்வளவு சிறப்பைத் தரினும், அதுவே அவர்கட்கு எப்போதும் ஆபத்தாய் முடிகின்றது. பிறரது பலாத்

காரத்திலிருந்து தாங்களே தங்களைக் காத்துக்கொள்ள மங்கையர் தமது தேச அமைப்பு வன்மையில் அத்துணை சக்தி பெற்றிருக்கவில்லை.

ஃ

ரெட்டியார் இலேசில் விடுபவரா? "சின்னஞ் சிறிக்கியாகிய இவள் நம்மை முட்டாள் என்றாளே. இவளை விட்டேனா பார்" என்று மீசையை முறுக்கினர். இவ்வாறு ஆண்களின் மீசை முறுக்குக்கு இலக்காகிய பெண் பிள்ளைகள் எத்தனையோ பேர்! அவர்கள் பாடு விவரிக்கவும் ஒண்ணுமோ? அந்தரங்கத்தில் பல பெண்களைக் கெடுத்துவிட்டு, வெளிக்குப் பரம யோக்கியர்களாக நடிப்பது ஆடவரின் ஸம்பிரதாயம். ரெட்டியார் பலாத்கரிக்க முயன்ற சமயம் தபாற்காரன் உள் நுழையவே, பெண் கொடியும் அத்தருணத்தில் தப்பித்துக்கொண்டு வெளிச்சென்று விட்டாள். ரெட்டியார் தமது காம பரவச அவசரத்திலே கதவை மூடித் தாளிட மறந்தார் போலும்!

ஃ

பட்ட காலிலே படும். நாட்கள் சில சென்றன. கிழவியின் நோய் அதிகப்பட்டதே யொழிய குறைந்தபாடில்லை. சாரதாவுக்குப் பயமும் பீதியும் அதிகரித்தது. அன்று நடந்த அக்கிரமத்தை யாரிடம் சொல்லி அவள் தன் பீதியை யாற்றுவாள்? அதைக் கேட்பவள் எமனுலகத்தில் காலை வைத்துக் கொண்டிருந்தாள்.

ஃ


ஒரு நாள் திடீரென்று மழையும் காற்றும் அதிகரித்துப் புயலாக மாறிற்று. அதோடு விஷக் காற்றொன்றும் வீசிற்று. இது கூடலூருக்குச் சுமார் இருபது மைலுக்கு இப்பால் புறப்பட்டு நேரே வடமேற்கு மூலையாக நூறு மைல் வரையில் அடித்தது. மரங்களையும் வீடுகளையும் தூக்கி எறிந்து நாசமாக்கிற்று. எங்கும் சேதம்! அலங்கோலம்!!

ஃ

அம்மியும் குழவியும் பறக்கும்போது சாரதாவின் சிறு குடிசை என்ன செய்யும்? அப்பெருஞ்சோதனையில் தன் தாயைக் கட்டியணைத்து அழலானாள்! அதே இரவு கிழவியின் கடைசி இரவாகவும் முடிந்தது. "செல்வமே, எனக்குப் பின் ஒண்டியாய் நீ எப்படி காலம் கழிப்பாய் என்பதுதான் என் மனதை வருத்துகிறது. உனக்குக் கல்யாணங்கூட செய்து பார்க்காத பாவியானேன்" என்று கண்ணீர் விட்டாள். சாரதா ஓவென்றுக் கதறினாள். பாழும் கடவுளுக்கும் கண்ணில்லாது போயிற்று. மறு வினாடியிலே அந்நாள் தோன்றிய புயல்காற்று குடிசையை வேருடன் தூக்கி எறிந்தது. கிழவி மகளை

அதிர்ஷ்ட காலத்துக்கு ஒரு சிறு கடை வைத்தாலும் அதிக வியாபாரமாகிக் கனத்த லாபம் வந்து பெரிய கடை வைத்துச் செல்வவானாகிவிட முடியும். ஆனால், அதிலுங்கூடக் கொஞ்சம் நிதானப்பட வேண்டும். ஆகாச வாணம் போல் திடீரென்று உயரக் கிளம்பி வெகு அழகாகத் தோன்றி, மறு நிமிஷமே மதிப்பற்ற சிறு குச்சியாகக் கீழே விழுந்து கெட்டுச் சாய்ந்தவர்களுமுண்டு.

விட்டுப் பிரிய மனமில்லாமல் கெட்டியாக அணைந்தாள். "அம்மா! மோசம் செய்துவிட்டாயா கடைசியில்" என்று கதறினள். "மகளே—" என்று



ஏதோ சொல்ல வாயைத் திறந்தவள் உடனே கண்ணை மூடிக்கொண்டாள். பிறகு நடந்த சம்பவம் என்ன? தெய்வச் செயலை அறிந்தார் யார்? மறுநாள் உதயத்தில் சாரதாவின் தாய் அசையாமற் கிடந்த தன்னுடலை அப்படியும் இப்படியும் அசைத்துக்கொண்டு கண் திறந்தாள். ஜலம்வேண்டுமென்று கையை உயரத்தூக்கினுள். கடவுளைத் தியானித்துத் தவங்கிடந்த சாரதா "அம்மா பிழைத்துக் கொண்டாயா" என்று தன்னை மீறிய மகிழ்ச்சியுடன் கூறி, தாயின் வாயில் பாலை ஊற்றினுள். ஒரு மாதத்திற்குப் பிறகு சாரதாவின் அன்னை குணப்பட்டெழுந்தாள். இது ஒரு பெரிய ஆநந்தம்! ஆயினும், ஜீவனமார்க்கம் அந்தகாரமாயிற்று. தாயாரால் முன்போல் எந்தவேலையும் செய்யக்கூடவில்லை. அவளுடைய தோட்டமும் அந்தப் புயல்காற்றில் அலங்கோலமாய்விட்டது என்று சொல்லவும் வேண்டுமோ?

ஃ

அபலையான சாரதாவைக் கண்டு மனம் இரங்காதவரார்? தூக்கி எறியப்பட்ட குடிசையைச் செப்பனிட்டுப் புதுப்பித்தாள். ஆனல், வயிற்றுக்கு இனி எந்த பிழைப்பைத் தேடுவது? காலை முதல் மாலை வரையில் பூந்தோட்டத்தில் வேலைசெய்து தன் உயிரையே அதனிடம் வைத்துப் பராமரித்த சாரதா இப்போது கண்ணீர் விடலானுள். யுவதியான சுகுமாரிக்கு எவரையும் வாய் திறந்து கேட்க மனமொப்பவில்லை.

ஃ

சோதனையில் கொண்டுவந்த கடவுள் வழியும் காட்டாமல் போவாரா? தற்செயலாய் அக்கிராமத்திற்குக் கதர் பிரசங்கம் செய்யவந்த தொண்டர்களால் நூல் நூற்கவும், அவர்களிடமிருந்து இலவசமாக இராட்டையும் பெற்றுள். தினமும் நூல் நூற்று ஐந்து மைலுக்கப்பாலுள்ள கதர் கிடங்குக்

நம்மீது பகையும் துவேஷமும் கொண்டிருப்பவர்களுக்கு நமது அவசர சமயத்துக்காகக் கடிதம் எழுதி வரும்படி வேண்டுகிறோம். அவர்களோ. மிக்க 'ராங்கி'யாக வருவதேயில்லை. அவ்விதம் வராமற் போனதிலிருந்து அவர்களின் கொரேத்தை இன்னும் விளக்கமாய் நாம் அறியும்படியாகி, அவர்களிடம் ஏமாறுதிருக்க முன்னைவிட அதிகமான எச்சரிக்கையைப் பெறுகிறோம்.

குப்போய் விற்றுக் கிடைத்த ஊழியத்தைப் பெற்றுத் தன் அன்னையையுங் காத்துத் தானும் பிழைத்துவந்தாள்.

ஃ

ஒருநாள் மாலை சாலையோரமாக அன்று நூற்ற நூலை எடுத்துக் கொண்டு கதர் கிடங்குக்குப் போய்க்கொண்டிருந்தாள். வழியில் திடீரென்று இரண்டு முரடர்கள் பின்னிருந்து பாய்ந்து சாரதாவைப் பிடித்தார்கள்.



கையும் காலும் கட்டப்பட்டது. சதாசிவ ரெட்டியார் அடுத்த நிமிஷத்தில் ஒரு வண்டியில் வந்து இறங்கினார். "கல கல"வென்று சிரித்துக்கொண்டு சாரதாவை அணுகி; 'பெண்ணே! என்ன சொல்லுகிறாய். இப்போது? என்னை இப்போதாவது முட்டாள் என்று நினைக்க உனக்குத் துணிவு உண்டாகுமா?" என்று உறுமினார். "அடே காதகா, ஓர் அபலையை இவ்வாறு துராக்கிருதம் செய்யும் நீ புத்தியுடையவன் என்று நினைத்துக் கொண்டாயோ? எ, மதிகேடா......" என்று மேலும் சொல்வதற்குள் தூரத்தில் மோட்டாரின் கொம்பொலி கேட்டது. ரெட்டியார் திடுக்கிட்டார். ஆட்கள் மறு நிமிஷம் காணவில்லை. வண்டியேறிப் பறந்தார் ரெட்டியாரும். அதற்குள் மோட்டார் சமீபித்தது. மோட்டாரிலிருந்த கிழவர் பெண்ணின் அழுகையைக் கண்டு நிறுத்தச் சொன்னார். மோட்டார் நின்றது. கிழவர் இறங்கி சாரதாவை அணுகினார். அதற்குள் மற்றொரு மோட்டார் வந்து நிற்க, அதற்குள்ளிருந்த பெண்கள் இறங்கி வந்து சாரதாளைப்பார்த்துத் திடுக்கிட்டனர். கிழவர் சிரித்தபடி 'என்ன சமாச்சாரம்! யார் செய்த வேலை இது?" என்றார். பக்கத்திலிருந்தவர்கள் சாரதாவின் கட்டை விலக்கினர்.



சாரதா கிழவரை நமஸ்கரித்துத் தன் வரலாற்றைச் சொன்னாள். கிழவர் சிரித்து விட்டு அவளைத் தட்டிக் கொடுத்து விட்டுக் கதர் நூலைக் காட்டும்படிக் கேட்டார். சாரதா கொடுத்தாள். அதற்குள் பக்கத்திலிருந்தவர்கள், கிழவர் தான் அந்த நூல் இயக்கத்தை ஆரம்பித்த மகாத்மா காந்தியடிகளென்றும், அவர்கள் ஹரிஜனத் தொண்டிற்காகச் சுற்றுப் பிரயாணஞ்

செய்வதாகவும் சொன்னார்கள். சாரதா உடனெழுந்தாள். அடிகளை நமஸ்கரித்துத் தன்னைக்காத்த அப் பேருபகாரிக்குத் தான் என்ன செய்ய முடியும் என்று அலறினள். கிழவர் சிரித்தபடி, "என்ன உபகாரம் செய்ய முடியுமென்று கேட்கிறாய்? இந்நூல் அபிவிருத்தியும், ஹரிஜன சேவையும் செய்தால் போதும். என்னுடன் ஹரிஜனத் தொண்டு செய்யப் பிரியமா?" என்றார். "ஆஹா, மிக்க சந்தோஷம்." என்றாள். "சரி அப்படியானால் இதோ இருக்கும் மீராபாய் இனி உனக்குக் குரு. அவளை விட்டு நீங்காதே" என்றார். மீராபாய் சிரித்தார். சாரதாவைக் கட்டியணைத்து முத்தமிட்டார். மறு நிமிடத்தில் எல்லோரும் மோட்டாரில் ஏறினர்கள்.

ஃ

சாரதாவை ஒரு தேச பக்தர் விவாகம் செய்து கொண்டார். தன் அன்னையுடன் சாரதா சுகமே கணவனோடு வாழ்ந்து வருகிறாள். இப்போது 'ஹரிஜன சாரதா தேவி' என்றால் தென்னாட்டில் யார் தான் மூக்கின் மேல் விரலை வைக்க மாட்டார்கள்!!

P. G. குலசேகரன்,
"எதிரொலி" ஆசிரியர்.

இருக்கவும் அவா! போகவும் அவா!

தான் புறப்பட்டுச் சென்ற வெளியூரில் இன்னும் சில நாட்களுக்கு இருக்கவும் எண்ணம் தோன்றுகிறது. வந்து நாளாய்விட்டதே என்று ஊருக்குச் செல்லவும் ஆவல் அதிகமாகிறது. இன்று வெளியில் சென்று காரியங்களைக் கவனிக்கவேண்டுமென்ற சிரத்தையும் ஒருபக்கம் தூண்டுகிறது. வெளியில் சென்று சிரமப்பட வேண்டியதை நாளைக்கு வைத்துக்கொண்டு, இன்றைக்கு நமது இருப்பிடத்தில் தானே ஓய்ந்து கிடந்து நிம்மதிப்படுவோமெனறும் தோற்றுகிறது. பெண்களுக்குத் தாய் வீட்டிலிருக்கவும் அவா. கணவனின் பிரிவாற்றாமையால், சீக்கிரம் பர்த்தாவைக் காணவும் ஆசை. எதற்கு இணங்குவது?—எதற்கு மறுப்பது?—எவ்வழி செல்வதோ?—ஏதும் தோன்றிலதே!

சுத்த மூடர், முரடர், அகம்பாவம் பிடித்தவர், திடீரென விலகுபவர், பிறர் பாடு அறியாதவர், சிடு சிடுத்தவர், முன் கோபிகள், மரியாதையற்றவர், துடுக்கு வார்த்தையினர், படபடத்த தன்மையினர், பொறுமையாளர், வஞ்சகர், பொய்யர் இன்னோருடன் கலந்து உறவாடி சமாளித்து ஒன்று சேர்ந்து மனோ சமாதானப் பட்டிருப்பதென்பது வெகு கஷ்டமான வேலை.

ஆங்கிலேயரும் ஹிந்துக்களும்.

ஆங்கிலேயருக்கும் ஹிந்துக்களுக்குமுள்ள வித்யாஸங்கள் அநந்தம். ஹிந்து அரசர்கள் மகுடாபிஷேக காலத்தில் இலக்ஷக்கணக்கானவர்கட்கு அன்னதானம் செய்வர். இங்கிலாந்திலோ அப்படியில்லை. முன்னொரு மகுடாபிஷேக காலத்தில் இருபதினாயிரம் ஏழைப் பிள்ளைகளுக்கு அன்னமிடச் சிலர் செய்த ஏற்பாடு நிறைவேறவில்லை. இதுவரை இல்லாத ஸம்பிரதாயம் இப்போது வேண்டாமென்று விட்டுவிட்டனர். நிற்க, இன்னொரு வித்யாஸத்தைச் சொல்லுகிறோம். ஆங்கிலேயருக்குள் எதிர் மரியாதை செய்வது வெகு விநோதம். பணச் செலவில்லாமலே அவர்கள் எதிர் மரியாதை செய்கின்றனர். யாரேனும் கல்யாண காலத்தில் லக்ஷம் ரூபாய் பொறுமான ரத்நஹாரத்தை வெகுமதியாயளித்தால் அதற்கு (Thanks) வந்தனம் என்று சொல்லுவார்கள். இதன்றி, விவாகத்தில் ஏழைகளுக்கு அன்னமிடும் வழக்கம் கிடையாது. இங்கிலாந்திலுள்ள ஏழைகள் வேலை செய்தே ஜீவிக்கவேண்டும். ஆங்கிலேயர் எழுதும் கடிதங்களில் எந்தக் காரியம் முக்கியமோ அதையே குறிப்பிட்டு நாலு வரியில் முடிப்பார்கள். வீண் ஸ்தோத்திரங்கள் இராது. நம்மவரோ கடிதத்தில் 'தேவரீர்' என்று ஆரம்பித்து கடிதத்தின் பாதி பக்கத்தை நிரப்பிவிடுவர். நம் நாட்டில் வீட்டுக்கு வருபவர்களைப் புருஷர்கள் எதிர்கொண்டு அழைப்பர். ஆங்கில நாட்டில் முக்கியமாகப் பெண்மணிகளே விருந்தினர்களை எதிர்கொண்டு அழைப்பர். இவ்விதம் எவ்வளவோ பேதங்கள் உள்ளன.

பழய செய்தியும் ஒரு படிப்பினை.

தென்னாப்பிரிக்கா போவர் யுத்த காலத்தில், பிரிட்டிஷ் படையொன்று எதிரிகள் வீசிய வஞ்சனை வலையில் அகப்பட்டு மோசம்போன ஸம்பவமொன்றுஉண்டு. எதிரிகளான போவர்கள் அதிக யுக்தியும் பொல்லாத குணமும் உடையவர்களாய்த் தோன்றினர். ஒரு போர்வீரன் ஆங்கிலேயரிடம் அகப்படாமல் ஓடினான். அவனைப் பிடித்துச் சிறைப்படுத்துவதற்காக 120-பிரிட்டிஷ் ஸோல்ஜர்கள் குதிரைகளின் மேல் ஆரோகணித்துச் சென்றனர். மேற்படி போவர் ஒரு குன்றின்மீதேறி ஓடினான். இவர்களும் ஏறி விரட்டினார்கள். அவன் திடீரென்று அப்பாற் குதித்து மறைந்து போனான். இவர்களும் குதித்தனர். தக்ஷணமே மூன்று பக்கங்களிலும் ஏராளமான போவர்கள் அவர்களை வளைத்துக் கொண்டு நெருப்புமாரி பொழிந்தனர். பிரிட்டிஷ் படையில் 12-பேர் இறந்து, 48-பேருக்குக் காயம் பட்டது. ஆயினும், ஆபீஸர்கள் வெகு திறமையோடு சண்டை யிட்டனர். கடைசியில் ஸாத்தியப் படாமல் தோல்வியடைந்தனர். அந்த ஒருவன் தொலைந்து போனால் போகட்டுமென்று 120-பேர்களும் சும்மா இருந்திருந்தால், இந்த ஆபத்து நேர்ந்திராதே. இவ்விதமே, குடும்பங்களிலும் அல்ப விஷயத்தை லக்ஷியம் செய்யாமல் விட்டு விடின், அதனின்றும் தோன்றக்கூடிய பெருங் கலகம் குடும்பப் பிரிவினை, விரோதம் எதுவும் பிரமாதப் படாமல் தானாகவே அடங்கி விடுமென்றோ? குற்றம் பார்க்கில் சுற்றமில்லை.

ஸமுசார வாழ்க்கையில் பீடைகளும் ஸஞ்சலங்களும் மிகுதி. அவற்றைப் பொறுக்குஞ் சக்தியும் கிடையாது.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(319-வது பக்கத் தொடர்ச்சி.)

(*Mrs. Neelakanta Sastri Rajammal.*)

அவள் உடுத்திருந்த மயில் கழுத்துக் கொரனட்டுப் புடவையும் ரோஸ் ரவிக்கையும் மிதமான வைர நகைகளும் கலைந்தும் கலையாததும் பளபளப்புமான சுருண்ட அவள் கேசமும் விசாலமான நெற்றியில் காத்திரமான குங்குமப் பொட்டும் அவளது கம்பீரத் தோற்றமும் பார்ப்பவர் மனதைக் கவர்ந்தது. அன்று அவள்தான் செல்வக்குழந்தை அபிராமனை மடியில் உட்கார வைத்துக்கொண்டு தனக்குவேண்டிய பந்து ஜனங்களும் தோழர்களும் உட்கார்ந்து கொண்டிருந்தது ஸ்ரீகிருஷ்ண பகவானை மடியில் வைத்துக்கொண்டு எசோதை வீற்றிருப்பதே போலிருந்தது. ஒருவர் அவளைக் கண்ட மாத்திரத்தில் அவளிடம் மரியாதையுடன் விச்வாஸமும் கலந்துகொள்ளும் அவளுடன் பழகி விட்டால் ஆயுள் உள்ளளவும் அவளை மறக்க முடியாமலிருக்கும். எவ்வளவு அந்தஸ்திருந்தும் கர்வம் பெருமை யென்பதறியாத கபடமற்ற அம்மங்கைக்கு அவள் காதிலும் மூக்கிலும் உள்ள விலை பெற்ற வைரங்கள் அவளுக்கு உபசரணை செய்வது போலச் சுறுசுறுப்பாகச் சுடர் விடுவது மிகவும் மனோகரமா யிருந்தது. நீலாவின் அழைப்புக் கொண்டாட்டத்தால் ஜானகியும் அவள் தாயும் அவ்வீட்டில் தாராளமாகப் பார்த்துப் பேச சமயம் வாய்த்தது. தன்னைப்பற்றிக் கவலைப்படாதே என்றும், தன் மாமியார் நாத்தனார் எதிரில் தன் பேச்சை எடுக்கக் கூடாதென்றும், தனக்கு நற்காலம் வருமளவும் தான் இருப்பதாகவே எண்ணக்கூடாதென்றும் தாய்க்கு மிக தைரியம் சொன்னாள். அவள் தாய் மிகவும் விசனத்துடன் கண்ணீர் விட்டுக்கொண்டு மகளை வாஞ்சையால் முத்தமிட்டாள். வீட்டிற்குப் போனவுடன் தாயும் மகளும் என்ன ரகசியம் பேசினீர்களோவென்று நாத்தி சீறிவிழுவளே என்று ஒருபக்கம் திகில் மிகுந்திருக்க அன்று இரவே புறப்பட்டு ஊர் போகும்படி தாயாருக்குச் சொல்லி வீட்டிற்குச் சென்றார்கள்.

இவ்விதமாக நீலாவின் பங்களாவின் பின்புறம் ஒரு சிறு கட்டத்தில் அவர்கள் குடியிருந்தார்கள். எப்பொழுது பார்த்தாலும் ஜானகியைப் பம்பரமாக ஆட்டிவைத்தபடியாகவே யிருந்தார்கள். மனோதைரியத்தை வைத்துக்கொண்டு அப்பெண் காலத்தைத் தள்ளலானாள். நீலா ஜானகியைக் கண்டபொழுதெல்லாம் மிகப் பச்சாத்தாபப்பட்டுத் தைரியம் சொல்லுவாள். நீலாவின் குடித்தனம் பல விதத்திலும் சீரும் சிறப்பும் புத்திரப் பேறும் பெற்று மிகவும் புருஷனும் மனைவியும் யாதொரு கவலையுமற்றிருந்தார்கள். நீலாவின் குணங்களோ மிகவும் அருமையானவை. எவ்வளவு கடுமையான மனிதர்களா யிருந்தாலும் அவர்களின் கெட்ட நடக்கைகளை மன்னித்து மனதில் அடக்கிக்கொண்டு அவர்களிடத்தும் அன்பாகவே பேசுவாள். அவள் புருஷன் பத்மநாபனிடத்தில் தன் உயிரையே வைத்திருந்தாள். அவன் முகம் சற்றேனும் கடுத்திருந்தால் எப்பாடு பட்டாயினும் அவனது ஸந்தோஷத்தைப் பெற முயற்சிப்பாள். தான் அவன்மீதுவைத்த நேசத்திற்கும் பிரியத்துக்கும் ஈடு உலகத்தில் எதுவுமே கிடையாது. ஆகையால் தனக்குத் தன் கணவனை மிஞ்சியது உலகத்தில் ஒன்றுமே கிடையாது. அவன் என்றும் பூர்ணாயுளாக இருக்கவேணுமென்று கடவுளை அல்லும் பகலும் அனவிரதமும் பிரார்த்திப்பாள். பஞ்ச கன்னிகைகளைப் போலத் தானும் கணவனிடத்தில் நடந்துகொள்ள வேணுமென்று அடிக்கடி உள்ளத்தில் உறுதிகொள்வாள். ஆயினும் தான் பூர்ணமாகத் தன் கணவன்மீது வைத்த ஒரு தெய்வீக சத்தியைப்போலத் தன் கணவனும் தன்மீது முழுநம்பிக்கையும் வாஞ்சையும் கொள்ள வேண்டுமென்றும் கடவுளை அடிக்கடி ஸ்தோத்தரிப்பாள். ஒவ்வொரு சமயங்களில் தன் கணவன் தன்மீது காட்டும் விஸ்வாசத்தால் அவள் உள்ளம் பூரித்துவிடும். அவள் புருஷன் பத்மநாபனும் அவள்மீது மிகுந்த விஸ்வாசங்கொண்டு கௌரவப்படுத்துவது நீலாவுக்குச் சொல்லி முடியாத ஆனந்தத்தைக் கொடுக்கத் தன்னைப்போல் பாக்கியசாலிகள் உலகத்தில் கிடைப்பதரிதென்று உள்ளம் பூரிப்படைவாள். அவள் ஸந்தோஷத்துக்கோர் எல்லையாக அவள் குழந்தை அபிராமன் பலவித விளையாட்டுகளால் அத்தம்பதிகளைக் களிக்கச் செய்துகொண்டிருந்தான். வக்கீல் பத்மநாபனுக்கோ நவீன நாகரிகங்கள் மிகப் பிடித்தமானவை. அவ்வொரு விஷயத்தில் நீலாவின் மனது வேறுபட்டு நின்றது. அவன் நவீன நாகரிகங்க

ளில் தலைதெரியாமல் கூத்தாடுவது நீலாவுக்குச் சற்று வெறுப்பா கவே யிருந்தது. நவீன நாகரிகங்களில் மிகவும் தேர்ச்சிபெற்ற அமிர்தவல்லி என்னும் ஒரு பெண் நீலாவுக்கும் பத்மநாபனுக்கும் மிக வேண்டியவளா யிருந்தாள். தினம் ஒருமுறை நீலாவின் குழந் தையைக் காணுமல் இருந்ததில்லை. அவர்களிடம் அவ்வளவு அபி மானம் வைத்திருந்தாள். அப்பொழுது தான் பத்தாவது வகுப்பு பாஸ் செய்த ஸந்தோஷ ஸமாசாரத்தை இவர்களிடம் சொல்லிக் கொள்ள மிகவும் அவஸரமாக நீலாவின் வீட்டிற்கு வந்தாள். அச் சமாசாரங் கேட்ட நீலா மிக ஸந்தோஷப்பட்டாள். பத்மநாபன் அவ்விடம் இல்லாததால் ஸந்தோஷ ஸமாசாரங் கொண்டுவந்தும் முதலில் அவரிடம் சொல்லி ஆனந்தப்பட முடியவில்லையே யென்று அப்பெண் கவலையோடிருந்தாள். அவள் வருகைக்குப் பத்மநாபன் அறையில் சென்று அங்குள்ள பீரோவைத் திறந்து ஒரு புத்தகத் தைக் கையில் வைத்துக்கொண்டு ஒய்யாரமாகப் படிக்க ஆரம்பித்து விட்டாள். கொஞ்சநேரங்கழித்து ஒரு வாலிபன் வர அமிர்தவல்லி புன்சிரிப்புடன் அவனை வரவேற்று உட்காரச் சொல்லிவிட்டு நீலா விடம் வந்து நீலா மாமா வரும்வரையிலிருக்கலா மென்றிருந்தேன். அதற்குள் என் நண்பரொருவர் என்னைத் தேடிக்கொண்டு வந்து விட்டார். நான் போய்வருகிறேன்; அவர் வந்தால் சொல்லிவிடு என்று அவள் பதிலை எதிர்பாராமலே ஆயிரத்தெட்டு குலுக்குகள் குலுக்கிக்கொண்டு தன் நண்பனை அழைத்துக்கொண்டு வெளியே சென்றுவிட்டாள். கொஞ்சநேரங் கழித்துப் பத்மநாபன் வெளியி லுள்ள அலுவல்களை முடித்துக்கொண்டு வீடு வந்தான். அவன் வருகையை உணர்ந்த நீலா அவனுக்கு வேண்டிய உடுப்பு முதலிய வைகளும் ஸாயங்காலமானதால் ஸந்தியாவந்தனம் செய்யத் தீர்த்த மும் எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள். அவைகளைக் கண்ட அவள் புருஷன் என்ன நீலா நீ ஏன் இந்த வேலைகளைச் செய்யவேண் டும்? ஆட்கள் நம் வீட்டில் எத்தனை பேர் இருக்கின்றனர். நான் சந்தியாவந்தனம் பண்ணுவது தட்டுக்கெட்டுப் போகிறதாக்கும். மிக அவஸரமாக வேலை செய்கிறாயே?

நீலா:—அதென்ன அப்படிச் சொல்லலாமா. எத்தனை வேலைக் காரரிருந்தாலென்ன, உங்கள் பணிவிடைகளை நானே செய்தால்தான் எனக்குத் திருப்தியாயிருக்கும். அதுதான் பெண்களின் தர்மம். நாங்கள் செய்யும் பணிவிடைகளை ஏற்றுக் காலந்தவறாமல் நீங்கள்

உங்கள் கடமைகளைச் செய்யவேண்டியது. அதுதான் குடும்பத்தின் அழகு.

பத்மநாபன்:—ஆமாம் ஏதோ பழங்கதைகளை எல்லாம் அளக்க வந்துவிட்டாய்.

நீலா:—அய்யோ இதெல்லாம் பழங்கதையாமா? எல்லாம் நம்முடைய நன்மைக்காகவன்றோ ஏற்பட்டது. இந்த விஷயங்களை எல்லாம் மட்டும் நீங்கள் புறக்கணிப்பது எனக்குப் பெருங்கவலையா யிருக்கிறது.

பத்மநாபன்:—எதற்கெடுத்தாலும் சாஸ்திரம் வழக்கம் என்று எப்பொழுது பார்த்தாலும் சொல்லிக்கொண்டிருக்கிறாய். அந்த சாஸ்திரங்களின் தலையில் கல்லைக்கட்டி ஆழத்தில் எறிந்துவிட்டேன். நீ மட்டும் இன்னம் உன் பட்டிக்காட்டை விடமாட்டாய்போலிருக்கிறது.

நீலா:—என் பட்டிக்காடுதான் நல்லதாகத் தெரிகிறது. இந்தப் பட்டணம் மிகவும் மோசமாகத் தெரிகிறது. ஒவ்வொருவருடைய நடக்கைகளையும் மாற்றப் பட்டணம் விஷம்போன்றது.

பத்மநாபன்:—இந்த ஊரிலுள்ள ஒவ்வொரு பெண்ணையும் பார். உன்னைப் போலத்தான் சுத்தக் கர்நாடகமா யிருக்கிறார்களாக்கும்.

நீலா:—நானென்ன செய்வேன். அநேகம் பெண்கள் என்னைப்போலக் கர்னாடகமாகத் தானிருக்கிறார்கள். சிலர் மிகுந்த புது நாடகமாகத் தானிருக்கிறார்கள். அவர்களுடன் பேசுவதற்குக்கூடப் பயப்படுகிறேன். எனக்குப் பிடிப்பதில்லை. என் பிறவிக்குணம் அப்படி ஏற்பட்டுவிட்டது.

பத்மநாபன்:—அதைத்தான் நீ நன்றாக மாற்றிவிடவேண்டும். அமிர்தவல்லியைப் பார். அவள் எவ்வளவு நன்றாகப் பேசவும் பழகவும் கற்ற புத்திசாலியா யிருக்கிறாள்.

நீலா:—ஆமாம், அவள் புத்திசாலித்தனம் உங்களுக்கு மிகவும் பிடித்தமாகவா யிருக்கிறது? உங்கள் எண்ணம் அப்படியிருக்காதென்றல்லவோ நான் நினைத்தேன்.

பத்மநாபன்:—ஏன் அவளைக் கண்டால் யாருக்குத்தான் பிடிக்காது. பாவம் அனுதரவானவள்; மிகுந்த ஸாமர்த்தியசாலி; மிகுந்த நாகரீகம் கற்றவள்; கொஞ்சமாவது ஸங்கோசம் என்ற பூச்சுமிரட்டில்லாதவள். உனக்கவளைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கிடையாதா என்ன? (தொடரும்.)

" அமிர்த குணபோதினி "

பவஹுலத்திய ஆவணி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
				[மாண்டு, சூரிய ஷஷ்டி.
சி-அ	16	1	வியா	ஷஷ்-42-3, சித்-15-38, ஸிம்மரவி 19-5 கொல்ல
சி	17	2	வெ	ஸப்-41-4, ஸ்வா-17-4, கரிநாள்.
சி	18	3	சனி	அஷ்-38-28, விசா-16 52.
ம	19	4	ஞா	நவ-34-24, அநு-15-10.
சி	20	5	திங்	தச-28-54, கேட்-11-55, திருவையார் தெப்பம்.
அ-சி	21	6	செவ்	ஏகா-21-58, மூல-7-24, ஸர்வைகாதசி. திதி துவயம்.
அ-சி	22	7	புத	துவா-14-6, பூரா-1-49, உப-53-39, பிரதோஷம்,
				[பூராடம். அசுபம், தோப்புவைக்க.
சி	23	8	வியா	திர-5-32, உப-51-8, ஸ்ரீவ-48-44, ஸிம்மஸ்ரீவணம்,
				[ருக் உபாகர்மம் கன்யாயனம் 50-4, கரிநாள்.
சி	24	9	வெ	○-47-49, அவி-41-49, வரலக்ஷ்மி விரதம், யஜு
அ-ம	25	10	சனி	பிர-39-19. சத-35-17. [ருபாகர்மம்.
சி-அ	26	11	ஞா	துவி-31-33, பூட்-29-28.
சி	27	12	திங்	திரி-25-0, உட்-25-35, கஜ்ஜலி திரிதியை.
சி	28	13	செவ்	சது-20-9, ரே-21-57, திதி துவயம்.
ம-சி	29	14	புத	பஞ்-17-2, அசு-20-45.
சி-ம	30	15	வியா	ஷஷ்-15-16 பர-20-51, கிருத்திகை விரதம்.
சி-ம	31	16	வெ	ஸப்-16-38, கிரு-24-12, கோகுலாஷ்டமி.
அ-சி	1	17	சனி	அஷ்-19-37 ரோ-28-51, அதிதி, மடஸ்ரீஜயந்தி.
சி	2	18	ஞா	நவ-24-6. மிரு-35-5.
சி-அ	3	19	திங்	தச-29-50, ஆரு-42-21.
சி	4	20	செவ்	ஏகா-36-17, புந-50-9.
சி	5	21	புத	துவா-42-52. பூச-57-59.
சி	6	22	வியா	திர-49-8, ஆயி-60-0.
ம	7	23	வெ	சசி-54-44, ஆயி 5-27.
அ-சி	8	24	சனி	●-59-25, மக-12-17.
சி-அ	9	25	ஞா	பிர-60-0, பூர-18-8, மௌன விரதம்.
சி	10	26	திங்	பிர-3-4, உத்-22-58, கல்கி ஜயந்தி. [விரதம்.
சி	11	27	செவ்	துவி-5 35. ஹஸ்-26-42. ஸாமோபாகர்மம். ஷோடச
சி	12	28	புத	திரி-7-2, சித்-29-21, கரிநாள், விநாயக சதுர்த்தி.
அ-சி	13	29	வியா	சது-7-20, ஸ்வா-30-53, ருஷி பஞ்சமி.
சி	14	30	வெ	பஞ்-6-29, விசா-31-20, சம்பா ஷஷ்டி.
சி	15	31	சனி	ஷஷ்-4-32, அநு-30-42, ஷஷ்டி விரதம்.

(Vertical labels in the date columns: ஆகஸ்டு 5—8 beside Tamil dates 3–7; செப்டம்பர் beside English dates 3–6.)

சனி	15உ-உதயத்திற்கு ராசி		குஜ சு-கே
ராகு			ர-பு
			குரு

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone,
At the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.